கழக வெளியீடு: ௬௭௨

# திரு. வி. கலியாணசுந்தரனர்

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

ஆசிரியர்:

திரு. புலவர் 'அரசு'

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி, :: சென்னை-1.

First Edition : Nov., 1953.
Reprint : Nov., 1956.

THIRU. V. KALIYANASUNDARANAR

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office:*

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.—C. 1100.

# பதிப்புரை

செந்தமிழ் நாட்டின் தவப்புதல்வர் திரு. வி. கலியாணசுந்தரனார். அவர் வாழ்வு தமிழ்வாழ்வு; அவர் தமிழகத்துக்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன; அவர்தம் வரலாறு அமிழ்தினும் இனிது.

உளதாகும் சாக்காடுற்ற திரு. வி. க. அவர்களின் வரலாற்றுப் புகழுடம்பே இந் நூல். இதன்கண் அவர்தம் குழந்தைப்பருவம் துவங்கி முதுமையுற்றுக் கனிந்ததுவரை அழகிய இனித்த தமிழில் இவ் வரலாறு மலர்கின்றது.

இதனைச் செப்பனிட்டு ஆக்கியுதவியவர் திரு. புலவர் 'அரசு' அவர்கள். அதனைத் 'திரு. வி. கலியாண சுந்தரனார்' என்னும் பெயருடன் நன்முறையில் அமைத்து வெளியிட்டுள்ளோம். இந்நூலைச் சுவைத்து மகிழ்ந்து தமிழுலகம் திரு. வி. க. அவர்கள் குறிக்கோளின் வழிப்படர்ந்து நற்பணியாற்றுமென நம்புகின்றோம்.

இதனைப் பள்ளிகளில் துணைப்பாட நூலாக அமைத்துதவுமாறு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களையும், தமிழாசிரியர்களையும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | தோற்றுவாய் | .... | 1 |
| க. | பிறப்பு | .... | 4 |
| உ. | கல்வி | .... | 13 |
| ௩. | குடும்பப்பணி | .... | 31 |
| ச. | நாட்டுப்பணி | .... | 43 |
| ரு. | நூல்கள் | .... | 91 |
| சா. | சிறப்பியல்புகள் | .... | 117 |
| எ. | பிற்காலம் | .... | 127 |



திரு வி. கலியாண சுந்தர முதலியார்

| தோற்றம் : | மறைவு : |
|---|---|
| **26—8—1883** | **17—9—1953** |

UNIVERSITY EXTENSION LIBRARY MADURAI

# திரு. வி. கலியாணசுந்தரனர்

## தோற்றுவாய்

உலகம் பெரிது. உலகிலே தோன்றும் மக்களும் எண்ணிக்கையில் ஒடுங்காதவர். கடற்கரை மணலை எண்ணினும் எண்ணலாம், உலக மக்களை எண்ணிவிட முடியாது. பிறப்பதும் இறப்பதும் நொடிதொறும் நொடிதொறும் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றன. எனினும், இம் மக்களிலே எத்துணையர் வாழ்ந்தோரெனப் படுவோர்? பிறந்தார், வாழ்ந்தார், இறந்தாரென்பதன்றி என்றும் நின்று நிலைபெற்ரோர் எத்துணையர்? உலகப் பேரேட்டிலே பொன்னெழுத்தாலே பொறிக்கப் பட்டோர் எவ்வளவினர்? புலவர் பாடும் புகழிலே நிலை பெற்ரோர் எவ்வளவினர்? பெறுதற்கரிய மக்கட் பிறப்பை அடைந்தும், பிறந்த பயனை அறியாமல் இழந் தோர்போகத் தம் கடனையறிந்து கடனாற்றி மக்களின் கருத்திலே கவினுற விளங்கினேர் எவ்வளவினர்? ஊனுடலின் பிறப்பு வளர்ப்பு வாழ்வு இறுதிகளை அறிவிக் காமல் உணர்ச்சியுடன் தொண்டியற்றினேர் எத்தனை பேர்? தொண்டே தமது உருவமாக மக்கள் உள்ள ஏட்டிலே, நிற்போர் எவ்வளவினர்? நூலின் பக்கங் களிலே ஒளிபெற வீற்றிருக்கும் உயர்வினேர் எவ்வளவினர்? உலகிலே தோன்றியழிந்த மக்களின் எண் ணிக்கையிலே ஆயிரங்கோடிக் கொருவராகவேனும் எண்ணப்படுவரோ?

தம் மரபுவிளங்க மக்களைப் பெற்றெடுக்கும் பெற்றோர் எவ்வளவு கருத்துடன் மக்களைக் காக்கின்றனர்! ஒவ்வொரு தாயும் தம் மக்களைக் கண்ணின்மணியெனக் காத்து வருகின்றனர்; நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கின்றனர். தம் குலக் கொழுந்துகளைப் பெரியவர்களாக்கி விடும்வரை பெற்றோர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியும் படுந் துன்பமும் அளவில் அடங்குமோ? தம்மைப் பெற்றெடுத்து வளர்த்துவிட்ட அன்னைக்குக் கைம்மாருக ஒவ்வொரு மகவும் என்ன செய்வர்? இவ் வுலகத்தையே கொடுத்தாலும் ஒவ்வாதென்பர் பெரியோர். அங்ஙனமாயின் தாயரின் அன்பினுல் வளர்ந்த ஒவ்வொருவரும் என்ன செய்கிருர்கள்? தம் மரபு விளங்கத் தந்தை தாயர் பெயர்களையும் பாட்டனுர் முன்னேர் பெயர்களையும் விளக்க என்ன செய்து வருகின்றனர்? ஓயாதுழைத் துழைத்துத் தம் ஒருசாண் வயிற்றையும் மனைவி மக்களையும் காப்பதையன்றி ஒன்றும் இயற்றிலர். தம் அருகே வாழும் மக்களுக்கும் தாம் இன்னுர் என அறியும் நிலையில் நில்லாராய்ப் பனித்துளி கடுங் காற்றினுலே சிதறிக் கதிரவன் ஒளியாலே ஆவியாகப்போய் மறைந்துவிடுவதுபோல மறைந்துவிடுகின்றனர்! இதுதானே மரபு விளக்கம்? தந்தை இறந்தநாளிலே தாயார் இறந்த நாளிலே ஒவ்வோராண்டும் புரோகிதன்முன் அன்னுர் பெயர்களையும், பாட்டன் பாட்டியார் பெயர்களையும் உரைத்து எள்ளுந் தண்ணீரும் விட்டால்மட்டும் மரபு விளங்கிவிடுமா? அவரவர் தத்தம் சமயச் சடங்கின்படி மணத்தையும் பிணத்தையும் முடிப்பதுமட்டும் மரபு விளக்கச் செயலாகுமா? தந்தையின் பெயரைத் தானே சொல்வதுதான் மகன் கடமையா? மகள் கடமையா?

"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்பதன்றோ வள்ளுவர் வாய்மொழி? எனவே,

"தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்றாங்குப் பிறந்த பயனை அடைய உழைத்துப் புகழுடம்பு பெறுவோரே பிறந்தோராவர். எனினும், புகழுடம்பையே விரும்பிப் பணி புரிவோர் புகழுடம்பு பெறுதற் குரியோரல்லர். புகழுடம்பை விரும்புவது தன்னலமாகும். இக் கருத்தைக்கொண்டே,

'இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்'

என்றார் முன்னோர் ஒருவர். பணியிலே கருத்தின்றிப் புகழிலே கருத்தொன்றின் பணியின் பெருமை குன்றுவதியற்கையே.

இற்றைக்குச் சுமார் நாற்பதாண்டுகட்கு முன்னர் அரசியல் நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டிலே தமிழிற் பேசவோ எழுதவோ இயலாதென எண்ணினர். அரசியற் பெரியார்கள் ஆங்கிலத்திலே அன்றித் தமிழிலே பேச வராதென்பதைப் பெருமையுடன் கூறினர். அக்காலத்திலே எழுதிப் பேசிக் காட்டிய பெரியார் திரு. வி. கலியாண சுந்தரனார். அப் பெரியார் தொழிலாளர் தலைவராகவும், புலவரேறாகவும், அரசியல் அறிஞராகவும், சம நோக்குடைய சமயச் சீரியராகவும், ஒழுக்கம் நிறைந்த உத்தமராகவும் விளங்கினார் புகழுடம்புடன் நிலைபெற்ற அப் பெரியாரின் வரலாறு தமிழ்மக்களுக்கு வழிகாட்டும் பேரொளியாக விளங்கும்.

# க. பிறப்பு

### முன்னோர்

திரு. வி. க. என்பது திருவாரூர் விருத்தாசல முதலியாரின் திருமகனார் கலியாணசுந்தரனார் என்பதைக் குறிக்கும். இப் பெரியாரின் முன்னோர் திருவாரூர் வாழ்க்கையினர். சோழிய வேளாண் மரபினர். திரு வி. க. பாட்டனார் வேங்கடாசல முதலியார் ஆங்கிலப் பயிற்சி பெற்றதன் பயனாக 'ஹிக்கன்ஸ் அண்டு கம்பெனி'யில் அலுவலாற்றச் சென்னை இராயப்பேட்டையில் புதுப் பேட்டை என்னும் ஒரு பகுதியிலே குடியேறினார். வேங்கடாசல முதலியாருக்கும் வள்ளியம்மையாருக்கும் பிறந்த பிள்ளைகள் நமசிவாய முதலியாரும் விருத்தாசல முதலியாரும் ஆவர்.

### பிறப்பு

நமசிவாய முதலியாருக்கும் மயிலம்மையாருக்கும் குமரவேல், இராஜா, சோமசுந்தரம் என்போர் பிறந்தனர். விருத்தாசல முதலியார் முதலில் தம் தமையனாரின் மனைவிக்குத் தங்கையான பச்சையம்மை என்பவரை மணந்தார். அவர் வயிற்றில் சதாசிவம், துரைசாமி, விஜயரங்கம், அம்மணியம்மாள் என்போர் பிறந்தனர். இவர்கள் பிறந்தபிறகு பச்சையம்மையார் காய்ச்சல் நோயால் இறந்தார். பின்னர் இரண்டாம் மனைவியாக மரக்காணம் வேங்கடாசல முதலியார் புதல்வி சின்னம்மாளை மணந்தார். சின்னம்மாள் வயிற்றிலே முருகேசன், அம்மணி, தாயார், விருத்தாம்பாள், உலகநாதன், கலியாண சுந்தரன், பூஷணம் என்போர் பிறந்தனர். முருகேசன், விருத்தாம்பாள் என்போர் குழந்தைப் பருவத்திலேயே இறந்து விட்டனர்.

நமசிவாய முதலியார் ஆங்கிலங் கற்று 'ஹிக்கன்ஸ் அண்டு கம்பெனி'யில் அலுவல் ஆற்றப் புகுந்து, படிப் படியாக உயர்ந்து தலைமைக் கணிதரானார். விருத்தாசல முதலியாருக்குத் தமிழ்ப்பற்று மிகுதி. அவர் இசையி லும் நாடகத்திலும் சிறப்புற்றார். இராமநாடகப் புலவ ரென அவரைக் கூறினர். வாழ்க்கைக்கு அரிசி மண்டி வைத்து வணிகம் புரிந்தார். புதுப்பேட்டையிலே ஒரு சிறு பள்ளிவைத்துத் தமிழ் கற்பித்தார். தமிழ்க் கீர்த் தனைகள் இயற்றினார். இவ்வாறு இவர் வாழ்க்கை நடைபெற்றது.

விருத்தாசல முதலியார் தம் முதன்மனைவியை இழந்து, இரண்டாம் மனைவியை மணந்து முதல் நான்கு குழந்தைகளைப் பெற்ற பின்னர், மூத்தமனைவியின் மக னார் சதாசிவ முதலியாரிடம் அரிசிமண்டியை ஒப் படைத்துவிட்டுச் சென்னைக்கு மேற்கேயுள்ள செம்பரம் பாக்கம் ஏரியை மராமத்துச் செய்யும் பணியாளருள் ஒருவராகச் சென்றார். அப் பணி முடிந்த பிறகு, செங் கற்பட்டு மாவட்டத்தில் சைதாப்பேட்டைத் தாலுக்கா வில் நூம்பலுக்கும் செட்டியாவரத்துக்கும் நடுவே உள்ள துள்ளம் என்னும் சிற்றூரிலே குடியேறினார். இவ்வூர் பூவிருந்தவல்லிக்கு மூன்று கல் தொலைவில் உள்ளது.

துள்ளத்தில் அரங்கசாமிபிள்ளையென்பவரின் நிலத்திலே பனையோலை வேய்ந்த ஒரு சிற்றில்லம் குடி யிருப்புக்கும், அவ்வூர்க் குளக்கரையிலே ஓர் ஆலின் அடி யில் ஒரு குடில் வணிகத்துக்கும் என அமைத்து விருத்தா சல முதலியார் தம் வாழ்வைத் தொடங்கினார். ஆல மரத்தடியிலே வைத்தகடை பொறாமையாளரால் எரிக் கப் பட்டது. பிறகு, வீட்டிலேயே கடைவைத்துக்

கொண்டார். வணிகம் வளர்ந்தது; பொருளும் சிறிது சேர்ந்தது; நிலபுலன்களும் வாங்கினார்.

துள்ளத்திலேதான் உலகநாத முதலியாரும் கலியாணசுந்தர முதலியாரும் பிறந்தனர். விசு ஆண்டு ஆவணித் திங்கள் உகூ (12—9—1881) ஆம் நாள் பரணியில் உலகநாதர் பிறந்தார். சுபானு ஆண்டு, ஆவணித் திங்கள் கக (26—8—1883) ஆம் நாள் மிருகசீரிடத்தில் கலியாணசுந்தரனார் பிறந்தார். இவருக்குப் பின் ஏழாம் பேருகப் பூஷணம் என்னும் பெண் மகவும் எட்டாம் பேருக ஓர் ஆண் குழவியும் பிறந்தனர். எட்டாவது குழந்தை பிறந்தவுடனே மறைந்தது.

குழந்தைமை

கலியாணசுந்தரனார் ஆருவது மகவு. இவருடைய வலக்காலடியிலே ஆருவது விரல் இருந்தது. மற்றும் நாலும் ஐந்தும் ஆறும் பிரிவின்றி ஒன்றியும் இருந்தன. 'ஆருவது பிள்ளை ஆனைகட்டி வாழும்' என்பது பழமொழி. இவர், தம் வாழ்க்கைக் குறிப்பிலே, "ஆருவது பிள்ளையாகிய எனக்கு என்ன அதிருஷ்டமிருக்கிறது? யான் ஆனைகட்டி வாழ்ந்தேனா? வாழ்கிறேனா? யான் தலைமைபூண்ட மாநாடுகளிலே நடந்தேறிய ஊர்வலங்கள் சிலவற்றிலே யானையும் அசைந்து நகர்ந்ததுண்டு. இது யானைகட்டி வாழ்ந்ததாகுமா? ஆருவதல்லாதார் ஊர்வலங்களிலும் யானை அசையாமலில்லை. ஆகவே, தொடர்பு எனக்கு விளங்கவில்லை," என்று வரைந்துள்ளார். இந்த ஆராய்ச்சி நமக்கு வேண்டுவதில்லை. கலியாண சுந்தரனார் யானை கட்டி வாழும் செல்வமுடையவராயிருக்கவில்லை யென்பது உண்மையே. எனினும், யானை கட்டிவாழும் செல்வருக்கும் இல்லாத தனிச்சிறப்பை

எல்லாத் துறையிலும் பெற்றுத் தமிழ்ச்செல்வராகத் தமிழ் நாட்டிலே தனியரசு பெற்றுவிட்டார் அல்லரோ?

உலகநாதரைப் பெரியசாமி யென்றும் இவரைச் சின்னசாமி யென்றும் வீட்டிற் செல்வப் பெயரிட்டு அழைப்பர். இவருடைய சாதகக் குறிப்பு இவர் எழுதிய வரலாற்றுக் குறிப்பிலே உள்ளது.

நாட்டுப்புறம் இயற்கைச் சூழலுடையது. பொழி லும் வயலும் பசுமையும் மிளிரும் இயற்கைக் காட்சி யிலே சின்னசாமியின் குழந்தைப் பருவம் ஒன்றி வளர்ந் தது. நீண்டநாள் தாய்ப்பால் பருகினர். 'பீரம்பேணி பாரந் தாங்கும்' அன்றோ? பெற்றோரின் செல்வத்தை விட அன்னையைப் பெற்ற பாட்டனார் பாட்டியாரின் செல்வமே இக் குழந்தைகளுக்குக் கிடைத்தது. அவர் கள் வாங்கிவரும் பொருள்களுக்கு இருவரும் போட்டி யிடுவர். சின்னசாமிக்கே வெற்றி கிடைக்கும்.

துள்ளம் என்ற அச் சிற்றூர் தூறுகள் மிடைந்த சூழலுடையது. பனையோலை வீட்டில் இவர்கள் இருந்த தாற் பாம்புகளுக்குக் குறைவில்லை. இவருடைய குழந் தைப் பருவம் அவற்றுடன் பழகியதென்றே சொல்ல லாம். ஒருமுறை வீட்டுக்கொல்லையிலே இரண்டு பாம்புகள் இருளர்களாற் பிடிக்கப் பெற்று வீடுதோறுங் காட்டப் பெற்றன. வீடுதோறும் இருளருக்கு இனும் கிடைக்கும். சின்னசாமி அப் பாம்புகளை இருளரைப் போலவே பற்ற விரும்பினர். தந்தையார் இடங்கொடுப் பரோ? வீடுதோறும் இவரும் சென்றார். ஒரு வீட்டிலே பாம்பின் வாலைத் தம் காலால் மிதித்து மகிழ்வுற்றார். இவருக்குப் பாம்புகளை அடித்துக் கொல்வதில் ஆர்வம்.

ஆனால், அடிக்க அஞ்சுவர். மற்றோர் பாம்புகளை அடிக்கும்போது இரங்குவர் ?

இவர்கள் வீட்டுக்கு அருகே ஒரு குளம் இருந்தது. தந்தையார் அக் குளத்துக்குப் போகும்போது இவரும் உடன் போவது வழக்கம். அங்கே ஆலமரத்தடியிலே மாடுகள் கூட்டங் கூட்டமாக நிற்பதும் கிளிகள் அம் மரத்திலிருந்து கத்துவதும் ஏற்றப்பாட்டொலியும் இவரை வசப்படுத்தும். பலர் அக் குளத்திலே நீந்திக் கரைக்குக் கரை செல்வதைக் காண்பார். அதற்கு நீந்து தல் என்னும் பெயரிருப்பதையே அறியாத இவருக்கும் நீந்துவதில் ஆர்வம் எழும். ஒருமுறை தந்தையார் இவரைக் கரையிலே இருத்திவிட்டுத் தண்ணீரில் முழுகிக் குளித்துக் கொண்டிருந்தார். தந்தையார் அறி யாத முறையிலே இவரும் கழுத்தளவு நீர்வரை இறங்கி விட்டார்! ஏற்ற மிறைப்போர் இட்ட கூக்குரலாலே தந்தையார் உணர்ந்து குழந்தை முழுகுமுன் தூக்கிக் கரைக்குக் கொணர்ந்தார். அப்போது தந்தையார் கடிந்ததாலும் நேர்ந்த அச்சத்தாலும் அப்புறம் இவர் குளத்தில் இறங்குவதே இல்லை. இவருடன் விளையாடும் தோழர்கள் வற்புறுத்தினாலும் அப்பக்கமே செல்வ தில்லை. பிள்ளைகள் தவறு செய்யும்போது பெற்றோர் கடிவது பிள்ளைகள் திருந்துவதற்கு வழியாகும்.

இவருடைய பிள்ளைமைப் பருவத்தே நடந்த மற்றொரு நிகழ்ச்சி இவருக்குப் பெரிதும் ஊறு விளை விப்பதாயிருந்தது.

ஒருமுறை சிறுவர்கள் விட்ட காற்றாடி, கயிறு அறுபட்டுக் காற்றிலே அசைந்துகொண்டே வந்து இவர் வீட்டுத்தோட்டத்திலிருந்த ஒரு கொன்றைமரத்திலே

சிக்குற்றது. சிறுவர் பலர் முயன்றேறினர். கிளைகள் முறிந்தன. ஏறினோர் ஏற இயலாது இறங்கிவிட்டனர். சின்னசாமி தம் தோழர்களுக்குத் துணைபுரிய மரத்தில் ஏறினர். சிறுவராகையாற் கிளைகள் முறிவுபெற வில்லை. அடுக்கடுக்காக இருந்த கிளைகளைப் பற்றி மகிழ்வுடன் தாவி ஏறினர். காற்றாடி நூலைப்பற்றக் கையை நீட்டினர். அதுவுங் காற்றாலலைப்புண்டு கைக் குக் கிட்டிய நிலையில் அலைந்தது. அப்போது நிகழ்ந்தது என்னை? அடா! அடா! என்ற பதறிய குரல் சின்ன சாமிக்கு அச்சத்தை ஊட்டியது; மெய்யில் அறைந்தது போல நடுக்கத்தை ஊட்டியது. கைகளும் கால்களும் நிலை தவறின. நூல் மறைந்தது; கிளை விடுத்தது; வீழ்ந்தார்! கிளைகளின் மேல் விழுந்து விழுந்து தட்டித் தட்டித் தரையில் விழுந்தார்! அடிபட்டதுந் தெரியாமல் அச்சமொன்றே பிடர்பிடித்துந்த எழுந்தோடினர்! அரு கிலிருந்த குழியிற் குதித்துப் பதுங்கினர். பிறகே, தம் மேனியிலே குருதி பெருகுவது கண்டார்! மெய்ம்மறந்து வீழ்ந்தார். முறிந்திருந்த குறைக்கிளைகளில் ஒன்றின் கூரிய முனை இடப்பக்க விலாவிலே அக்குளிலிருந்து இடைவரை கிழித்திருந்தது. மற்றும் பல இடங்களிற் காயம்! தாயார் இட்ட கூச்சலால், மக்கள் கூட்டம் பெருகியது. தந்தையார் ஓடிவந்தெடுத்துத் தோளில் அணைத்துச் சென்று ஒரு பாயிற் கிடத்தினர். தாயும் தந்தையும் தமக்கையும் தமையனும் அழுதனர். விழித்து நோக்கிய இவரும் அழுதார். நாட்டு மருத்து வர் ஒருவர் பச்சிலைச் சாற்றைப் பிழிந்து, அந்த இலையை அரைத்துப் பூசினர். ஒரே எரிச்சலாக இருந்ததாற் கதறினர் சின்னசாமி. அன்னை அளித்த காய்ச்சிய பாலைப் பருகிச் சிறிது ஓய்ந்து தூங்கினர். இச் செய்தி

சென்னைக்கு எட்டியது. பாட்டனாரும் பாட்டியாரும் துடிதுடித்தோடி வந்தனர். அவர் பட்ட துயர் அளப்பிலது. பெரிய தந்தை மகனார் இராஜா முதலியார் ஓய்வெடுத்துக்கொண்டு துள்ளத்திலேயே தங்கித் தம் தம்பிக்குப் பணிபுரிந்தார். பத்துநாட்கள் கழித்துக் குணங் கண்டது. இடப்பக்கவிலாவின் கீறல் வடு இறுதிவரையிலும் நிலைத்தது.

தமிழ்நாடு செய்த தவத்தால் அக் கொடிய இடுக்கணிலிருந்து நம் தமிழ் முனிவர் தப்பினார் எனல் வேண்டும். நடக்கும்போது கல் தடுக்கி விழுந்தவர்களிலும் மரணமடைவோருண்டு. கை கால்கள் முறிவின்றியும் ஒரு கீறலைமட்டும் குறிசெய்து விலகிய அக் கண்டம் நிகழ்ந்ததற்குக் காரணம் அவர்தம் அன்னையார் செய்த ஓசையே. அன்னையாரிடம் உண்டான அச்சமே நடுக்குறுத்தி வீழ்த்தியது! வீழ்ந்தவுடன் எழுந்து ஓடவும் செய்தது! பெரும்பாலும் எல்லா அன்னையரும் தம் குழந்தைகளை வளர்க்கும் முறை இப்படியே. இம்முறை தவறு.

நூம்பல் ஒரு ஜாகீர் கிராமம். அந்நாளில் ஓர் ஆங்கிலோ இந்தியரிடம் அது இருந்தது. அக் கிராம அமீனா முனிசாமிபிள்ளையிடம் எல்லோருக்கும் அச்சமுண்டு. நண்பருக்கு உயிரையும் நல்குபவராயும் பகைவரிடம் இரக்கமின்றி நடப்பவராயும் இருந்த அவரை நூம்பலைச் சூழ்ந்த பத்துக் கிராமத்தினரும் மதிப்புடன் வரவேற்பர்.

ஒருமுறை அவர் வண்டி துள்ளத்திற்கு வந்தது. வண்டியைக் கண்டதும் வயதிற் பெரியவர்கள் எழுந்து நின்றனர். இளைஞர்கள் விலகி நின்றனர். பெண்கள்

வீடுகளில் மறைந்தனர். குழந்தைக்கூட்டம் 'அமீனு! அமீனு!' என்று பறந்தோடியது. குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டிருந்த குழந்தை சின்னசாமி, 'அமீனு! அமீனு! என்று ஏன் ஓடுகிறீர்கள்? அமீனுவுக்குக் கொம்பா முளைத்திருக்கிறது?' என்று கூவினார்; ஓடாமலும் நின்றார். முனிசாமி பிள்ளை இக் குழந்தையின் துணிவுக்கு வியந்து, இறங்கிவந்து, விருத்தாசல முதலியாரின் குழந்தையென அறிந்து, கையைப் பிடித்து அழைத்துச்சென்று தந்தையினிடம் விட்டு, 'முதலியாரே! இச் சிறுவன் சமர்த்தன், இவனிடம் நல்ல முகக்களை யிருக்கிறது. இவனை நன்றாக வளர்த்துக் கல்வி கற்பிக்கவேண்டும். இவன் வயதிலே பெரிய மனிதனுவான்.' என்றார். தந்தையார் மகிழ்ந்தார். தாயார் கட்டியணைத்துக் கண்ணேறு கழித்தார். காரணமற்ற அச்சம் இவர் வாழ்வில் எப்போதும் இருந்ததில்லை.

சிறுவர்கள் பொன்வண்டு பிடித்துக் கழுத்திற் சுருக்கிட்டுப் பறக்க விடுவதை இவர் வெறுப்பார். அவர்களிடமிருந்து அதனை மீட்டுப் பறக்க விடுவார். அதனுற் பிள்ளைகள் இவரிடம் சண்டையிடுவர். எனினும், நாளடைவில் இவரெதிரே பொன்வண்டு பிடிப்பதை விட்டுவிட்டனர். இவருடைய சிறந்த பண்புகளில் இரக்கமும் ஒன்றுகியது.

"விளையும் பயிர் முளையிலே" என்பர். குழந்தைப் பருவத்திலிருந்தவாறே வாழ்க்கையிலெல்லாம் இருத்தல் உயர் பண்பாகும். ஆனுல், இந்நிலை எல்லோர்க்கும் எய்துவதில்லை. கலியாணசுந்தரனுர் தம் வாழ்க்கைக் குறிப்பிலே,

"குழந்தைமைக்கும் முதுமைக்கும் இடைப்பட்டது சோதனைக் குரியது. சோதனையைக் கல்வி அறிவு ஒழுக்கங்களாலே கடந்து தம்மைப் பண்படுத்திக்கொள் வோர் மீண்டும் குழந்தைமை எய்துதல் எளிது; தம் மைப் பண்படுத்திக் கொள்ளாதார் மீண்டுங் குழந்தைமை எய்துதல் அரிது. அந்நிலைக்கும் இந்நிலைக்கும் வேற்று மையுண்டு. அது மாசினைக் கடப்பது; இது மாசினுள் நுழைவது. அந்நிலை எய்தினவரே பெரியோர் எனப் படுவர். அவரே அறவோர்; அந்தணர். அவர் தாம் பெற்ற நிலையை உலகுக்கு அறிவுறுத்துவர்," என்று குறிப்பிட்டிருப்பதை நோக்குக!

# ௨. கல்வி

**பள்ளிக்கல்வி**

துள்ளம் கிராமத்தில் விருத்தாசல முதலியார் தம் கடையின் தாழ்வாரத்திலே தம் சிறுவரிருவருக்கும் எழுத்தறிவிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். வேறு பள்ளி அங்கேயில்லை. எழுத்துக்களை மணலிலே கை விரலால் எழுதியே பழகுவார்கள்; உலகநாதர்க்கும் இவர்க்கும் வயது வந்ததும் இம் முறையிலேயே தந்தையாரே கல்வி கற்பிக்கத் தொடங்கினர்; ஆங்கிலமும் சிறிது சொல்லிக் கொடுத்தார். எனினும், பள்ளியிற் சேர்க்காமல் இயலுமா?

இவர்களுடைய கல்வியிலே கருத்துக்கொண்ட தந்தையார் துள்ளத்திலே மனையைப் பெரிதாக்கக் கால் கொண்டதையும் நிறுத்திவிட்டு இராயப்பேட்டையை நாடினர். இராயப்பேட்டை வந்தவுடன் ஓர் அரிசி மண்டி வைத்துக்கொண்டு அரிசி, கொள்ளு, தவிடு, உழுந்து, பருப்பு முதலியன விற்று வாழ்க்கை நடத்தினர். தந்தை மக்களுக்காகச் செய்யும் தியாகத்தை என்னென்பது!

பிள்ளைகள் இருவரும் முத்து முதலி தெருக்கோடியில் இருந்த 'ஆரியன் பிரைமரி பாடசாலை'யில் சேர்க்கப் பெற்றனர். உலகநாதர் நான்காம் வகுப்பும் கலியாண சுந்தரனார் இரண்டாம் வகுப்பும் தொடங்கினர். இவர்கள் சேர்ந்தபிறகு அப்பள்ளி 'ஆயர்பாடி' என்ற பகுதிக்கு மாற்றப்பட்டது. அடுத்த ஆண்டு உலகநாதர் வெஸ்லி கலாசாலையில் சேர்ந்தார். இவர் மூன்றும் வகுப்பு மாறினர். ஒவ்வொரு வகுப்பிலும் சுந்தரனார் முதல் பரிசு பெறுவார்.

அங்குப் பயிலும்போது எல்லாச் சிறுவர்களையும் போலவே இவர் விளையாட்டில் ஈடுபடுவார். கோலி, புள், சடுகுடு முதலிய ஆட்டங்களில் இவருக்கு விருப்பம் மிகுதி.

அக்காலத்தில் சுந்தரேசர் கோயில் திருவிழாவிலே சிறுவர்களுக்குச் சுண்டல் கிடைக்கும். இவரும் சுண்டல் வாங்கப் போவார். ஆனால், மற்றைப் பிள்ளைகளுடன் கலந்து நெருக்கி விழுந்து சுண்டல் வாங்குவதில்லை. தனித்தே நின்றுகொண்டிருப்பார். இவர் நிலையறிந்து சிலர் சுண்டல் கொண்டுவந்து கொடுப்பர். சுண்டல் கொடுப்பவர்களில் ஒருவர் நொண்டி. அவர் சிறுவர்களை அடிப்பதும் தள்ளுவதுமாக விலக்கி நிறுத்துவார். அவருக்குச் சுந்தரனார் விலகி நிற்பதும் அவரிருக்குமிடந் தேடிச் சுண்டல் கொடுப்பதும் பிடிக்கவில்லை. 'இவன் சீமானோ? இவனுக்கு என்ன தனிச் சுண்டல்?' என்று ஒருமுறை சீறினார். அன்றுமுதல் சுந்தரனார் சுண்டலுக்கு நிற்காமலே வந்துவிடுவார். அதுவும் நொண்டியாருக்குப் பிடிக்கவில்லை; பிற சிறுவர்களுக்கும் நொண்டியாரைப் பிடிப்பதில்லை. எனவே, எல்லோரும் ஒன்று சேர்ந்து நொண்டியாருக்கு மணலபிஷேகம் செய்தனர். சுந்தரனாருக்கு இதில் கருத்துப் பங்கு மட்டுமே.

கோயில் திருப்பணிகளிலே சிறுவர்களுடன் இவரும் ஈடுபடுவார்.

ஒருமுறை பெரியபாளையத்தம்மன் கோயிலில் பல்லக்குச் சேவைக்கு இராயப்பேட்டை மக்கள் சென்றிருந்தனர். அங்கே சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தனர். அம்மன் வீதிவலம் வருவது பற்றிப் பெரியோர்களிடையே சச்சரவு நிகழ்ந்தது. சிறுவர்கள் விளை

யாட்டை நிறுத்தி அதிலே பங்குகொள்ள முயன்றனர். சுந்தரனுர்க்கு வருத்த முண்டாயிற்று. 'நாமெல்லாம் அண்ணன் தம்பிபோல் விளையாடிக்கொண்டிருந்தோம். பெரியவர்கள் மடமை நம் ஒற்றுமையைக் கெடுத்ததே' என்று கூக்குரலிட்டார், அங்கு நின்றிருந்த திவான் கோபாலகிருஷ்ணப் பிள்ளை என்பார் சுந்தரனுரை அழைத்து 'நீ யார்?' என வினவி அறிந்துகொண்டார்; சிறுவர்களை முன்போல் விளையாட ஊக்கமூட்டினுர். மறுநாள் கோபாலகிருஷ்ணப் பிள்ளை இராயப்பேட்டை யில் ஆரியன் பிரைமரி பள்ளியை அடைந்து, சுந்தரனு ரைக் கண்டுபிடித்துக் கற்கண்டும் ஒரு பட்டுக் கைக்குட் டையும் பரிசாக அளித்து, மாணுக்கர்க்கு விளையாட்டின் மூலம் ஒற்றுமை விளையும் என்பதைப் பல கதைகள் வாயிலாக விளக்கிக் கூறினுர்.

அந்நாளில் எல்லா வீடுகளிலும் தண்ணீர்க்குழாய் இருப்பதில்லை. வீடுகட்குத் தேவையான தண்ணீரைச் சிறுவர்களே கொண்டுவருவர். அன்னையார்க் குதவி யாகச் சுந்தரனுரும் நீர் கொண்டுவருவது வழக்கம்.

மூன்ரும் வகுப்பிற் பயிலும்போது வாழைமரத் தைப்பற்றி எழுதிய கட்டுரைக்குப் பரிசு கிடைத்தது; திறமை பாராட்டப்பெற்றது. நான்காம் வகுப்பிற்கு மாற்றப்பட்டதும் (1894-இல்) வெஸ்லி கல்லூரிக்கே இவரும் போய்ச் சேர்ந்தார்.

அப்போது நிகழ்ந்த ஒன்ருல் நான்காண்டு படிப்பை நிறுத்தும்படியாயிற்று.

சுந்தரனுர் மெய் அக்காலத்திலே பருத்திருந்தது; 'பொதுக்கன்' ஆனுர். தசை வற்றத் தந்தையார் எண் ணெய் ஒன்று வாங்கிக் கொடுத்தார். அது கொடிய

பத்தியம் உடையது; அபத்தியம் செய்தால் கெடுக்கக் கூடியது. ஒரு சனிக்கிழமை பள்ளிக்குச் சிறுவர்களுடன் விளையாடப் போயினார். எண்ணெய் சாப்பிட்ட நினைவின்றியும் பத்தியத்தைப்பற்றி நினையாமலும் குழந்தைமையால் உழுந்துவடை வாங்கித் தின்றுவிட்டார். பிறகு, நினைவுவந்து அச்சுற்றார். எனினும், பெற்றோரிடம் உரைக்கவில்லை. ஞாயிறு கழிந்து, திங்களன்று பள்ளிக்குச்சென்று மாலையில் வீடுதிரும்பும் போது இடக்கால் முடங்கி நடக்கமுடியாமல் வண்டியொன்றில் வீடு சேர்ந்தார்; சில மணி நேரத்திலே வலக்கையும் முடங்கியது; முடவரானார்.

இராயப்பேட்டை அயோத்திதாசர் என்னும் மருத்துவர் ஒருவர் மருத்துவஞ் செய்தார். மெழுகு, இரசாயனம், செந்தூரம், பஸ்மம், கிருதம், சூரணம் எனப் பலவகை மருந்துகள் கொடுத்தார்; மூட்டுகளுக்குத் தைலம் பூசினார். மூட்டுகளெல்லாம் புண் ஆயின. அன்னையாரும், தமக்கையார் அம்மணி அம்மாளும் கண்ணிமைபோற் காத்தனர். நாளடைவிலே திண்ணிய உடல் மெலிந்து வற்றலாகியது. ஒன்பது திங்கள் கழிந்தன. முடங்கிய காலும் கையும் சூம்பின. எல்லோரும் திகிலுற்றனர்; மருத்துவர் ஒரு திங்கள் ஓய்வு கொடுத்து ஒரு மருந்து கொடுத்தார். அதனை இடையிடையே விட்டுவிட்டு ஒரு மண்டலம் சாப்பிடச் செய்தார்; பிறகு, மருந்தை நிறுத்தி ஒரு தைலத்தை மூட்டுகளிற் பூசி வெந்நீர் விட்டுவந்தனர். படிப்படியாக முடங்கிய கையுங் காலும் நீண்டன. நடந்து பயிற்சி செய்த பிறகு சூம்புதலும் மாறியது. இதற்குள் ஓராண்டு கழிந்தது. மற்றும் ஓராண்டு படிப்பை நிறுத்தி வைக்கும்படி மருத்துவர் கட்டளையிட்டார்.

இங்கிலேயிலே குடும்பத்திலே பல இடையூறுகள் நிகழ்ந்தன. வறுமை துணையாயிற்று. அரிசிமண்டி மூடப்பட்டது. துள்ளத்திலே விருத்தாசல முதலியார் வாங்கியிருந்த நிலத்திலிருந்து வந்துகொண்டிருந்த நெல் லும் ஒழுங்காக வரவில்லை. உலகநாத முதலியார் பள்ளியைவிட்டு, ஓர் அச்சுக்கூடத்திலே அலுவல் ஏற்றுக் குடும்பத்திற்குத் துணையானார். எனவே, சுந்தரனாரின் படிப்புக்கு முட்டுக்கட்டை நேர்ந்தது.

சுந்தரனார்க்குக் கை கால்முடங்கி நோயால் ஓராண்டும் ஓய்வால் ஓராண்டும் கழிந்தன. மற்றும் ஈராண்டுகள் படிக்கச்செல்ல இயலாதவாறு குடும்பத் தொல்லை குறுக்கிட்டது. அந்நாட்களிற் காலையில் வீட்டு வேலை ஏதேனும் செய்வார். மாலையில் சுந்தரேசர் கோயில் வெளியில் விளையாடுவார். மற்றைப் பொழு திலே இராயப்பேட்டையில் இருந்த மற்களம் பலவற் றில் ஒரு மற்களத்திற்குப் போவார். அங்கே நடக்கும் சிலம்பப் பயிற்சியைக்கண்டு களிப்பார். சிறுகம்பு ஆட்டம், 'பானை சுழற்றல்' முதலியவை அவர் கண் களுக்கு விருந்தாகும். தண்டால், பஸ்கி, கர்லா சுழற்றல் முதலியவற்றைத் தாமும் பயில்வார்.

மற்பயிற்சி உடலுக்கு வலிமை தருவது; தற்காப் புக்கும் மற்றோருக்குதவவும் உடல் வலிமையும் பல் வகைப்பயிற்சிகளும் ஒவ்வொருவருக்கும் வேண்டும். நம் நாட்டிலே முன்னர்ச் சிலம்பக்கூடங்களும் மற்களங் களும் மிக நன்றாக நடந்தன. புறநானூறு என்னும் இலக்கியத்திலே போரவைக் கோப்பெரு நற்கிள்ளி என்னும் சோழ இளவரசன் ஆமூர்மல்லன் என்பவ னுடன் செய்த மற்போரின் சிறப்பு மிக அழகாகக் கூறப்

பட்டிருக்கிறது. அதனைப் படிக்கும்போதே நம் மெய் சிலிர்க்கும். இத்தகைய நாட்டிலே இப்போது கல்வி கற்கும் மாணவர்களில் பெரும்பாலோர் புல்தடுக்கிகளாக இருப்பது வருந்தத்தக்கது. பள்ளிகளில் உடற்பயிற்சி வகுப்பை அவர்கள் புறக்கணிப்பது வழக்கமாய் விட்டது. மற்றும், பணச்செலவில்லாமலே நம் உடல் வலிமை பெறத்தக்க நல்ல பயிற்சிகள்—நம் நாட்டுப் பயிற்சிகள்—பள்ளிகளிலே இடம்பெறவும் இல்லை.

சுந்தரனார்க்கு அப் பருவத்திலே மாட்டுப்பந்தயம் குதிரைப்பந்தயம் முதலியவை பார்க்க மிகவும் ஆர்வமுண்டு. அக்காலத்திலே கோடம்பாக்கம் ரோட்டு, கிண்டி ரோட்டு, நல்லூர் மடக்கு, மூன்றுங்குழி முதலிய இடங்களில் அப் பந்தயங்கள் நடந்தன. அங்கெல்லாம் போவார். ஞாயிறுதோறும் மற்களத்திலே காடை, கவுதாரி, கோழி முதலியவற்றின் சண்டைகள் நடைபெறும். அப் பறவைகள் குருதி வெள்ளத்திலே மிதந்து போர்செய்வதைக் காணச் சுந்தரனார்க்குப் பிடிப்பதில்லை. எனவே, அப் பந்தயங்கட்கு இவர் செல்லமாட்டார்.

இவர் உப்புக்குந்த விளையாட்டிலே திறமையுடையவரானார். ஒருமுறை சூறைத்தேங்காய் எடுக்கப்போய்த் தேங்காயால் வலக்கைச் சுட்டுவிரல் நசுங்கி வந்தார்.

இவ்வாறு விளையாடுவதேயன்றித் தம் தமையனாரின் அரிசிமண்டியிலும் மற்ருேருறவினரின் பலசரக்குக் கடையிலும் இருந்து சில்லறைவேலை செய்வார். தம் வீட்டுப் பசு ஒன்றைப் பிடித்துச்சென்று காலாற விடுவார்.

இவ்வாறு இரண்டாண்டுகள் கழிந்தன; 1898-ஆம் ஆண்டு திரும்பவும் வெஸ்லி கலாசாலையிலே நான்காம் வகுப்பிலே சேர்ந்தார்.

நான்காம் வகுப்பாசிரியர் தேவதாஸ் நல்லவர். மாணவர்களிடம் அன்புள்ளவர். அந்த ஆசிரியரின் மனைவியாரிடம் போப் ஐயர் எழுதிய இலக்கணத்தைச் சுந்தரனார் கற்றார். 'தமிழ் இலக்கணத்தில் முதல் முதல் சுவையூட்டியவர் அவ்வம்மையாரே' என இவர்தம் வாழ்க்கைக்குறிப்பிலே குறித்துள்ளனர். தலைமையாசிரியர்க்கும் இவரிடம் அன்புண்டாயிற்று. இரண்டாம் பாரத்திற் பயிலும்போது பிரின்ஸ்பால் ஸி. பாலர்ட் துரை இவ்வகுப்பிற்கு ஒரு கணக்குத் தேர்வு வைத்தார். கணக்கில் வல்லவரான அத் துரைக்கு எல்லா மாணவர்களும் கணக்குப் புலவர்களாகவேண்டுமென ஆவல் இருந்தது. சுந்தரனார்க்கு நன்றாகக் கணக்குவரும்; எல்லாக் கணக்கையும் செய்தார்; நூற்றுக்குநூறு எதிர்பார்த்தார்; தொண்ணூற்றைந்தே கிடைத்தன; பிரின்ஸ்பாலை அணுகி வினவினார். பிரின்ஸ்பால் 'வரிகளும் குறிகளும் சில இடங்களிற் கோணல் கோணலாக இருக்கின்றன. நீலக்கோடுகள் அவைகளை உணர்த்துகின்றன. அதனாற் குறைபட்டன திருந்திக்கொள்' என்றார். இவர் முகம் தெளியாமல் இருந்தது. 'நீ எல்லார்க்கும் மேலாக மார்க்கு வாங்கியிருக்கிறாயே! அதில் உனக்கு அமைதியில்லையா!' என்று சமாதானம் செய்து அனுப்பினார். இவர் எப்போதும் வகுப்பில் முதன்மையாக இருந்தார். மூன்றாம்பாரத்தில் 'லோயர் செகண்டரி' தேர்வுக்குச் சென்று தேறினார். ஐந்தாம்பாரம் படிக்கும்போது வகுப்பாசிரியர் கிருஷ்ணராவிடம் நெருங்கிப் பழகி அவரன்பைப் பெற்றார். எல்லா வகுப்புக்களிலும் பரிசுகள் பெற்றார்.

அவ் வகுப்பிற் படிக்கும்போது யாழ்ப்பாணம் கதிரைவேற்பிள்ளை வெஸ்லி கலாசாலைத் தமிழாசிரிய

ராஞர். நல்ல தமிழ்ப்பயிற்சியும் கற்பிக்குந் திறனும் பேச்சுவன்மையும் மிக்க கதிரைவேலரிடம் சுந்தரனுர் தம் உள்ளத்தையே ஒப்பித்தார். தமிழ்ப்பேராசிரியராக இருந்த சே. கிருஷ்ணமாச்சாரியாரிடம் நல்ல அன்புண்டு.

சுந்தரனுர் ஆறும்பாரம் அடைந்தார். அப்போது கதிரைவேலர்மேல் ஒரு வழக்கு ஒரு செட்டியாராலே எழும்பூர் நீதிமன்றத்திலே தொடங்கப்பெற்றது. மற்ருெரு வழக்கு இராமலிங்க அடிகள் சார்பில் ஜார்ஜ் டவுன் அறமன்றிலே முன்னரே இருந்தது; வழக்கின் தொந்தரையால் கதிரைவேலருக்கு வேலையும் போயிற்று. ஆறும்பாரம் செலக்ஷன் தேர்வு நெருங்கியது. சுந்தரனுர் கதிரைவேலர் வழக்கிலேயே கருத்தைச் செலுத்திப் படிப்பைக் கெடுத்துக்கொண்டார். செலக்ஷன் கிடைக்கவில்லை. பள்ளிப்பிள்ளைகள் வெளிநிகழ்ச்சிகளிலே கருத்தைச் செலுத்துவதன் பயனை நோக்குக! முதல்மாணுக்கராக உழைத்த சுந்தரனுர் கதிரைவேலர் மேற்கொண்ட பற்றிஞலே செலக்ஷனுக்கும் தகுதியற்றவராஞர். முதல்மாணுக்கன் என்ற இறுமாப்பும் முதற்பரிசுச் செருக்கும் மனக்கோட்டையும் என்ன ஆயின? 'தேனென இனித்த பள்ளிப்படிப்பு வேம்பெனக் கைத்தது' என்று சுந்தரனுர் வாழ்க்கைக் குறிப்புக் கூறுகிறது. பள்ளியை விட்டார் சுந்தரனுர். இவருடன் பயின்றவர்களில் திரு. சிவசங்கர முதலியாரும் திரு. சச்சிதானந்தம் பிள்ளையும் இவருக்குக் கெழுதகை நண்பர்களாயினர். இவ் விருவரிலே சச்சிதானந்தம் பிள்ளையவர்களே ஆங்கிலப்பட்டம் பெற்று டிப்டி ரைரெக்டர் பதவிவரை உத்தியோகம் புரிந்து ஓய்வு பெற்றிருக்கிருர்.

இனி, இப் பள்ளிப்படிப்பிலே இவர் மேற்கொண்ட பிற செயல்களைக் கவனிப்போம். பள்ளிப்படிப்புக்கு ஓய்வு கொடுத்திருந்த காலத்திலே பயின்ற உப்புக்குந்த விளையாட்டானது பள்ளியிற்பயிலும்போதும் நடைபெற்றது. மற்றும், இவரே இவர் கட்சியிலே முதன்முதல் விளையாட்டைத் துவக்கவேண்டும் என்ற நம்பிக்கையும் உறுதிப்பட்டிருந்தது. மற்றும், ஆட்டத்தினிடையே இவர் 'சாதல்' கூடாதென்று இவர் தோழர்கள் உட்கொண்டனர். இவர் 'சாக' நேர்ந்தால் மீட்க இவர் கட்சி பெருமுயற்சி செய்யும். இவரால் இவர் கட்சி எப்போதும் வெற்றியே பெற்றுவந்தது. உப்புக்குந்தத்திலே மணியென ஒளிர்ந்த திருவல்லிக்கேணி பாலையா என்பவரின் 'கத்திரிப்பிடி'யையும் 'காண்டா மிருகம்' போல உறுதிபெற்ற முரட்டுத்தன்மை மிக்க மீர்சாயபு பேட்டைச் சங்க உறுப்பினர் ஒருவரையும் வென்று புகழ் பெற்றார். அவ்விளையாட்டிலே மன்னார்சாமி கோயில்கூட்டத்தாரின் மூர்க்கத்தன்மையை அமைதியாகப் போக்கி வயப்படுத்திய பெருமையும் இவர்க்குக் கிடைத்தது.

மாங்காய் அடித்தல், குரங்காட்டம் முதலான பிள்ளைமைத் தன்மையிலும் இவர் ஈடுபட்டிருந்தார்.

அக்காலத்தில் இராயப்பேட்டை இயற்கையழகிலே திகழ்ந்தது. அதன் இயற்கைப் பசுமையழகு சுந்தரனாரை வயப்படுத்திவிட்டது. இராயப்பேட்டை, தேனாம்பேட்டை, ஆழ்வார்பேட்டை, மயிலாப்பூர் முதலிய ஊர்கள் மயிலாப்பூர் ஏரியை உயிராகக்கொண்டு பசுமைப்போர்வை போர்த்திக்கொண்டிருந்தன.

இராயப்பேட்டையினின்றும் மயிலாப்பூர் செல்லும் பெருவழியிலே கதிரவன் வெம்மை காணப்பெறாது.

வெற்றிலைத்தோட்டமும், வாழைத்தோட்டமும், தென்னந்தோப்பும், கருப்பந்தோட்டமும், விளைந்து சாய்ந்து கதிர் வளைந்து கிடக்கும் நெல்வயலும், பசும்புல் வெளிகளும் பொய்கைப்பரப்பும் கண்ணை மயக்கும். ஏற்றப் பாட்டும் வண்டுகளின் முரற்சியும் பறவைகளின் இன்னோசையும் மூங்கில்களின் உராய்வொலியும் பிற ஓசையும் செவிக்கு விருந்தாகும். குளிர்ந்த காற்று மெய்யின் களைப்பைப் போக்கும். இராயப் பேட்டையைச் சார்ந்த 'அட்லன் தோட்டம்' ஒரு நல்ல வனமாக இருந்தது. அதனில் எல்லாப் பொருளும் கிடைக்கும். மற்றும் சிறுவர்கள் அங்கே அம்மையப்ப முதலி தெருவிலுள்ள ஒரு சந்திலே நுழைந்தார்களானால் ஒரு தோட்டத்திலிருந்து மற்றொரு தோட்டத்திற் புகுந்து பல தோட்டங்களைச் சுற்றி மீண்டும் அம்மையப்ப முதலி தெருவிற்கே வந்துவிடுவர். சுந்தரனார் காலையில் எழுந்து பழம் பாடங்களைப் படித்துவிட்டுப் புதிய பாடங்களையும் ஒருமுறை நோக்கி விளங்காத இடங்களை இராயப்பேட்டையிலேயே வாழ்ந்த ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவார். பிறகு, தோழருடன் இத் தோட்டங்களிலே விளையாடுவார்.

சனி ஞாயிறுகளிலே காலையிலே பாடங்களைப் படித்துவிட்டுச் சில மாணவத்தோழர்களுடன் தோட்டங்களில் விளையாடச் சென்றுவிடுவார். வெற்றிலைத் தோட்டங்களிற் பணிபுரிவார். தென்னைமரங்களிலிருந்து தோழர்களாற் பறித்துப் போடப்படும் இளநீரை அருந்துவார். வெற்றிலைத்தோட்டங்களிற் கிடைக்கும் கீரை வெற்றிலை வாழைப்பூ முதலியவற்றை ஆசிரியர் வீடுகளுக்குக் கொண்டுபோய்த் தருவார். அட்லன் தோட்டத்திற் கிடைக்கும் பெருங் களாக்காய்களை ஊறுகாய்க்குக் கொண்டுவருவார். கடற்கரையிலே உப்புக்குந்தம் ஆடு

வார். கடலில் ஆடுவார். ஒருமுறை இரத்தினசபாபதி என்னுந் தோழரைக் கடலில் முழுகாமல் மீட்டார்.

சதுரங்க விளையாட்டிலே நம் சுந்தரனர் திறமை மிக்கவர்; ஆல்மா, டிராப்ட்ஸ் என்னும் விளையாட்டுக்களிலும் பழகியிருந்தார். இராயப்பேட்டை மருத்துவ சாலைக்கு எதிரிலுள்ள ஆங்கிலோ - இந்தியப் பெண்பாடசாலையின் ஆசிரியையான திறமைமிக்க ஓர் அம்மையாருடன் ஒருமுறை சதுரங்கம் ஆடி வென்றி கண்டார்.

இராயப்பேட்டையிலே பச்சையப்ப நாடார் என்பவருடைய வீட்டின் நடைப்பக்க அறையிலே அவர்தம் மகனுடன் முருகனுக்கு விமானம் அமைத்து வழிபடுவதும் இவர் வழக்கமாகப் பொலிந்தது.

கிரிக்கட் ஆட்டத்தில் உதட்டில் வாங்கிய அடியாலும், புள்ளாட்டத்தில் இவர் அடித்த புள் ஒருதோழனை மூர்ச்சையடையச் செய்ததாலும் அந்த ஆட்டங்களிலே இவர் தலையிடுவதை விட்டுவிட்டார்.

இவர் மாணவராக இருந்தபோதே 'ஸ்ரீபால சுப்பிரமணிய பக்தஜன சபை' காணப் பெற்றது. ஓய்வு காலத்தில் இவருடன் பயிலும் மாணவர்கள் அந்தச் சபையிலே காலங்கழிப்பர். அப்போது ஆடல் பாடல் நிகழும். மாணவர்களின் ஆர்ப்பாட்டம் பிடிக்காத சில பெரியோர்கள் முயற்சியால் அச் சபை பிற்பகலிலே பூட்டப்பெற்றது. ஒருநாள் இவர் தம் நண்பரான இரத்தின சபாபதி என்பவரைக் கோவணாண்டியாக்கி மெய்யெல்லாம் வெண்ணீறு பூசி உருத்திராக்கத் தாழ்வடம் பூட்டி அச் சபையை மறுசாவியாலே திறந்து, கதவைத் திறந்தவுடன் கண்ணிற்படத்தக்க இடத்திலே பதுமாசனமிட்டு உட்காரவைத்துக் கதவைப்பூட்டிக்கொண்டு எதிரி

லிருந்த ஒரு வீட்டின் திண்ணையிலே அமர்ந்தார். பின்னர் வழிபாடுசெய்யும் பூசை—துரைசாமி முதலியார் என்பவர் வழக்கம்போலக் கதவைத் திறந்தார்; முனிவரைக் கண்டார்; அச்சங் கொண்டார்; பலரைக் கூட்டினார். யாரும் முனிவரை அணுக அஞ்சினர். முதலிலே நம் சுந்தரனார் இரத்தினசபாபதியை அணுகித் தம் காற் பெருவிரலாலே தீண்டிக் குறிப்பிட்டார். அவரும் எழுந்துவந்தார். எல்லோரும் உண்மையுணர்ந்து நகைத்தனர். மாணவர்களின் பொழுது போக்குக்கு இனி இடையூறு செய்வதில்லை யென மொழிந்தனர்

கதிரைவேற் பிள்ளையின் கூட்டுறவிலே சுந்தரனார் மனம் சிக்குண்டபிறகு அவர்க் கெதிராக நடைபெறும் நிகழ்ச்சிகளை இவர் வெறுத்தார். அவற்றைக் களையத் தம்மாலான முயற்சிகளும் செய்தார். அம் முயற்சிகளிலே தவறான முயற்சிகளும் இருந்தன.

ஒருமுறை இராயப்பேட்டை அம்மையப்ப முதலி தெருவிலே கதிரைவேலரின் சொற்பொழிவொன்று நடந்தது. அங்கிருந்த வேதாந்த சபையினர் அவர்மீது வெறுப்புக் கொண்டிருந்தனர். கதிரைவேலர் தம் சொற்பொழிவை முடித்துக்கொண்டு வண்டியேறும் போது, அவர்களில் ஒருவர், 'அதோ குதிரைவால் போகிறான்' என்றனர் சுந்தரனாருடைய சகபாடிகளுக்கு இது சீற்றத்தை யூட்டியது. சிலர், தெருவிலே நாறிக் கிடந்த சாக்கடைச் சேற்றை வாரி அந்த வேதாந்திகள் மீது வீசிவிட்டு ஓடிவிட்டனர். அடுத்தநாள் வேதாந்த சபைத்தலைவர் சுந்தரனாரைப் பார்த்து, 'நேற்று நடந்ததை நீ ஒப்புக்கொள்ளுகிறாயா?' என வினவினர். இவர், 'குதிரைவால் என முதியவர் துவங்கினர்; சிறியவர் சாக்கடைச் சேற்றாலே விடையிறுத்தனர்' என்றாராம்.

கதிரை வேலரை இழிமொழிகளாலே புனைந்தெழுதிய ஓர் அறிக்கையை ஒரு தமிழ்ப்பண்டிதர் இராயப் பேட்டை முழுதும் பரப்பினர். அதைக்கண்ட சுந்தரனார் மனம் கொதித்தது. தம் வெறுப்பைக் காட்ட ஒருதிட்டம் இட்டார். தமிழ்ப் பண்டிதர் அறிக்கையை எடுத்துப் பிள்ளையார் சுழி, திருச்சிற்றம்பலம், சிவமயம் ஆகிய வற்றைக் கிழித்தெறிந்து, எஞ்சிய பகுதியைத் தம் திண்ணையில் வைத்துத் தமிழ்ப்பண்டிதர் அவ்வழியே செல்லும்போது அந்த அறிக்கையைச் செருப்பால் அடிக்குமாறு ஒரு நண்பரை ஏவினர். அவ்வாறே அத் திருப்பணி நடந்தது !

இராயப்பேட்டையிலே குறிசொல்லி வாழ்க்கை நடத்திய ஓரம்மையாரை, அவர் குறியின் பொய்ம்மை காரணமாக, இவரும் இவர் நண்பர்களும் வெறுத்தனர். எனினும், அந்த அம்மையார் வயிற்றுக்கடுப்பால் வருந்தும்போது இரவு மூன்று மணிக்கு வைத்தியர் ஒருவரை அழைத்துவர உதவி செய்தனர்.

ஒருமுறை ஐப்பசித்திங்களிற் கௌரிநோன்பின் போது பிச்சைக்காரன் ஒருவன் வீடுதோறும் 'நோன்பு, நோன்பு' என்ற பதிலையே பெற்றுப் பசியால் சோர்ந்து விட்டான். நம் சுந்தரனார் தம் வீட்டிலே நோன்புக் கெனச் சுட்டுவைத்திருந்த அதிரசங்களிற் சிலவற்றைத் திருட்டுத் தனமாகக் கொண்டுவந்து கொடுத்தார். இவ்வாறு கலியாணசுந்தரனார் தம் பிள்ளைமைப்பருவக் குறும்புகளும் விளையாட்டுக்களும் பிறவும் கழிந்தன.

இந்த இயல்புகளைப் பற்றி இவர் தம் வாழ்க்கைக் குறிப்பில் குறிப்பிடும்போது, "யான் பெற்ற கல்வி கேள்விகள் மட்டும் என் விலங்கியல்பை ஒடுக்கவில்லை.

அவை ஒரோவழித் துணைநின்றிருக்கும். இல்வாழ்க்கையும், நல்லோர் கூட்டுறவும், பலதிறத் தொண்டுகளும் எனது விலங்கியல்பை ஒடுக்குதற்குப் பெருந்துணையாய் நின்றன என்று என் அனுபவம் கூறுகிறது," என்றெழுதி யிருப்பது சிந்திக்கத்தக்கது.

மற்றும், "எவர் என்ன சொல்லினுஞ் சொல்க! எந்நூல் என்ன கூறினுங் கூறுக! பிள்ளைமையை நல்வழியிலே பண்படுத்தப் பெற்றோரும் நல்லாசிரியன்மாரும் கடமைப் படுதல் வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்," என்றுரைத் திருப்பதும் நோக்கத்தக்கதாகும்.

மாணவர்கட்குப் படிப்புடன் விளையாட்டும் வேண்டியதே. எனினும், ஒழுக்கப்பயிற்சியும் வேண்டும்; நல்லோர் நட்பும் கிடைத்தல் வேண்டும். சுந்தரனரின் பிள்ளைமைப் பருவத்திலே நன்மையுந் தீமையுங் கலந்த செயல்கள் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் மாணவர் சிந்தித்தல்வேண்டும். அப்போது பயின்ற விளையாட்டுப் பயிற்சியிலே பெற்ற உடலுரமே அவர் தம் இறுதிவரை துணையாயது?

சுந்தரனர் பள்ளிவிடுத்த சில தினங்களிலே (11-9-1905) இவர் தம் அருமைத் தந்தையார் விண்ணுலகெய்தினர். அப்போது இவர் தம் பெரிய தந்தையார் மகனர் இராஜா முதலியார் வற்புறுத்தலுக் கிணங்கி இராயப்பேட்டை 'கமர்ஷியல் ஸ்கூலில்' சேர்ந்து 'புக்கீப்பிங்' பயின்று தேர்ச்சி பெற்றார்.

### தமிழ்க் கல்வி

சுந்தரனர்க்குத் தமிழ்க்கல்வி வழிதிறந்தவர் யாழ்ப்பாணம் நா. கதிரைவேற் பிள்ளையாவார். அவர் கல்லூரியிலே மாணவர்கட்குப் பாடஞ் சொல்லுமளவில்

நில்லாமல் சென்னை கந்தசாமி கோயில் வசந்தமண்டபத்திலும், சிந்தாதிரிப்பேட்டை அங்காள பரமேசுவரி கோயிலிலும் புராணச்சொற்பொழிவு நிகழ்த்துவார். அச் சொற்பொழிவுகள் வெறும் புராணங் கூறுமளவிலே நில்லாமல் இலக்கிய நயமும் இலக்கணக் குறிப்பும் உடையதாய்க் கற்றோர்க்கும் பயன் புரிவதாய் இருக்கும். சுந்தரனார் அச் சொற்பொழிவுகளுக்குத் தவறாமற் செல்வார். கதிரைவேற்பிள்ளையை இவர் முதன்முதல் புரசையில் ஒரு கண்டனக் கூட்டத்திலே கண்டு அவர் தம் நாவன்மையிலே ஈடுபட்டார். பிறகே வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராகக் கண்டார். அவரிடம் நெருங்கிப் பழகி அணுக்கத் தொண்டரானார். அதனாலேயே கதிரைவேற் பிள்ளைமீது தொடரப்பெற்ற வழக்கிலே சான்று சொல்ல நேர்ந்தது! செலக்ஷன் தேர்விலே சில பாடங்களை எழுதச்செல்லாமல் நின்றுவிட நேர்ந்தது! கல்லூரியை விட்டு விலகிய பிறகு, கதிரைவேலர் நீலகிரி போய்விட்டார். வேனில்விடுமுறையிலே சென்னை வந்தார் ; இரண்டு திங்கள் சிந்தாதிரிப்பேட்டையிலே தங்கினார். அப்போது சுந்தரனார் அவரிடம் யாப்பிலக்கணங் கற்றார்; பெரியபுராணங் கேட்டார். வேனில் விடுமுறை கழித்து நீலகிரிக்குச் சென்ற கதிரைவேலர் வெஞ்சுர நெறியிலே (26—3—1907 -ல்) சிவனாரடிநீழல் சேர்ந்தார். பள்ளிப்படிப்பை விட்டாலும் சைவத்திலும் தமிழிலும் கருத்துச் செல்ல வைத்த கதிரைவேலரை இழந்தபோது சுந்தரனார் அடைந்த துயர் அளப்பிலது. **'முன்னாளில் எங் குரவற் கென்னபவஞ் செய்தேனோ மூடநாயேன்—இந்நாளில் இளமையிலே உனையிழந்து வாடுகின்றேன் எந்தாய்! எந்தாய்!'** என உருகிப் புலம்பினார். பாம்பன் குமரகுருதாசரின் திருவலங்கல்

திரட்டும் குமரகுருபர் சிதம்பரச்செய்யுட்கோவையும் சுந்தரனாரைத் தெளிவித்தன. கவலையைப் போக்கியது தமிழ்க்கலை.

பிறகு, சோமசுந்தர நாயகர் எழுதிய கண்டன நூல்களைத் தாமே பயின்றார்; சைவசித்தாந்த நுட்பங்கள் பல அறிந்தார். மயிலை-மகா வித்துவான் தணிகாசல முதலியாரிடம் திருவருட்பயன் என்னும் சைவசித்தாந்த சாத்திரத்தைக் கற்கத் தொடங்கினார். அப்போது இவருக்குச் சைவசித்தாந்த நூல்களைக் கற்பித்தாற் பிற்காலத்தே வரம்புமீறிச் சாத்திரத்தைக் கெடுத்து விடுவார் என யாழ்ப்பாணத்துச் சுவாமிநாத பண்டிதர் என்பவர் தணிகாசல முதலியாரிடங் கூறினாராம். அதை அவர் பொருட்படுத்தவில்லை. பிறகு, சிவப்பிரகாசம் என்னும் நூலையும் தணிகாசல முதலியாரிடமே சுந்தரனார் கற்றார். அப்போது சிவஞான சித்தியார் சிவஞான போதம் போன்ற நூல்களின் சாரமெலாம் பிழிந்து கொடுக்கப்பெற்றார். பின்னர், சிவஞான சித்தியார் பரபக்கமும் சிவஞானபோதமும் கற்றார். சிறிது வடமொழிப் பயிற்சியுங் கிடைத்தது.

பின்னர், இராயப்பேட்டையில் வாழ்ந்த திருக்குறள் சிதம்பர முதலியாருடன் கலந்து திருக்குறள் படித்தார். அவர் சபாபதி நாவலரின் மாணவர். அவர் கூறிய குறிப்புக்கள் சுந்தரனார்க்குப் பெருந்துணை புரிந்தன. அப்போது மறைமலையடிகள் அடிக்கடி பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையின் குகானந்த நிலையத்திற்கு வருவார். அவரிடமும் பல ஐயங்களை நீக்கிக்கொண்டார். 'சென்னைச் செண்ட் எப்பாஸ்' உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் தேவப்பிரசாதம் பண்டிதருடன் கம்பராமாயணமும் வில்லிபாரதமும் படித்தார்.

பிறமொழிகள்

ஒருமுறை வேதாந்தம் வல்ல சிவப்பிரகாச சுவாமிகளின் முன்னிலையில் 'அத்துவிதம்' என்ற பொருள் பற்றிச் சுந்தரனார் பேசினார். அப்போது நேர்ந்த நட்பினாலே சுவாமிகளிடம் வேதாந்தநூல்களைப் பயின்றார். வடமொழியில் வல்ல பாம்பன் சுவாமிகளிடம் உபநிடதக் கருத்துக்களைத் திருவல்லிக்கேணிக் கடற்கரையிலே சிறிது கேட்டுத் தெளிந்தார். மருவூர்க் கணேச சாஸ்திரியார் சிவகீதை, நீலகண்ட பாடியம் ஆகியவற்றைக் கூறுமிடங்களுக்குச் சென்று அவற்றைக் கேட்டார். வால்மீகி இராமாயணம், வியாசபாரதம் எங்கே நடந்தாலும் விடாமற்போய்க் கேட்பார். வெஸ்லிகல்லூரியில் தெலுங்குப் பண்டிதராக இருந்த கிருஷ்ணமாச்சாரியார் கல்லூரி ஓய்வு நேரத்திலே காளிதாசர் முதலிய கவிகளின் நயங்களைக் கூறக் கேட்டார். அப்போது சுந்தரனார் வெஸ்லிகல்லூரியிலே தமிழ்ப்பேராசிரியராக இருந்தார். இவ்வாறே வடமொழி ஜைன சித்தாந்தங்களைப் பார்சுநாத நயினார், பேராசிரியர் சக்கரவர்த்தி நயினார் ஆகியோரிடம் கேட்டார். சுந்தரனார் ஆயிரம்விளக்குப் பள்ளியிலே ஆசிரியராக இருந்தபோது அப்துல் கரீம் என்னும் இஸ்லாமானவரிடம் திருக்குரான் கேட்டார்.

ஆறும் பாரம் வரையிலேதான் சுந்தரனார் ஆங்கிலத்தை முறையாகக் கற்றார். பின்னர், 'மதராஸ் டைப்ஸ்' என்னும் ஆங்கிலத் தினத்தாளாசிரியராக இருந்த 'கிளின் பார்லோ' என்பார் ஏற்படுத்திய 'ஷேக்ஸ்பியர் கிளப்'பிற்குச் சென்று, அங்கே ஷேக்ஸ்பியர், மில்டன், வோர்ட்ஸ் வொர்த், ஷெல்லி, கீட்ஸ், பைரன், கால்ரிட்ஜ், டென்னிஸன் முதலியோர் நூல்களைப் பற்றிய சொற்பொழிவுகளைக் கேட்பார். இலக்கியக்

கழகங்கள் பல சென்னையில் நடைபெறும். அங்கே, பச்சையப்பன் கல்லூரிப் பிரின்ஸ்பால்களாக அப்போது இருந்த ரோலோ, ரென் என்னும் ஆங்கிலப் பேராசிரியர்கள் செய்யும் சொற்பொழிவுகள் சுந்தரனார்க்கு ஆங்கில அமுதமாகி அறிவை வளர்த்தன. 'அன்னிபெஸண்டு' அம்மையார் செய்த ஆங்கிலச்சொற்பொழிவிலே திளைத்தார். இவ்வாறு, பல வேறு வகையிலே ஆங்கில அறிவு பெருகியது. தமிழறியாரிடம் பேசவும், கடிதம் எழுதவும் மொழிபெயர்க்கவும் ஆங்கிலம் உறுதுணையாயது.

மற்றும் ஓவியக் காட்சியாலும், இசையைக் கேட்டலாலும், இயற்கை யெழிலிலே படிவதாலும் சுந்தரனாரின் கலையுணர்ச்சி பெருகியது; நூல்களாக வழிந்தது; தமிழ்நாடெங்கும் பெருகியது; கலைஞருக்கு அமுதமாகியது.

# ௩. குடும்பப் பணி

சுந்தரனார் பள்ளிப்படிப்பை விட நேர்ந்த சிறிது காலத்திலே தம் தந்தையாரை இழந்தார்; தமையனார் உலகநாத முதலியார் மவுண்டு ரோட்டில் வைஜயந்தி அச்சுக்கூடத்தில் அலுவலாற்றிக் கொண்டுவரும் பொருள் சிறிதே. துள்ளத்திலிருந்து நெல் வரவும் நின்றது. அன்னையார் பார்வையில் தமையனார் விசய ரங்க முதலியார் செய்துவந்த அரிசி, பருப்பு, கொள்ளு, தவிடு, பிண்ணாக்கு வணிகம் சுருங்கிய அளவிலே நடந்தது. சுந்தரனாரும் அவ் வணிகத்திலே துணைபுரிவார். இவ்வகைகளில் வந்த வருவாய் குடும்பச்செலவிற்குப் பற்றவில்லை; தொல்லை பெருகியது. சுந்தரனார் மனம் கலங்கியது. அப்போதெல்லாம் கடற்கரையிலே அமர்ந்து நீலவானின் நெடும் பரப்பிலுங் கடற் பரப்பிலும் ஈடு பட்டுக் கவலையை மறப்பார். எனினும், வீடு திரும்பா மலோ குடும்பவறுமையை நோக்காமலோ இருக்க வியலுமா? அன்னையின் உள்ளம் சுந்தரனார் வேலைக்குப் போகவேண்டுமென விரும்பியது. அண்டை அயலில் உள்ளோர் வேலைக்குப் போகாததைக் குறித்து வம்பு பேசினர். தமையனார் உலகநாதர் மட்டும் 'வேலைக் குப் போ' என்றுரைத்திடார். எங்ஙனமேனும் வேலை தேடவேண்டும் என்று சுந்தரனார் முயன்றார்.

**ஸ்பென்சரில்**

முதன் முதலாகப் பின்னி கம்பெனியில் முயன்றார்; கிடைத்தது; ஆனால், அங்கிருந்த நிலைமையில் அன்று பிற்பகலே நின்றுவிட்டார். அடுத்த நாள் 'வால்காட் பிரதர்ஸ்' கம்பெனியில் முயன்றார். கணக்கு வேலை இல்லை; 'காப்பியிஸ்ட்' வேலை யிருந்தது; வேண்டா என்று வந்து

விட்டார். 'ஸ்மித் கம்பெனி'யில் கதிரைவேற் பிள்ளையின் பகைவர் ஒருவரால் அலுவல் கிடைப்பது 'கத்திரி' இடப்பட்டது. இறுதியாக 'ஸ்பென்ஸர் கம்பெனி'யில் விளம்பரத்துறைக்கு ஒருவர் தேவையென ஸ்பென்ஸரில் ஒரு துறையில் தலைவரான இராயப்பேட்டை வடிவேல் முதலியார் வாயிலாக அறிந்து, அவர் சார்பாகவே சென்று சேர்ந்தார்.

அங்கு 1906-இல் வேலை தொடங்கினார். இவரைச் சோதனை செய்த பார்க்கர் துரை, 'புக்கீப்பிங் சர்டிபிகேட்'டால் மகிழ்ச்சியடைந்து, "உலகிலுள்ள பெரிய கம்பெனிகளின் பொருள் விலைப்பட்டிகள் இங்கு வந்து குவியும். அவற்றை ஒழுங்கு செய்யப் புதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; அப் பொறுப்பு உம் வசம் விடப்பட்டிருக்கிறது. இது ஒரு 'லைப்ரெரியன்' வேலை போன்றது" என்று இவருடைய வேலையை விளக்கினார். மூன்று திங்கள் வரை அலுவல் மும்முரமாக இருந்தது; பிறகு சுருங்கியது. வாரத்துக்கு ஒருமுறை 'பார்க்கர்' பார்ப்பார். சுந்தரனார்க்கு ஓய்வு மிகுதியாகக் கிடைத்தது. நூல்கள் படிப்பார்; கட்டுரைகள் வரைவார்; பாட்டுக்கள் தீட்டுவார். இந்நாளிலேதான் கதிரைவேலரின் ஊனுடல் பிரிந்தது. அவர் வரலாற்றை ஸ்பென்ஸரில் அலுவலாற்றும்போதே எழுதி முடித்தார். 1908 வரையில் அங்கே வேலை பார்த்தார். பிறகு வெளியேறினார். வெளியேறிய காரணம்:

அந்நாளிலே வங்காளப் பிரிவினையை எதிர்த்துச் சுதேசி இயக்கம் நாடு முழுவதும் எழுந்தது. அச்சமயம் விபின சந்திர பாலர் சென்னைக் கடற்கரையிலே முழக்க

மிட்டார். அது சென்னை மாகாணத்தைத் தூக்கத்தி னின்றும் விழிக்கச்செய்தது, சுந்தரனுர் மனம் சுதேசி இயக்கத்திலே பற்றுக்கொண்டது. மற்றும் அந்நாளிலே லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பெற்ற செய்தி மக்கள் உள்ளத்திலே தீயை மூட்டியது. இந்தியப் பத்திரிகை உலகம் அதற்கு ஆக்கம் அளித்தது. அரவிந்தரால் நடத்தப்பெற்ற 'வந்தே மாதரம்' என்ற செய்தியிதழ் சுந்தரனுர் கையிலேறி உள்ளத்திலே நிலைபெற்றது. அக்காலத்தில் 'கீர் ஹார்ட்டி' என்பவர் சென்னையில் தங்கியபோது ஸ்பென்ஸருக்கு வந்தார். அவருடைய தோற்றமும் சுந்தரனுர்க்குக் கிளர்ச்சி உண்டாக்கியது. அவர் வரலாற்றைப் பத்திரிகைகளிற் படித்திருந்தார். ஸ்பென்ஸரிலே சுதேசி இயக்க வளர்ச்சி செய்ய எண் ணினுர். குறிப்பிட்ட அலுவல் நேரத்திற்கு முக்கால் மணிக்கு முன்னரே வந்துவிடுவார். அங்குள்ள பணியா ளரைக் கூட்டிச் சுதேசி இயக்கத்தைப் பற்றி எடுத் துரைப்பார்; வந்தே மாதரம் படிப்பார்.

வந்தேமாதரம் என்பதற்கு 'வெள்ளையரைக் கட்டி யடித்தல்' என்று எவனே குறும்பனெருவன் திரி பொருள் கூறிவிட்டான். அது வெள்ளையரை மருட் டியது. மானேஜிங் டைரக்டருக்கு எட்டியது. ஒரு நாள் அவர் சுந்தரனுரை அழைத்து எச்சரிக்கை செய் தார். அது பொருத சுந்தரனுர் அன்று பகல் நேரத்திலே வைஜயந்தி அச்சுக்கூடத்திலே அலுவல் புரியும் தமையனு ரிடம் அறிவித்து அவர்தம் ஆணைபெற்று இராஜிநாமா செய்தார். மானேஜர் இவரை வரவழைத்து, "மானே ஜிங் டைரக்டர் வழங்கிய எச்சரிக்கை உம்மை வேலையி னின்றும் விலகத் தூண்டியது. அந்த எச்சரிக்கை உம் மிடம் கொண்ட நல்லெண்ணத்தினின்றும் பிறந்த

தென்று நான் நன்கறிவேன். இந்தக் கம்பெனியில் நல்ல பெயர் பெற்றவருள் நீரும் ஒருவர். நீர் இளைஞர்; நான் வயதானவன். என் மொழிக்கு இணங்கி இராஜி நாமாவைத் திரும்பப்பெற்றுக்கொள்க,'' என்று வலியுறுத்தினர். எனினும், சுந்தரனார் இணங்கவில்லை. பின்னர் மானேஜர் மனவருத்தத்துடன் வாழ்த்துக்கூறி நல்ல தகுதித்தாள் ஒன்றும் வழங்கி விடுத்தனர்.

**அச்சகத்தில்**

ஸ்பென்ஸர் கம்பெனி அலுவலை விட்டவுடன் சுந்தரனார், தம் தமையனார் உலகநாத முதலியாருடனும் நண்பர் சிவசங்கர முதலியாருடனும் கலந்து சிந்தித்தனர். அதன் பயனாக, 'உமாபதி குருப்பிரகாசம் பிரஸ்' தோன்றியது. பெரிய புராணத்தைச் சஞ்சிகைகளாகச் சுந்தரனாருடைய குறிப்புரையுடன் வெளியிட்டனர். திருமந்திரம் இவருடைய பார்வையிலே பதிப்பிக்கப் பெற்றது. வெளி வேலைகளும் சில வந்தன. ஈராண்டுகள் கழிந்தன. அன்னையாருடைய நகையையும் சிறிது பொருளையும் விழுங்கிவிட்டு அச்சகம் பிரிந்தது. ஊதியம் தராததுடன் பொருளிழப்பையும் உண்டாக்கிய அதனை வேறொருவர்க்கு விற்றுவிட்டனர். பெரியபுராணத்தை வேறோர் அச்சகத்திலே பதிப்பித்தனர். குடும்பம் கலக்கமுற்றது. சுந்தரனார் உளம் கடற்கரையிலே அமைதிபெறும். வீட்டிற்கு வந்தவுடன் அலையிடைத் துரும்பென அல்லலுறும்.

**நடுத்தரப் பள்ளியில்**

அந்நாளில் ஆயிரம் விளக்கில் வெஸ்லியன் மிஷன் சார்பில் நடுத்தரப் பள்ளி ஒன்று ஆதிதிராவிடர்களுக்கென நடந்தது. ஜான் இரத்தினம் பிள்ளை என்பவர்

தலைமையாசிரியராக இருந்தார். நம் சுந்தரனாரின் பழைய நண்பர் டானியல் சிங் என்பவருடைய வற்புறுத்தலால் முதல்பாரத்திற்கு ஆசிரியராக அலுவல் ஏற்றுக் கொண்டார். 1910 ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து ஆறாண்டுகள் பணி செய்தார்.

ஆயிரம்விளக்குப் பள்ளியென எல்லோரும் அதனைக் கூறுவர். ஆதிதிராவிடர்களுக்கென அமைந்த பள்ளி களில் சென்னை மாகாணத்தில் இதுவே சிறந்ததும் பெரியதுமாக விளங்கியது. அரசாங்க உதவியும் மிகுதி.

தலைமையாசிரியர் ஜான் இரத்தினம் பிள்ளை முதல் வாரத்திலேயே இவருடைய தமிழறிவையும் தமிழ் கற் பிக்குந் திறமையையும் அறிந்து மகிழ்ந்து இரண்டாம் பாரத்திற்கும் மூன்றாம் பாரத்திற்கும் தமிழ் கற்பிக்க ஏற்பாடு செய்தார். மற்றும் புதியதாக, 'வெஸ்லியன் டெக்னிகல் இன்ஸ்டிடியூட்' என ஓர் அமைப்பைத் தொடங்கி நம் சுந்தரனாரைப் 'புக்கீப்பிங்' கற்பிக்க வழி செய்தார். இவ்வாறு தலைமையாசிரியர் ஆதரவும் அன்பும் இவருக்குக் கிடைத்தது. தலைமையாசிரியர் இயற்கையாகவே ஆசிரியரிடமும் மாணவர்களிடமும் அன்புடையவர். சுந்தரனார் அவருடைய அன்பிலே பிணிப்புற்றார்

1911-ம் ஆண்டு மன்னர்பிரான் முடிசூட்டு விழா வின்போதும் ஆயிரம் விளக்குப்பள்ளி நடத்திய கொண் டாட்டத்தின்போதும், பள்ளி நிலையம் மவுண்ட்ரோட்டி லிருந்து உட்ஸ் ரோட்டிலே 'ஷாண்டன்' என்ற பெரு நிலையத்திற்கு மாற்றப்பட்டபோதும் நம் சுந்தரனார் பிற ஆசிரியர்களுடன் கூடிச்செய்த பணி வெஸ்லியன் மிஷன்

மேற்பார்வையாளரான ஜேம்ஸ்கூலிங் துரையை மகிழ்வித்தது.

முதல் மூன்றாண்டுவரை சோதனை செய்துவந்த சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் தமிழறிஞர். ஒரு முறை சுந்தரனார் தமிழ் கற்பிப்பதை நோக்கியபிறகு, எப்போதும் சோதனைக்கே வருவதில்லை. தமிழ்க்கலைகளைப்பற்றி அளவளாவுவதுடன் நின்றுவிடுவார்.

நான்காம் ஆண்டு வந்தவர் ஆசிரியர்களுக்கு அச்சமூட்டுபவராக நடந்து கொண்டார். குற்றங்காணும் நோக்கமே உடையவர். அவர் சோதனைக்கு வந்தபோது நான்காம் வகுப்பிலே நுழைந்தார். எதிர் வகுப்பிலிருந்த இவரைக் கூப்பிட்டு 'டிக்டேஷன்' கொடுக்கச்சொன்னார். 'டிக்டேஷன்' தொடங்கியவுடன் அவர் வேறு வகுப்பிற்குப் போய்விட்டார். 'டிக்டேஷன்' முடிந்தவுடன் இவரும் தம் வகுப்பிற்குப் போய்விட்டார். இதனை யுணர்ந்த சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் சினங் கொண்டார். 'தம் ஆணையின்றி அவ்வகுப்பை விட்டுப்போனது தவறு' என்றார். மறுநாள் அவர் வந்தபோது சுந்தரனார் இரண்டாம் பாரத்திற்குத் தமிழ் கற்பித்துக்கொண்டிருந்தார். அதைச் சிறிது நேரம் கவனித்துவிட்டு வேறு வகுப்பிற்குப் போய்விட்டார். முதற்பாரத்திலே சுந்தரனார் கணக்குக் கற்பித்துக் கொண்டிருக்கும்போது வந்தார். மனக்கணக்குத் தாமே கொடுத்தார். விடையைப் பார்த்தபின் ஒரு மாணவனை விளித்து 'எம்முறையில் விடை கண்டாய்?' என்றார். அவன் ஒரு முறையைக் கூறினான்; மற்றொரு மாணவனை வினவியபோது அவனும் அதேமுறையைக் கூறினான். அம்முறையே இவ்வகுப்புக்குத் தக்கதெனச் சுந்தரனார் கூறினார். இன்ஸ்பெக்டர் வெகுண்டார். இம்முறை தவறு

எனக் கூறிவிட்டுத் தாம் ஒருமுறையைக் கூறினார். 'இம் முறை இவ்வகுப்புக்கேற்றதன்று' என அஞ்சாமல் இவர் கூறினார். இன்ஸ்பெக்டர் சினத்துடன் வேறு வகுப்பிற்குப் போய்விட்டார். சுந்தரனார் மனம் அழன்றது. ஒரு கடிதத்தில், 'என்னைத் தாங்கள் பள்ளியை விடுத் தகற்றலாம்; அன்பிற்கு நான் எளியனேயன்றி அநியாய அதிகாரத்திற்கு அஞ்சி எளியனாகேன். என் முறையே சிறந்ததெனை எங்கும் தங்களுடன் வாதிக்கச் சித்தமா யிருக்கிறேன்' என்ற பொருள்பட எழுதி இன்ஸ்பெக்டருக்கு அனுப்பிவிட்டார். இன்ஸ்பெக்டர் தம் திமிர் மனப்பான்மையை விடுத்துச் சிந்தித்தபோது சுந்தரனார் முறையே சிறந்ததென உணர்ந்து தலைமையாசிரியர் வாயிலாகச் சமாதானம் செய்து கொண்டார். இந்த நிகழ்ச்சி நம் சுந்தரனாரின் அஞ்சாமைக்கு அறிகுறியாகும்.

திருமணம்

திருமணம் புரிந்துகொள்ளவேண்டா என இவர் வெறுத்து வந்தார். இவர் நிலையை உணர்ந்த பூவை - அஷ்டாவதானம் - கலியாணசுந்தர முதலியார் இவரை ஒரு மடத்திற்கு அனுப்ப விழைந்தார். ஜான் இரத்தினம் பிள்ளை, 'நீங்கள் இப் பள்ளியில் நல்ல மரம்போல மாண வர்கட்கும் பயன்பட்டு வருகிறீர்கள். மடத்தில் இத் துணையருக்கு நீங்கள் பயன்படமுடியுமா? நீங்கள் மட்டும் ஒருவேளை நலம் பெறலாம். சிந்தனை செய்க!' என்ற கருத்துப்படப் பேசிப் பள்ளியிலே பற்றுக் கொள்ளுமாறு செய்தார்.

பின்னர் இவருக்கே திருமணத்திலே விருப்புண்டா யிற்று. பூவை. கலியாணசுந்தர முதலியார் நன்கறிந்த திரிசிரபுரம் கிருஷ்ணசாமி முதலியார் திருமகள்

கமலாம்பிகையை மணம் முடிக்க இவர் தமையனார் ஏற்பாடு செய்தார். திருமணநாள் நெருங்க நெருங்கத் திருமணம் அவசியமா என்னும் சிந்தனையினால் குழம்பினார் சுந்தரனார். திருமணத்தை நிறுத்திவிடுமாறு தமையனாரிடம் கூறினார். இதனை உணர்ந்த தேவப்பிரசாதம் பண்டிதர் என்னும் பெரியார் அரைநாள்வரை வாதம் புரிந்து திருமணத்திற்கு ஒப்பும்படி செய்தார். 13—9—1912-ல் இருளப்பன் தெருவிலே மணமகளின் நல்லம்மான் பூ. மு. முருகேச முதலியார் இல்லத்திலே திருமணம் நடந்தது. தேவாரம் ஓதினர். ஜான் இரத்தினம் பிள்ளை கிறிஸ்து ஜெபம் செய்து வாழ்த்தினார்; வெள்ளிச் செம்பு மணப்பரிசாக வழங்கினார். மாலையிலே பரத நாட்டியமும் எக்பர்ட் ரத்தினம் என்னும் கிறித்துவருடைய திருக்கூட்ட வாழ்த்தும் நடைபெற்றன.

திருமணம் முடிந்த மறுநாள் மாலையில் இராயப்பேட்டைக்கு மணமக்கள் வந்தபிறகு சச்சிதானந்தம் பிள்ளையவர்களால் வள்ளி திருமணம் நடைபெற்றது.

மணமகளார் தந்தை கிருஷ்ணசாமி முதலியார் கார்டன் உட்டிராப்பிலே தலைமைக் கணிதராக இருந்தார். கமலாம்பிகை தம் பெரிய தந்தையாரிடமே வளர்ந்தார். சிறிது கல்விச் செல்வமும் பெற்றார். மணம் முடிந்தபின் புலமைமிக்க தம் கணவரிடம் மேலும் கல்வியறிவு பெற்றார். திருக்குறளிற் கூறிய 'வாழ்க்கைத் துணைநலம்' அவரிடம் இயல்பாக அமைந்திருந்தது; பொறுமை மிக்கவர்; வீட்டிலுள்ள பிறரிடம் அன்புடன் நடந்துகொள்வார்; பெண்களிடம் இயல்பாக அமைந்த நகைப்பித்தற்றவர். நம் சுந்தரனார் தம் மனைவிக்கு நன்றாகக் கல்விகற்பிக்க விரும்பினார். அதற்காகத்

தனிக்குடித்தனம் வேண்டுமென எண்ணினர். ஆனால் அவ் அம்மையார், 'கல்வியிலும் குடும்ப ஒற்றுமையே. பெரிது' என மறுத்துவிட்டார். இத்தகு உயர்பண்புடைய மனைவியைப் பெற்றதற்குச் சுந்தரனார் மகிழ்ந்தார்.

வெஸ்லி கல்லூரியில்

ஆயிரம் விளக்குப் பள்ளியில் ஆதிதிராவிடச் சிறுவர்களுடன் பழகும் பேறு கிடைத்ததனால் தீண்டாமை ஒழிப்புத் தன்மையும், ஜான் இரத்தினம் பிள்ளையின் கூட்டுறவினாலே கிறித்துவச் செல்வம் கிடைத்ததனால் சமரச மனப்பான்மையும் அந்தண்மையும் நம் சுந்தரனார் கிடைக்கப்பெற்றார். மாணவராக இருக்கும்போது கதிரைவேற் பிள்ளையுடன் பழகியதால் பிறமத வெறுப்புண்டாகியது; சைவசமயத்திலேமட்டும் விருப்புண்டாயிற்று; அந்நிலை இங்கே ஆசிரியராக வந்தபிறகு பிற மதங்களையும் மதிக்கும் மனப்பான்மையாகப் பெருகியது.

இந்நிலையில் வெஸ்லி கல்லூரியிலே நீண்டநாள் தலைமைத் தமிழாசிரியராக இருந்த சே. கிருஷ்ணமாச்சாரியார் விலகினார். ஜான் இரத்தினம் பிள்ளையின் தூண்டுதலால் இவர் அப் பதவிக்கு முயற்சித்தார். பல விண்ணப்பங்களுக்கிடையே, வெஸ்லி கல்லூரியின் பழைய மாணவர் என்ற முறையாலும், வெஸ்லிமிஷன் சார்புடைய பள்ளியிலே ஆசிரியராக இருப்பதாலும் இவர் விண்ணப்பமே எடுத்துக்கொள்ளப்பெற்றது.

இவருக்கே அவ்வேலை கிடைக்குமென்ற செய்தி வெளியிலே பரவியதும் பலர் முட்டுக்கட்டை யிட்டனர். முட்டுக்கட்டை யிட்டவர்கள் கூறிய காரணங்கள் இரண்டு. சில திங்கட்கு முன்னர் வெஸ்லி கல்லூரி மாணவர் சிலருக்குத் தலைவராற் கசையடி கிடைத்தது.

இது தவறென்று அன்னிபெஸன்டு அம்மையைத் தலைவராகக்கொண்ட 'நியூ இந்தியா' என்ற பத்திரிகை கிளர்ச்சி செய்தது. அன்னிபெஸன்டு அம்மையின் தொடர்புடன் இராயப்பேட்டையில் இருந்த சகோதர சங்கத்திலே கலியாணசுந்தரனார் ஒரு பொறுப்பாளர், எனவே, இதனைத் திரித்து, 'இவர் தியோசாபிகல் சங்கத்தைச் சேர்ந்தவர். கசையடிக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்' என்று கூறினர். மற்றும், அக்காலத்திலே அன்னி பெஸன்டு அம்மையாரால் இராயப்பேட்டை சகோதர சங்கத்தின் சார்பிலே 'பவானி பாலிகா பாடசாலை' என ஒரு பெண்பள்ளி திறக்கப்பெற்றது. இதனை இராயப் பேட்டை ஆண்டித் தெருவிலிருந்த 'வெஸ்லியன் பெண் பள்ளி'க்குப் போட்டியாகத் திறந்ததென்றும், சுந்தரனார் இச் செயலிலே தொடர்புடையவரென்றும் கூறினர். இந்த இரண்டு காரணங்களும் வெஸ்லி கல்லூரித் தலைவரை மனமாற்றஞ் செய்துவிட்டன. எனவே, நமசிவாய முதலியார், சச்சிதானந்தம்பிள்ளை முதலியோர் இவர் பொருட்டுச் செய்த முயற்சிகள் பயனற்றுப்போயின. இறுதியாக ஜான் இரத்தினம் பிள்ளை தலைவரைக் கண்டு வற்புறுத்திய பிறகே தலைவரின் உள்ளம் இசைந்தது. 1916-ஆம் ஆண்டு ஜூன் இறுதி வாரத்திலே அலுவல் பெற்றார்.

வேலை பெற்ற அன்றே, 'யான் தியோசாபிகல் சங்கத்திற் சேர்ந்தவனல்லன். அச்சங்கத்திற்குப் போய்வருவது மட்டும் உண்டு, சகோதர சங்கத்தின் பொறுப்பாளன் என்பது உண்மையே; பவானி பாலிகா பெண்பாடசாலை போட்டிக்காக ஏற்படுத்தியதன்று. கோள் சொன்னவரைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்,' என்று தலைவரிடம் கூறினார்.

தலைவர் உள்ளம் நெகிழ்ந்தது. 'நீங்கள் இவற்றை யெல்லாம் எப்படிக் கேள்வியுற்றீர்கள்! எதில் அங்கம் பெற்றிருந்தால் என்ன? கிறித்துவநெறி பரவிய நோக்க முடையது. கோள் சொன்னவர் பெயரைத் தெரிந்து கொள்ள விரும்புவது நல்லதன்று. ஆயிரம் விளக்குப் பள்ளியில் எப்படித் தொண்டு செய்தீர்களோ, அப்படியே இக் கல்லூரியிலும் தொண்டு செய்துவாருங்கள். நீங்கள் செய்யப்போவது ஆண்டவன் பணி' என்று நயம்பட உரைத்துத் தேற்றினர்.

சே. கிருஷ்ணமாச்சாரியார் காலத்திலே தமிழாசிரியர் ஊதியம் மிகக் குறைவு. அதனை உயர்த்த அவர் சிறிதும் முயற்சி செய்யவில்லை. சுந்தரனுர் ஆசிரியரான பிறகு தலைவரிடம் கூறி முதன்முதலாக ஊதியம் உயர வழி செய்தார். பிறகு, படிப்படியாகப் பிற வசதிகளும் கிடைத்தன. வெஸ்லி கல்லூரி இரண்டாந்தரக் கல்லூரி. தமிழாசிரியர் நான்காம் பாரத்திலிருந்து இண்டர்மீடியட்வரை பாடஞ் சொல்லல் வேண்டும். அக்குறையையும் மாற்றி வேறொரு தமிழாசிரியரை அமர்த்தும்படி ஏற்பாடு செய்தார். இவருடைய நண்பர் சிவசங்கர முதலியாருக்கே அப்பணி கிடைத்தது.

சுந்தரனுர் அக்கல்லூரியில் ஒன்றரை யாண்டுகளே பணிபுரிந்தார். அதற்குள் தலைவராலும் பிற ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் மதிப்படைந்தார். உயர்நிலைப்பள்ளி வகுப்பிற் பாடத்தளவிலே நின்றுலும் கல்லூரி வகுப்பிலே மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் வளர்த்தார். மாணவர்கள் இவரை உயிரெனப் போற்றினர். தமிழ்ச்சங்கமொன்று அப்பள்ளியிலே இவர்காலத்திலே சச்சிதானந்தம் பிள்ளை தருக்க போதகாசிரியராயிருந்தபோது தசரத இராமசாமி என்ற

மாணவர் முயற்சியாலே எழுந்தது. அதன் சார்பிலே வசிஷ்ட பாரதியார் ஒருமுறை பேசினுர். தமிழ்ச்சங்க ஆண்டு விழாவிலே ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர் தலைமையிலே மாணிக்கநாயக்கர் பேசினுர். இவ்வாறு சிறப்புற நம் கலியாணசுந்தரனுரால் அச் சங்கம் நடைபெற்றது.

இக் காலத்திலே சுய ஆட்சிக் கிளர்ச்சி நாடெங்கும் வீறுறத் தோன்றியது; நாளுக்குநாள் பெருகியது. இராயப்பேட்டை சகோதர சங்கத்தின் இருப்பிடம் அரசியற் கழகமாகியது. சுய ஆட்சிக் கிளர்ச்சியை ஒடுக்க ஜஸ்டிஸ் கட்சியும் தோன்றியது 16—6—1917-இல் அன்னி பெஸன்ட் அம்மையார் சிறை புகுந்தார். சுந்தரனுர் நெஞ்சம் அரசியலிலே பாய்ந்தது; கல்லூரியை விடுத்து நாட்டுப்பணியிலே ஈடுபட விழைந்தது. அந்த விழைவு சிறிது சிறிதாக வளர்ந்தது. கல்லூரித் தலைவரிடம் சுந்தரனுர் தம் கருத்தைத் தெரிவித்துக்கொண்டார். அவர் ‘எதையும் எண்ணித்துணிக! யூனிவர்சிடி கமிஷன் நவம்பரில் வரும். அது வந்துபோனபிறகு சிந்திக்கலாம்’ என்ருர். கமிஷன் வந்துபோயிற்று. இவரைப் பிரியத் தலைவர் உளங்கொள்ளவில்லை. பலரைக்கொண்டு தடுத்தார். தாமே நேரிலும் புகன்ருர். பொங்கித் ததும்பிக் கரைபுரண்ட அரசியலுணர்ச்சி தடைபடவில்லை. 5—12—1917-இல் ஆசிரியர் பணியிலிருந்து விலகினுர். 20—12—1917-இல் மாணவர்களால் நன்மொழி வழங்கப்பெற்றது. அப்போது ஆசிரியர்களும் மாணர்வர்களும் காட்டிய அன்பு கலியாணசுந்தரனுரைத் திகைப்புறுத்தியது அந்த அன்புக்கடலிலிருந்து நீந்தி வெளியேறுவது மிகவும் அரிய செயலாயிற்று.

# ச. நாட்டுப்பணி

**தேசபக்தன்**

நல்லாசிரியராகத் தொண்டியற்றிவந்தாலும் நாட்டு நிலையிலேயே இவர் உள்ளம் உழன்று வந்தது. அதனுலேயே ஆசிரியராகுமுன் ஸ்பென்ஸர் கம்பெனியிலிருந்து விலகினர். பின்னர் அன்னிபெஸன்டு அம்மையாரும் திலகரும் நடத்திய அறப்போரிலே நாடு கிளர்ந்தெழுந்தது. அன்னிபெஸன்டு அம்மையார் வெளியிட்ட 'நியூ இந்தியா' என்னும் பத்திரிகை நாடெங்கும் அரசியல் ஆர்வத்தை ஊட்டியது. இவையெல்லாம் சுந்தரனரைத் தூண்டிவிட்டன. எனவே, சுப்பராய காமத் என்பவரும் இவரும் இராயப்பேட்டையிலே 'சகோதர சங்கம்' என ஒன்று கண்டனர். இதற்குத் தலைவர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர்.

இந்நிலையிலே ஜஸ்டிஸ் கட்சியினர் 'பிராமணரல்லாதார் நலவுரிமை'யை நாடிக் கிளர்ந்தெழுந்தனர். ஆங்கிலம் தமிழ் தெலுங்கு மொழிகளிலே மூன்று செய்தித்தாள்கள் நாளிதழ்களாக வெளியிட்டனர். ஆங்கில 'ஜஸ்டிஸ்' தாளும் தமிழ்த் திராவிடனும் வெளியிடும் செய்திகள் சுந்தரனர்க்குக் கலக்கத்தையுண்டாக்கின. காங்கிரசிற்கு எதிரிடையாக இவை புரட்சியுண்டாக்கும் என எண்ணினர்.

அப்போது "சென்னை மாகாணச் சங்கம்' என ஒன்று ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிராகப் பிராமணரல்லாதாரால் உண்டாயிற்று. திவான் பகதூர்—கேசவப்பிள்ளை தலைவராகவும். லாட்—கோவிந்ததாஸ், சல்லா—குருசாமி

செட்டியார், ஈ. வெ. இராமசாமி நாயக்கர், நாகை—பக்கிரிசாமி பிள்ளை, சீகாழி—சிதம்பரநாத முதலியார், தஞ்சை—சீநிவாச பிள்ளை. ஜார்ஜ் ஜோசப் முதலியோர் உப தலைவர்களாகவும், தி. வி. கோபாலசாமி முதலியார், குருசாமி நாயுடு, டாக்டர்—வரதராஜலு நாயுடு, சர்க்கரைச் செட்டியார் ஆகியோரும் இவரும் அமைச்சர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். பல இடங்களில் மாநாடுகள் நடந்தன. அங்கு நம் சுந்தரனார் செய்த சொற்பொழிவுகள் அறிஞர் மனத்தைக் கவர்ந்தன. பொதுக்கூட்டங்களிலே தமிழிலே பேசவேண்டும் என்று ஒருமுறை முடிவுசெய்தனர்.

இவ்வாறு ஜஸ்டிஸ் கட்சியைத் தாக்கி வந்ததுடன் நில்லாமல் ஒரு பத்திரிகை வெளியிடவேண்டும் எனவும் விரும்பினர். அவ் விருப்பம் கிளர்ந்தெழுந்து 'தேச பக்தன்' என்ற பத்திரிகையை வெளியிட முயற்சி செய்தது. 5—12—1917-இல் கல்லூரி ஆசிரியர் பதவியைச் சுந்தரனார் விட்டுவிட்டு 7—12—1917-இல் தேச பக்தன் ஆசிரியராக அமர்ந்தார். சுப்பராய காமத்தும் குமாரசாமி செட்டியாரும் அமைத்த 'பிரிட்டிஷ் இந்தியா பிரஸ்' என்னும் அச்சகத்திலே தேசபக்தன் உருவானான். அச்சக மேற்பார்வையாளராக உலகநாத முதலியாரை இருத்தினர். நம் சுந்தரனார்க்குத் துணையாசிரியர்களாக முதலில் வே. சாமிநாத சர்மா, சேஷாத்திரி சர்மா, பழனிவேல், சம்பத், வேங்கடாச்சாரியார் என்பவர்களும் பின்னர் குலாம் அமீது, பரலி—நெல்லையப்பர், இராஜகோபால், நடேசன் என்பவர்களும் அமர்ந்தனர்.

பிறகு, தேசபக்தன் 'லிமிடெட்' ஆதரவு பெற்றது. சக்கரவர்த்தி — இராசகோபாலாச்சாரியார், டாக்டர்—ராஜன், டாக்டர்—வரதராஜலு, ஈ. வெ. இராமசாமி

நாயக்கர், ஆதிநாராயண செட்டியார், ஜார்ஜ் ஜோசப், லாட் கோவிந்ததாஸ் முதலியோர் டைரெக்டர்களாயினர். சுப்பராய காமத் அமைச்சரானார்.

தமிழாசிரியராயிருந்தபோது இலக்கணக் கட்டுப் பாடுடைய தொடர் மொழிகளையும் கோப்பு மொழிகளை யும் விழைந்தெழுதிய சுந்தரனார் நாளிதழ் ஆசிரியராக மாறியவுடன் கருத்துக்களை எளிதில் விளக்கும் சொற் களாற் சிறு சிறு தொடர்மொழிகளை அமைத்தெழுதத் தொடங்கினார். இதுவே, இவருக்குப் பிற்காலத்திற் பெரும் பகுதியான தமிழ்நடையாயிற்று. எனினும், இவர் நடை இலக்கிய நடையே.

இவரால் தமிழ்நடை யமைந்த மற்றொரு சிறப்புக் குறிப்பிடத் தக்கது. அந் நாளிலே நாட்டுமொழிச் செய் தித் தாள்களிலே அயல்மொழி இடம் பிடித்துக்கொள் ளும். அரசியல் குறியீடுகள் அப்படியே எழுதப்பெறும். தேசபக்தன் படிப்படியே அயல்மொழித் தலையீட்டை ஒழித்தது. தேசபக்தன் தமிழாக்கிய அரசியல் சொற் களும் சொற்றொடர்களும் குறியீடுகளும் இப்போது செய்தித் தாள்களிலும் மேடைப் பேச்சுகளிலும் ஏற்ற முற்று அரசுபுரிகின்றன. மற்றும், அந்நாளில் அரசியல் தலைவர்கள் தமிழிற் பேச வராதென்று கூறுவதைப் பெருமையாகக் கொண்டிருந்தார்கள். தேசபக்தன் அதனைக் கண்டித்தெழுதி வந்ததனால், அவர்கள் தமி ழிலே பேசுவதைக் கைக்கொண்டனர். தமிழறிந்த ஐரோப்பியப் பாதிரிமார் பலர் இதற்காகவே தேசபக் தன் சந்தாதாரராயினர். அந் நாளிலே சட்ட சபையில் ஆங்கிலமே பேசப்படும். தமிழர்க்குத் தமிழ் நினைப்பே வருவதில்லை யெனலாம். இத்தகைய நிலைமையிலே

சேலம் பி. வி. நரசிம்ம ஐயர் என்பார் சட்டசபையில் ஒரு முறை தமிழிற் பேசினார். தேசபக்தனுக்கு அது மகிழ்ச்சியை யளித்தது. இன்பத்தேன் பிலிற்றும் தமிழிற் பேசியதற்காக ஒரு குறிப்பையும் எழுதியது.

முன்னரே 'திராவிடன்', 'ஜஸ்டிஸ்' போன்ற ஜஸ்டிஸ் பத்திரிகைகளுக்குப் போட்டியாகத் 'தேசபக்தன்' எழுந்தமை குறிப்பிடப்பட்டதன்றோ? திராவிடன் வகுப்பு வாதத்தால் நாட்டுக்குத் தீமைவிளைவிக்கிற தென்று தேசபக்தன் எழுதும் வகுப்புவாதத்தால் இப்போது நன்மையே விளையும் என்று நன்மைகளை யெல்லாம் திராவிடன் குறிப்பிடும். இவ்வாறு இரண்டும் வாதம் புரியவுந் தலைப்பட்டன.

தேசபக்தன் செய்த தொண்டுகளில் ஒன்று சென்னைமாகாணச் சங்கத்திற் காதரவானது. மாண்டேகு முன்னிலையில் சான்றுகூற முதலிற் சென்னை மாகாணச் சங்கத்தின் பெயர் காணப்படாமல் இருந்தது. தேசபக்தன் எழுதிய கட்டுரையாற் பல இடங்களிற் கூட்டங்கள் கூடிச் செய்த முடிவினாலே சென்னை மாகாணச் சங்கத்தின் பெயரையும் (17—12—1917-இல்) அரசாங்கத்தார் சேர்த்தனர். இச் செயல் தேசபக்தன் தோன்றிய சில நாட்களிலேயே நடைபெற்றதைக் கண்ட அரசாங்கத்தின் நோக்குத் தேசபக்தன் மீது விழுந்தது. அரசாங்கத்தின் தவறுதல்களை எடுத்துக் காட்டவும் நாட்டுநலனிலே ஈடுபடவேண்டிய செயல்களைக் குறிப்பிடவும் தேசபக்தன் சளைப்பதில்லை, சுந்தரனாருடைய எழுத்துவன்மை நாட்டுக்குப் புலனாயிற்று. அரசாங்க அதிகாரிகளால் ஆங்காங்கே நடைபெறும் தவறுதல்கள் கடிதவாயிலாகத் தேசபக்தனுக்குத்

தெரிந்துவிடும். உடனே அவை வெளியாகும். அதிகாரிகள் தேசபக்தனுக்கு அஞ்சினர்.

ஒரு நாடு நன்னிலையெய்தத் தொண்டு செய்வோர் நாட்டுத் தலைவரெனப் போற்றப்படுவர். நாடும் அதனை முன்னுக்குக் கொண்டுவரப் பாடுபடும் தலைவரும் வேறல்லர். அங்ஙனம் ஒன்றித் தந்நலத்தைத் துறந்து தொண்டாற்றுந் தலைவரைப் போற்றுதல் நாட்டின் கடமை. 'தேசபக்தன்' இந்நிலையிலே சிறந்து நின்றது. பாலகங்காதர திலகர், காந்தியடிகள், அன்னிபெஸன்டு அம்மையார் போன்ற தலைவர்களின் புகழையும் தொண்டையும் நாட்டுமக்களிடைப் பரப்பியது, வ. வே. சு. ஐயரும் சுப்பிரமணிய பாரதியாரும் புதுவையைப் புகலாகக் கொண்டிருந்தபோது, 'பிரிட்டிஷ்' எல்லையில் உலவ அவர்களுக்கு உரிமை வேண்டுமென்ற கிளர்ச்சியை எழுப்பிப் பணிபுரிந்தது. கிலாபத் கிளர்ச்சி, சத்தியாக்கிரக இயக்கம், பஞ்சாப் படுகொலை முதலியன நிகழ்ந்த வேளைகளில் 'தேசபக்தன்' எரிமலையாகப் பொங்கியது.

தேசபக்தனில் சுந்தரனார் எழுதிய ஆசிரியக் கட்டுரைகளிற் சில 'தேசபக்தாமிர்தம்' என்ற நூல்வடிவாக வெளிவந்தது.

சென்னையில் தொழிலாளர் இயக்கத்தைத் தோற்றுவிக்க முயன்றவை 'நியூ இந்தியா'வும் தேசபக்தனும் ஆகும்.

**வாழ்க்கைத்துயர்**

தேசபக்தன் ஆசிரியராக இருக்கும்போது ஒரு பேரிடி சுந்தரனாரைத் தாக்கியது. கமலாம்பிகை இவருக்கு வாழ்க்கைத் துணைவியராக ஆறுண்டுகளே இருந்தார். அம்மையார் முகம் அனிச்சம் என்றும் சிறிது

கடிந்தாலும் வாடிவிடும் என்றும் அவ்வாறு வாடும்படி விடத் தம் மனம் பொறுதென்றும் சுந்தரனார் தம் வாழ்க்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கின்றனர். அம்மையார் இனிமையாகப் பாடுவார். திருவொற்றியூர்க்குச் சென்று கடற்கரையிலே அமர்ந்து வாழ்க்கைத் துணைவியின் பாடல் கேட்டு மகிழ்வது சுந்தரனார் வழக்கம். பட்டினத்தார் கோயிலை வழிபடுவார்கள். திருவொற்றியூர்த் தேவாரம் இனிமையாக இசைக்கப் பெறும். சில பாடல்களுக்குச் சுந்தரனார் பொருள் கூறுவார். திருவொற்றியூரிலே அம்மையாரின் பெரிய தகப்பனார் பாலசுந்தர முதலியார் இருந்தார். அவரில்லத்திற்குச் செல்வார்கள் இருவரும்.

இவர்களுடைய காதற் கொடியிலே மலர்ந்த மலர்கள் இரண்டு. முதலில் ஓர் ஆண் குழந்தை மலர்ந்தது. அது அவ்வாரத்திலேயே மறைந்தது. பிறகு மலர்ந்தது பெண் குழந்தை. திலகவதியெனப் பெயரிட்டனர் ஓராண்டு வளர்ந்தது. பின்னே அதுவும் பிரிந்தது.

தேசபக்தன் தொண்டிலும், தொழிலாளர் சேவையிலும் சுந்தரனார் ஆர்வத்துடன் உழைத்துக்கொண்டிருந்தபோது கமலாம்பிகை நோய்வாய்ப்பட்டார். எலும்புருக்கிநோய் அம்மையாரின் பரம்பரைச்சொத்து. அது அம்மையாரின் அன்னையாரையும், தமையனார் ஒருவரையும் எடுத்தேகியது. அத்தகைய கொடிய நோய் சுந்தரனார் வாழ்க்கைத்துணையிலே வந்து புகுந்தது. மெல்ல மெல்ல அவர்தம் நல்லுடலைக் கரைத்துக் கொண்டு வந்தது. தேசபக்தனும் தொழிலாளர் இயக்கமுமே சுந்தரனாரின் கருத்தை மிகுதியும் இக் கலக்கத்திலே புகுத்தாமற் காத்தன. நோய் பற்றிய மூன்று

திங்கள்வரை பிறர்பணியை ஏற்கவேண்டிய நிலையை அடையாமல் அம்மையார் உலவினர். எவ்வளவோ சிகிச்சைகள் நடைபெற்றன. பயன் இல்லை. படுக்கையிற் கிடத்தியது அந் நோய். அவ் வேளையில் சுந்தரனாரின் தமக்கையாரும் அண்ணியாரும் வயது முதிர்ந்த அன்னையாரும் கமலாம்பிகைக்கு வேண்டும் பணிகள் செய்தனர். ஒரு வாரம் படுக்கையிற் கிடந்தார். 18—9—1918-ல் பிரிந்தார். அந்நிலையைத் தம் வாழ்க்கைக் குறிப்பிலே சுந்தரனார் குறிப்பிடுவதை நோக்குக:—

"என் தந்தையார் காலமான திங்களில்—கோளில்—கமலம் 'ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகும்' நிலையடைந்தாள். துன்ப மேகம் சூழ்ந்தது; மின்னல் என் தலையில் வீழ்ந்தது; உடலிற் பாய்ந்து கால் வழியே ஓடியது; மண்ணும் விண்ணும் ஒரே சுழல்; கண்களில் தாரை தாரை. கமலத்தின் ஆவி சோர்ந்தது; என் அம்பிகையின் ஆவி சோர்ந்தது; என் ஆருயிர்க் கமலாம்பிகையின் ஆவி சோர்ந்தது! ஓருயிர் ஈருடலென வாழ்ந்தோம். ஓருடல் போயிற்று; அமிழ்தஞ்சுவையென இருந்தோம்; அமிழ்தம் போயிற்று."

"யான் நீரில் மூழ்கினேன். என் மனைவி நினைவு ஒழியவில்லை; அந்நினைவு அன்றும் ஒழியவில்லை; இன்றும் ஒழியவில்லை. எப்பிறவியிலும் அஃது ஒழியுந் தன்மையதன்று. [1]திருமூலர் திருவாக்குப் பொதுமையது; நிலையாமையை அறிவுறுத்த எழுந்தது. மனைவிக்கு அப்

1. ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே" —திருமூலர்

பாட்டைப் புறனடையாகக் கொள்க. மனைவி வாழ்க்கைத் துணை. அத்துணை வெறும் எலும்பா? தோலா? உடம்பா? பொறியா? அன்று; அன்று. அத்துணைக்கு ஒப்பானதும் உயர்வானதும் ஒன்றில்லை. எதை இழந்தாலும் எளிதில் பெறலாம்; காதலியை இழந்தால் அரிதிலும் பெறுதல் இயலாதே. காதலி பெறுதற்கு அரியவள். அவளை இழந்தால் மீண்டும் அவளை எப்படிப் பெறுதல் கூடும்? உலகெல்லாஞ் சேர்ந்தாலும் அவை காதலிக்கு ஈடாகா, இத்தகைய காதலியை எப்படி மறத்தல் இயலும்?”

வாழ்க்கைத் துணைவியின் பிரிவு சுந்தரனார்க்குப் பேரதிர்ச்சியானது. காதலியை நினைந்துநினைந்து மறுகினார். காதலி இறந்து இரண்டு திங்கள் கழித்தபிறகு மறுமணப் பேச்சுத் தொடங்கினர். அப்போது இவர் நாடறிந்த அறிஞராகையாற் செல்வர் பலர் பெண் கொடுக்கப் போட்டியிட்டனர். அவர்களில் ஒருவர் இலட்சாதிபதி. ‘தேசபக்தன்’ சொந்தமாகவே வெளியிடப் பொருள் தருவதாகக் கூறினர். வீட்டினர் மனமும் ஈடுபட்டது. ஆனால், இவர் மனம் மட்டும் இசையவில்லை. பலர் பலவாறு பலமுறையும் இவர் மனத்தைத் திருப்பப் பார்த்தனர். அவரவர் மனநிலைக்கும் அறிவுக்கும் ஏற்றவாறு விடைகூறி மறுத்து விட்டனர் நம் சுந்தரனார். நாளடைவில் மறுமணப் பேச்சும் மறைந்தது.

உண்மைக் காதல் ஆணுக்கும் உண்டு; பெண்ணுக்கும் உண்டு. ஆண் மட்டும் மறுமணத்திற்கு இசையலாம் என்னும் ஒருதலைப் பேச்சு அக் காதலின் முன் எங்ஙனம் நிற்கும்? ஆனால், அக் காதலொளி சிலரிடமே ஒளிரும். அத்தகைய சிலரிடை நம் சுந்தரனார் ஒளிர்கிறார். இத்தகைய காதல் வாழ்க!

நாட்டுமக்களைத் தூண்டிவிட்டு, அரசாங்கத்தின் கொடுமைகளை எடுத்துரைக்கும் தேசபக்தனை வெள்ளை அரசாங்கம் வாளா விடுமோ? ஒருநாள் சுந்தரனாரின் பழைய மாணவர் ஒருவர்-அரசாங்க ஊழியராக இருப்பவர்-தேசபக்தன் நிலையத்திற்கு வந்து இவரிடம் 'தேசபக்தனைப் பறிமுதல் செய்ய அரசாங்கம் இட்ட கட்டளை இன்று தங்கட்குக் கிடைக்கும்' என்று கூறிப்போனார். சுப்பராய காமத்துக்கு இவர் இச்செய்தியை அறிவித்தார். அவர் திடுக்கிட்டார். சிறிது சிந்தித்தபிறகு, "அப்படியானால் இரண்டாவது ஈடுகாணம் (ஜாமீன்) கட்ட நேரும்; அதற்கு இரண்டாயிரம் முதல் பத்தாயிரம் ரூபா வரை வேண்டும். தாங்கள் இரண்டுநாள் அக்கட்டளையைப் பெறாமல் தலைமறைவாக இருந்தால் அப்பொருளைத் திரட்டி விடுவேன். தேசபக்தனுக்குக் கெடுதி நேர்ந்தால் இதனுடன் பிணைத்து நான் செய்து வரும் பல தொழில்நிலையங்களுக்கும் கெடுதி நேரும்," என்று கேட்டுக்கொண்டார்.

சுப்பராய காமத் இவ்வாறு பன்முறை கேட்டுக் கொண்டபிறகு, தலைமறைவாக இருக்கும் செயலுக்கு நம் சுந்தரனார் ஒப்பினார். துணையாக இராயப்பேட்டையிலே வாழ்ந்த பாலசுந்தர முதலியார் புறப்பட்டார். பலகைவாராவதி வழியே திருப்போரூர், திருக்கழுக்குன்றம் முதலான இடங்களில் இரண்டுநாள் கழித்தனர். இருவரும் தேசபக்தன் அதுவரை பறிமுதலாகாதிருப்பதைச் செய்தித்தாள்களின் வாயிலாக அறிந்தனர்; மூன்றாம்நாள் சென்னை சேர்ந்தனர்.

இரண்டுநாட்களிலே சுப்பராய காமத்துச் செய்திருந்த திட்டம் பிரிட்டிஷ் இந்தியா அச்சுக்கூடத்தையும்

தேசபக்தன் இதழையும் என்-தண்டபாணிபிள்ளைக்கு விற்றுவிடல் வேண்டும் என்பதுதான். இவ்வாறு செய்தால் இரண்டாவது ஈடுகாணம் செலுத்தாமல் தப்பலாம் என்று அவர் எண்ணினார். அதனை உணர்ந்த சுந்தரனார், "நான் ஏற்றுக்கொண்டிருந்த பதிவுப் பொறுப்பிற்குச் சிக்கல் நேராதவண்ணம் பார்த்துக் கொண்டு ஏதேனுஞ்செய்து கொள்ளுங்கள்," என்று கூறிவிட்டார். 28-2-1919- இல் பறிமுதல் கட்டளை கிடைத்தது. 1-3-1919- இல் "பெட்லண்டு பிரபு தேசபக்தன்மீது பாணஞ் செலுத்தியிருக்கிறார். தேசபக்தன் இரத்தஞ் சொரிகிறான். தேசபக்தர்களே! பணத்தைச் சொரியுங்கள்" என்று தேசபக்தனுடைய முதற்பக்கத்திற் பெரிய எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருந்தன.

மாகாண நீதிபதியிடம் தண்டபாணிபிள்ளை அச்சுக்கூடத்தையும் தேசபக்தனையும் தாம்வாங்க ஒப்பந்தஞ் செய்திருப்பதாகக்கூறி ஈடுகாணம் இரண்டாயிரம் ரூபாவும் செலுத்துவதாகவும் உடனே பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டார். "'தேசபக்தன்' ஆசிரியராக யார் நடத்தப் போகிறார்?" என்று நீதிபதி வினவினார். 'திரு. வி. கலியாணசுந்தர முதலியார்' என அவர் விடையளித்தார். அப்படியானால் உங்களுக்குப் பதிவுசெய்யக் கட்டளை பிறப்பிக்க முடியாது' என்று நீதிபதி கூறிவிட்டார்.

பிறகு, சுந்தரனாரும் காமத்தும் ஒரு வழக்கறிஞரை வினவினர். அவர், நீங்கள் ஈடுகாணம் எவ்வளவு கட்டினாலும் அப்பொருள் பறிமுதலாவதுடன் தேசபக்தனையும் அரசாங்கம் நிறுத்திவிடும். 'தேசபக்தன்' நிறுத்தப் பெறுவது நல்லதன்று; அதன் சேவை நாட்டுக்கு வேண்

டும் ஆகையால், தேசபக்தனின் தொனிவேகம் குறைந்து உலாவக் கட்டளை பிறப்பிக்கக் கேட்பது நல்லது' என்று கூறினர். சுந்தரனுர்க்கு இவ்வகையில் விருப்பமே உண்டாகவில்லை. 'இது மன்னிப்புக் கேட்பதாகாதா!' என்று வினவினர் 'ஆகாது' என்ருர் வழக்கறிஞர். வேறு வழியில்லை யென்றறிந்த பிறகு சுந்தரனுர் ஒப்பினர். ஐயாயிரம் ரூபா ஈடுகாணம் பெற்றுக்கொண்டு 'தேசபக்தன்' தொனிக் குறைவுடன் உலாவலாம் என நீதிபதி ஆணை பிறப்பித்தார். சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் திரட்டிவந்த தொகையும் அன்னிபெஸண்டு அம்மையார் அளித்த தொகையும் சில்லரையாகச் சேர்ந்த பொருளுமாக ஐயாயிரம் ரூபா கிடைத்தன. இப்பொருளையே ஈடுகாணமாகச் செலுத்தினர்.

இந்த இடையூற்ருல் ஒன்பது நாட்கள் தேசபக்தன் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தான். இக்காலத்திலே ஈடுகாணம் செலுத்தியதனுல், பத்தாம்நாள் தேசபக்தன் வெளிவந்துவிட்டான். அன்றை இதழ் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற அப்பரின் திருவாக்காகிய செய்யுளின் பொருள்களைத் தாங்கிவந்தது. பிறகு, பழைய முறையிலேயே கருத்துக்கள் வெளியாயின. இது சுப்பராயகாமத்துக்குக் கலக்கத்தை விளைத்தது. 'தமிழ் தெரியாத உங்களுக்கு எழுத்தின்தொனி எப்படித் தெரியும்?' என்று தெளிவுண்டாக்கினுர் இவர். தேசபக்தன் இரண்டரை ஆண்டு நடைபெற்றது. ஆசிரியக் கூட்டம் சுந்தரனுர்க்கு இன்பமூட்டிவந்தது. காரியக்கூடமேலாளராக இருந்த திருநாவுக்கரசு முதலியார் விலகி வேருெருவர் வந்தார். சுப்பராயகாமத்து நம் சுந்தரனுருக்கறியாமலே 'பிரிட்டிஷ் இந்தியா' அச்சுக்கூடத்தை 'ஒத்தி' வைத்துவிட்டார். அச்சுக்கூடப் பொறுப்பு

இவருடையது. அங்ஙனமிருந்தும் இவரை யறியாமலே 'ஒத்தி' வைத்த செயல் இவருக்கு மனப்பிளவை உண்டு பண்ணியது. இராசகோபாலாச்சாரி போன்றவர்கள் சமாதானஞ் செய்தனர். சுப்பராயகாமத்தும் கலங்கினர். எனினும், நம் சுந்தரனர் 22—7—1920 தேசபக்தன் தலையங்கத்திலே தாம் விலகுவதை அறிவித்துவிட்டு விலகிவிட்டார். அச்சுக்கூடப் பொறுப்பையும் 'தேச பக்தன்' பொறுப்பையும் குமாரசாமிசெட்டியார் ஏற்ருர். 31—7—1920-இல் வ. வே. சுப்பிரமணிய ஐயர் ஆசிரியப் பதவியை ஏற்ருர்.

"ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அலங் கரித்த பத்திராசிரிய ஸ்தானத்தில் உட்காருவதற்கு எனக்கு அச்சமாக இருக்கிறது. அவரது சொல்வன்மை யும், தீரமும், நேர்மையும், கலங்காமையும், பாரபட்ச மின்மையும், அவசியம் நேர்ந்தபோது காட்டிய நிர்த் தாட்சணியமும் பத்திராசிரியத் தொழிலுக்கே பூஷணங் களாக விளங்கின. அவருடைய அருங்குணங்களிற் சிலவேனும் என் வியாசங்களில் தோன்றுமாறு தமிழ் ழணங்கு திருவருள் புரிக."

என்று வ. வே. சுப்பிரமணிய ஐயர் 31-7-1920-இல் 'தேசபக்த'னில் எழுதிய குறிப்பை நோக்கின் நம் சுந்தர ஞர் தேசபக்தனை நடாத்திய திறமை நன்கு விளங்கும்.

இவர் விலகியபிறகு தேசபக்தன் சிறிதுகாலமே உலவியது. இரண்டொரு வாரத்தில் அச்சுக்கூடமும் இதழும் வேறொருவரிடம் சேர்ந்தன. முக்காலாண்டுக்குள் ஐயர் சிறைபுகுந்தார். சிலகாலத்திற் படிப்படியாகத் தேசபக்தன் மறையத் தொடங்கினன். சிறிது காலங்

கழித்து மீண்டும் தண்டபாணிபிள்ளை வாரப்பதிப்பாகத் தேசபக்தனைச் சிலகாலம் நடத்தினர்.

நவசக்தி

சுந்தரனுர் தேசபக்தனை விட்டு விலகியதும் பலர் புதிய தினப்பதிப்புத் தொடங்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். பிராமணரல்லாதார் வாயிலாக ஒரு நாளிதழ் தம் பொறுப்பில் துவக்க விரும்புவதாகப் புதுவை-பக்கிரிசாமிபிள்ளை தெரிவித்தார். காரைக்குடித் தோழர் சிலர், ஒரு பெண்கல்லூரியை இவர் தலைமையில் நடத்த விழைந்தனர்.

இங்ஙனம் பலதுறையிலும் இவரை ஈர்க்கத் தலைப் பட்டபோது தொழிலாளர்தலைவர்களான சிலர் ஒரு ஞாயிறன்று இவரைக்கண்டு, எக்காரணம் பற்றியுஞ் சென்னையைவிடுத்துச் செல்லக்கூடாதென்றும், சென்ருல் தொழிலாளர் இயக்கம் பட்டுப்போகுமென்றும் ஒரு திங்கள் ஓய்வுபெற்றிருத்தல் வேண்டுமென்றும் கூறினர். இவரும் இசைந்தார்.

அத்தலைவர்கள் தொழிலாளர்கட்கு ஒரு வேண்டு கோள் விடுத்தனர். அதன்படி வயதடைந்த தொழி லாளர் ஒவ்வொருவரும் ஒரு ரூபா கொடுத்தனர். இதன் பொருட்டு எவ்வகைக் கட்டாயமும் இல்லை. ஐயாயிரம் ரூபா திரண்டது! சில நண்பர்கள் இரண்டாயிரம் திரட்டித் தந்தனர். இப் பொருளைக்கொண்டு அச்சகம் ஒன்று வாங்கினர். 'சாது அச்சுக்கூடம்' என்று பெய ரிட்டனர். அப்போது அச்சுக்கூடம் பெற்ற சீர்திருத் தத்தாலே ஈடுகாணம் கட்டாமலே அரசாங்கம் பதிவு செய்துகொண்டது. திரு. வி. கலியாணசுந்தர முதலி யாரை அன்றுமுதற் சிலர் 'சாது முதலியார்' என்றனர்.

சாது அச்சுக்கூடத்திலே சாதுமுதலியாரால் பிறந்தவள் 'நவசக்தி' முதற்சிலம்பு-முதற்பரல் 20-10-1920-இல் வாரப்பதிப்பாக வெளிவந்தது; ஏறக்குறைய இருபதாண்டு நடைபெற்றது.

நவசக்திக்கும் தேசபக்தனுக்கும் வேறுபாடுண்டு. தேசபக்தன் நாளிதழ்; நவசக்தி வார இதழ். தேசபக்தனில் அழிவு வேலை நடந்தது; நவசக்தியில் ஆக்கவேலை அமைந்தது. ஆவேசமும் பரபரப்பும் தேசபக்தனில் திகழ்ந்தன; அன்பும் அமையும் நவசக்தியில் நயந்தன.

நவசக்தியிலும் அரசியல் மலரும்; பெண் நலன், மொழிச்சிறப்பு, கலையாக்கம் முதலியன அரும்பும்; சமநெறி கமழும். இவ்விதழ் அரசியலுடன் வேறு பல துறைகளிலும் இறங்கிப் பணிசெய்தமையால் அரசியலில் மாறுபட்ட கருத்துடையாரும் சந்தாதாராயினர். எனவே, நவசக்தி தமிழ்நாடெங்கும் தவழ்ந்தாள்; வெளிநாடுகளிலும் இலங்கை, பர்மா; சையாம், மலேயா, மொரிஷியஸ், நெட்டால், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளிலும் ஒளிவீசினாள். தமிழ்நாட்டினின்றும் தம் தாய்நாடு திரும்பும் பாதிரிகள் பலர் நவசக்தியை உடன்கொண்டு சென்றனர்.

1922-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கூட்டம் மதுரையில் நடந்தது. அப்போது காங்கிரசின் சார்பிலே செய்தித்தாள் ஒன்று நாளிதழாக வெளியிட வேண்டும்என முடிவு செய்தனர். அதற்கென்று பதினாயிரம் ரூபா கொடுப்பதெனஒப்புக்கொண்டனர். அத்தொகையைக் கொண்டு 'நவசக்தி'யையே நாளிதழாக்க வேண்டுமென அக்கூட்டத்தினர் வற்புறுத்தினர். 'தேசபக்தன்' அடைந்த நிலையை உன்னிய சுந்தரனார் பிறர் தலை

யீட்டை விரும்பவில்லை; மறுத்துவிட்டார். பின்னர் அத் தொகை 'சுயராஜ்யா' கம்பெனித் தலைவர் தி. பிரகாசம் அவர்களிடம் சென்று 'சுயராஜ்யா' தமிழ்த் தினப் பதிப்பை வெளியிட்டது. அத் தினப்பதிப்பு நின்ற பிறகு தமிழ்நாட்டுக் காங்கிரசும் 'சுயராஜ்யா' கம்பெனி யும் தம்முட் பகைத்துச் சட்டப்போர் நிகழ்த்தின.

மதுரைக்-காங்கிரசுக் கூட்டத்திற்குப் பிறகு ஈ. வெ. இராமசாமி நாயக்கர் தலையீட்டால் நவசக்தி சிறிது காலம் 20—10—1923 முதல் வாரப் பதிப்புடன் வார மும்முறைப் பதிப்பாகவும் நடைபெற்றது. அந்நாளில் நாயக்கர் வைக்கம் அடைந்து தீண்டாமையை முன் னிட்டு அறப்போர் (சத்தியாக்கிரகம்) இயற்றிச் சிறை புகுந்தார். மும்முறைப் பதிப்பு நலிவுற்றது; வார வெளியீடும் நின்றுவிடுமோ என, எண்ணும்நிலை வந்தது. வாரத்தைக் காக்க மும்முறை 31—5—1924 முதல் நிறுத்தப்பெற்றது.

தேர்தல் காலங்களிலே நவசக்தி காங்கிரசுக்குப் பணி புரிந்தது. நவசக்தியின் தலையங்கங்கள் துண்டு வெளியீடாகவும் பரவின.

1930-ஆம் ஆண்டில் (நவசக்தியின் பத்தாம் அகவையில்) உப்புச் சத்தியாக்கிரகம் தொடங்கியபோது இராசகோபாலாச்சாரியாரும், கே. பாஷ்யமும் இவரை அறப்போர் அறிக்கையிலே கையொப்பமிடச் செய்தனர். அதனால் சாது அச்சுக்கூடத்திற்கு ஈடுகாணம் கட்ட நேரும்என எதிர்பார்த்து உரிமையைத் தமையனார் உலக நாத முதலியார் பேருக்கு மாற்றிவிட்டனர். எனினும், அவசரச் சட்டமும் உடன் பிறந்ததினால் நவசக்தி ஆறு

திங்கள் சிலம்பொலியின்றி ஓய்ந்திருந்தாள். பிறகு, வெளியானாள்.

சமதர்மத்தைச் சன்மார்க்க நெறியிலே பரப்ப வேண்டும் என்பது இவருடைய எண்ணம். அக் கருத்தைக் காலநிலைக்கும் நாட்டுநிலைக்கும் ஏற்றவாறு வெளியிட்டு வந்தார். வேறு சிலரும் சமதர்மக் கட்டுரைகள் நவசக்தியில் வெளியிட்டு வந்தனர். ஆனால், அப் போக்கு இவருக்குப் பிடிக்கவில்லை. வெளியீட்டை நிறுத்தி விடலாமெனவும் எண்ணும் நிலை வந்தது. எனினும் சந்தாதாரர் பொருட்டுத் திங்கள் வெளியீடாக நடாத்தினார். ஓய்வு கிடைத்ததனால் பெரியபுராணத்துக்கு ஆராய்ச்சிக்குறிப்புரை வரைந்து சஞ்சிகை, சஞ்சிகையாக வெளியிடத் தொடங்கினார்; சமயக்கட்டுரைகளே வெளிவந்தன.

1934-இல் நடந்த மாவட்டக் கழகத்தேர்தலில் வட ஆர்க்காடு மாவட்டம் காவேரிப்பாக்க வட்டத்தில் காங்கிரசுக்குள்ளாகவே தீயநிகழ்ச்சி நேர்ந்தது. இவரும் தேர்தல்வேலையில் ஈடுபட நேர்ந்தது. நவசக்தி மீண்டும் வாரப்பதிப்பாக வந்தது. அப்போது ஆசிரியக்கூட்டத்திலே நேமம் கிருஷ்ணசாமிமுதலியாரும், சக்திதாஸ் சுப்பிரமணியமும் சேர்ந்தனர். பிறகு கிருஷ்ணசாமி கல்லூரிப் படிப்புக்குச் சென்றார். இராமநாதன், அரங்கசாமி என்போர் வந்து சேர்ந்தனர். சுந்தரனார் விரும்பிய சமதர்ம சன்மார்க்கமும் நவசக்தியிலே பொலிவுற்றது.

ஐரோப்பாவிலே 1939-ஆம் ஆண்டு எழுந்த போர் முகில்கள் உலகெங்கும் பரவி முழங்கும் குறி தோன்றியது. பத்திரிகைச்சட்டங்கள் பலப்பல வெளி

வந்தன. அவை பத்திரிகை யுலகைக் கலக்கின. சுந்தரனார் நவசக்தியையும் நிறுத்திவிட எண்ணினார். அந் நிலையில் நவசக்தியிலே இசைக்கட்டுரைகள் எழுதி வந்த 'இராதாமணி' என்னும் அம்மையார் ஏற்று நடத்த முன் வந்தார். 1941 ஜனவரி முதல் நவசக்தி அம்மையார் கைக்கு மாறியது.

**காங்கிரசு**

காங்கிரசுக்கு இவர் பணி பலவகையானும் பயன் தந்தது. பத்திரிகை வாயிலாகவன்றிச் சொற்பொழிவுகளாலும் பணி புரிந்தார். 1917-ஆம் ஆண்டின் இறுதியிலே வெளிப்படையாகப் பணிபுரிய வந்தார். அந்நாளில் சென்னை மாகாணக் காங்கிரஸ் பிரிந்து நிற்கவில்லை. 25—8—1921-இல்தான் ஆந்திரம், தமிழ், கேரளம் எனப் பிரிக்கப்பட்டது.

1917இல் காங்கிரசியக்கத் தலைவரான அன்னி பெஸன்டு அம்மையாரை அரசாங்கம் சிறைவைத்ததைக் கண்டிக்கும் கண்டனக்கூட்டங்கள் ஆங்காங்கே நடைபெற்றன. சென்னையில் நடைபெற்ற கூட்டங்களில் இவர் கலந்துகொண்டார்

திலகர், விபினசந்திரபாலர், கெல்கார், கபர்தே, தேஷ்பாண்டே ஆகிய ஐவரைக்கொண்ட ஒரு குழு கொழும்பு வழியே இங்கிலாந்து செல்லப் புறப்பட்ட போது 30—3—1918-இல் சென்னை வந்தது. அப்போது, 'தேசபக்தன்' நிலையத்தார் ஐவருக்கும் மாலை யணிந்து பாராட்டினர். இவர் திலகருக்கு மாலை யளித்தார். அன்றைய இரவு அன்னிபெஸன்டு அடையாற்றில் அளித்த விருந்திலும் இவர் கலந்துகொண்டார். இங்கிலாந்து திலகர் பெருமானை வரவேற்க வேண்டும்

ERSITY EXTENSION L

என்ற கருத்தமைந்த சில பாக்களைத் 'தேசபக்த'னில் 20—10—1819-இல் வெளியிட்டார். அவை 'உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்' என்ற நூலிற் சேர்க்கப்பெற்றுள்ளன.

திலகர் இங்கிலாந்து சென்றிருக்கும்போது அராஜகம் நாட்டிற் பரவுவதாகக் கருதிய அரசாங்கம் 'ரௌலட் மசோதா'வைக் கொண்டுவரத் திட்டமிட்டது. அதனைக் கொண்டுவரக்கூடாது என்று கிளர்ச்சி செய்யவும், சட்டமானால் சத்தியாக்கிரகம் தொடங்கவும் மக்களைத் தூண்டுவதற்குக் காந்தியடிகள் நாடெங்கும் சென்றார். அங்ஙிலையில் அடிகள் சென்னை வந்தபோது அவர் பேச்சைத் தமிழில் பெயர்த்துக்கூறும் பணியிலே 'தேசபக்தன்' ஆசிரியர் என்ற முறையிலே சுந்தரனார் ஈடுபட்டார். அடிகள் பின்னர் ஆறாண்டுகள் கடந்து சென்னை வந்தபோதும் (1921-இல்) சுந்தரனாரை மறவாமல் அடையாளம் வைத்திருந்தார். பின்னர் ரௌலட் மசோதா சட்டமானபிறகு அடிகள் விடுத்த அறிக்கை யின்படி 1919 ஏப்ரல் ஆறாம்நாள் நோன்புநாளாகக் கொண்டாடச் சென்னை செய்த முயற்சியில் ஈடுபட்டார்.

அப்போது சுப்பராய காமத்தும் இவரும் இராயப்பேட்டைவட்ட மக்களை ஒழுங்குசெய்யும் பணியை ஏற்றனர். சுந்தரனார் இரவுபகல் ஓயாது பணிபுரிந்தார். தண்டபாணி பிள்ளையும் இவருடன் பணிசெய்தார். தொழிலாளர் ஒருமைப்பாடும் உறுதியும் கொண்டனர். ஏப்ரல் ஐந்தாம்நாள் மாலையில் ஆங்காங்கே கூட்டங்கள் கூடி நிகழ்ச்சிகளைச் சோதித்துப் பார்க்குமாறு செய்த ஏற்பாட்டின்போது தொழிலாளர்களிடை எப்படி

நடந்துகொள்ளவேண்டும் என்பதைப் போதித்தார் இவர். ஆறும் நாளும் நன்ருக நோன்பு நடைபெற்றது.

அதே திங்களில் நடைபெற்ற பஞ்சாப் படு கொலையைக் கண்டிக்க நாடெங்கும் நடந்த கிளர்ச்சியில் இவரும் ஈடுபட்டார். அடிக்கடி கடற்கரையிலே கூடும் கூட்டங்களுக்குச் செல்வார்; சொற்பொழிவாற்றுவார்; டயரின் அரக்கச் செயலையும் ஓட்வியரின் மற ஆட்சி யையும் வெறுத்துக் கூறுவார். பஞ்சாப் படுகொலை யைப்பற்றிக் 'காங்கிரஸ் அறிக்கை' என்பது சம்பத் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டபோது அந் நூலுக் கும் 'ஏப்ரல் 1919' எனச் சாமிநாத சர்மா தனியே எழு திய நூலுக்கும் முன்னுரை வரைந்தார்.

திலகர் இங்கிலாந்து சென்று திரும்பிய பிறகு சென்னை வந்தபோது (17—12—1919-இல்) மூன்று நாள் தங்கியிருந்தார். அப்போதெல்லாம் சுந்தரனர் உட னிருந்து திலகருடைய பல நெறியிலும் பரவிய பேரறி வைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார்.

திலகர் பெருமான் 1—8—1920-இல் இறந்தார். அப்போது நாடடைந்த நலிவு கொஞ்சமன்று. சுந்தரனர் அடைந்த மறுக்கம் அளவிடற்கியலாதது; படுக்கை யிலும் வீழ்த்தியது.

காங்கிரசின் சார்பாகவும் காங்கிரசின் கிளைக்கட்சி யான சுயராச்சியக் கட்சியின் சார்பாகவும் நடைபெற்ற தாலுக்கா மாநாடுகள், மாவட்ட மாநாடுகள் பலவற்றிற் கும் சுந்தரனர் சென்று சொற்பொழிவாற்றினர். விரிவை அவர் வாழ்க்கைக் குறிப்பிலே காண்க.

தாலுக்கா மாநாடுகளிற் குறிப்பிடத்தக்க இடங்கள் ஊத்தங்கரை, அருப்புக்கோட்டை, சாத்தூர், ஸ்ரீவில்லி

புத்தூர், உடுமலைப்பேட்டை, தாராபுரம், அம்மாபட்டி புதூர், ஈரோடு, அறந்தாங்கி, திருப்பத்தூர் முதலியவை.

மாவட்ட மாநாடுகளிற் சிறந்தவை வேலூரில் நடந்த வடார்க்காடு மாநாடும், திருப்பாதிரிப்புலியூரில் நடந்த தென்னார்க்காடு மாநாடும், தென்காசியில் நடந்த திருநெல்வேலி மாநாடும், குளித்தலையில் நடந்த திருச்சிராப்பள்ளி மாநாடும் எனலாம்.

பல மாநாடுகளில் ஈ. வே. இராமசாமி நாயக்கரும், மணம்பூண்டி குமாரசாமி பிள்ளை என்பவரும் சுந்தரனாருடனிருந்து சொற்பொழிவு செய்தனர். குளித்தலையில் சுந்தரனார்க்குக் காய்ச்சல்நோய் வந்தது. ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி)யும், வ. வே. சு. ஐயரும், பண்டிதை அசலாம்பிகை அம்மையாரும் நோய் நீங்கும்வரை பணி புரிந்தனர். இங்கெல்லாம் இவர் காங்கிரசுக்கே அரசியல் தொண்டு செய்தார்.

சென்னைத் தமிழ் மாகாண மாநாடு காஞ்சியிலே நடைபெற்றது. நடைபெற்ற காலம் 1925-ஆம் ஆண்டு —நவம்பர்—21, —22-ஆம் நாட்கள். இம் மாநாட்டிற் குறிப்பிடத்தக்க சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மாநாடு இரண்டுநாள் நடைபெற்றது. மாநாட்டிற்கு நம் சுந்தரனார் தலைமை பெற்றார். டாக்டர்—வரதராஜுலு நாயுடு, ஈ. வெ. இராமசாமி நாயக்கர், எஸ். சீநிவாஸ ஐயங்கார், எஸ். சத்தியமூர்த்தி, சி. ஆர். ரெட்டியார், ஆர். கே. சண்முகஞ் செட்டியார், எம். கே. ஆச்சாரியார், எஸ். முத்தையா முதலியார், ஷாபி முகம்மது, எஸ். இராமநாதன், கே. சந்தானம் முதலான காங்கிரசுத் தலைவர்களும், ஏ. இராமசாமி முதலியார், குருசாமி

நாயுடு, கண்ணப்பர் முதலிய ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களும் வந்திருந்தனர்.

முதல்நாள் தேசபந்து தாசர், வ. வே. சுப்பிரமணிய ஐயர், சுப்பிரமணிய சிவம், கிருஷ்ணசாமி சர்மா, தியாகராய செட்டியார், பக்கிரிசாமிப் பிள்ளை, டாக்டர் சுப்பிரமணிய ஐயர் முதலானோர் அந்த ஆண்டில் இறந்ததைக் குறித்து இரங்கல் மொழிகள் நிகழ்ந்தன.

இரண்டாம் நாளும் சுந்தரனாரே தலைவராயிருந்தார். முதல்நாள் வராத இராஜாஜி, சாமி வெங்கடாசலம் செட்டியார், பி. டி. ஆஷர் முதலியோர் அன்று வந்திருந்தனர். அன்று கொண்டுவந்த தீர்மானங்களில் ஒன்று ஈ. வே. இராமசாமி நாயக்கரை காங்கிரசிலிருந்து விலகும்படி செய்துவிட்டது. அத்தீர்மானம் :

"தேசிய முன்னேற்றத்திற்கு இந்து சமூகத்தாருக்குள்ளும் பற்பல ஜாதியாருக்குள்ளும் பரஸ்பர நம்பிக்கையும் துவேஷமின்மையும் ஏற்படவேண்டுமாகையால் ராஜீய சபைகளிலும் பொது ஸ்தாபனங்களிலும் பிராமணர், பிராமணரல்லாதார், தீண்டாதார் எனக் கருதப்படுவோர் என்ற இம்மூன்று பிரிவினருக்கும் தனித்தனியாக ஜனத்தொகை விழுக்காடு தங்கள் தங்கள் சமூகத்திலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்துக்கொள்ள உரிமை ஏற்படுத்த வேண்டுமென்று இம் மாநாடு தீர்மானிக்கிறது."

இதனைக் கொண்டுவந்தவர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர். இது முதலிலேயே விஷயாலோசனைக் கமிட்டியில் தோல்வியுற்றிருந்தது. ஆகையால் தலைவராக இருந்த சுந்தரனார் ஒழுங்குக்கு மாறானதென்று ஏற்றுக் கொள்ளவில்லை. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் இத்

தீர்ப்பை ஆட்சேபித்தார். 'தீர்ப்புக்குக் காரணம் உண்டா? தலைவரின் யதேச்சாதிகாரந்தான் காரணமா?' என்று வினவினார். சபையோர் தலைவர் தீர்ப்புக்கு உட்படவேண்டும் என்று கூவினர். நாயக்கர், "நான் தலைவரிடம் பேசுகிறேன். அவர் என்னை வெளிப்படுத்தவும் அடக்கவும் உரிமையுடையவர். அவர் உத்தரவின்றி மற்றவர் கலவரம் செய்தால் தாம் சும்மா இருக்கமுடியாது," என்று எச்சரிக்கை செய்தார். அப்போது தலைவர் சுந்தரனர் எழுந்து தாம் எவ்வித அடக்கு முறையையும் கையாளவில்லை யென்றும், நாயக்கர் தம்முடைய பிரிய நண்பராயினும் தலைவர் என்ற முறையில் தம் கடமையைச் செய்யவேண்டி யிருக்கிறதென்றும், சட்டசபை வேலையைக் காங்கிரசே மேற்கொள்ளவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேருதபடியாலும், அவ்வேலையை நடத்தச் சுயராச்சியக் கட்சிக்கே அதிகாரங் கொடுத்திருப்பதாலும், சட்டசபை வேலைக்கே உரிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப்பற்றி மாநாடு யோசிக்க உரிமையில்லையென்றும், சுயராச்சியக் கட்சிக் கூட்டத்திலேயே இதைப்பற்றி ஆலோசித்தல் வேண்டும் என்றும், ஆதலால்தான் தாம் தீர்மானங்களை நிராகரித்து விட்டதாகவும் கூறினார். உடனே ஈ. வே. இராமசாமி நாயக்கர், எஸ்.இராமநாதன், சுரேந்திர நாத் ஆரியா, சர்க்கரைச் செட்டியார் ஆகிய நால்வரும் சபையைவிட்டு வெளியேறினர்.

பின்னர்த் தலைவர் தம் முடிவுரையிலே வகுப்புவாதத்தை ஒழிக்கவேண்டும் என்பதை வற்புறுத்தினார். இந்த நிகழ்ச்சியால் ஈ. வே. இராமசாமி நாயக்கரும் சுந்தரனரும் மனவேறுபாடடைந்தனர். 'குடியரசு' இதழில் நாயக்கர் கலியாணசுந்தரனரின் போக்கைக் கண்டித்

தெழுதினர். சுந்தரனர் தம் 'நவசக்தி' இதழில் அதற்கு மறுப்புரை வழங்கினர். கடாவும் விடையுமாக இரண்டிதழ்களும் ஒருவரையொருவர் தாக்குவதில் ஈடுபட்டன. தம் ஆருயிர் நண்பராலும் கொள்கையை அவருக்காக விட்டுக் கொடாத உறுதி இவரிடம் காணப்பெற்றது.

பின்னர் அந்த ஆண்டில் டிசம்பர் இறுதியில் கான்பூரில் நடந்த காங்கிரசு மாநாட்டில் கவியரசி சரோஜினியின் தலைமையிலே சட்டசபைத்தேர்தலிற் காங்கிரசே தலையிட முடிவு செய்தது. காஞ்சியிலேயே இத் தீர்மானம் நிறைவேறியிருந்தால் நாயக்கர் தீர்மானத்தைத் தாம் தள்ளும் பொறுப்பு நேர்ந்திராதெனத் தம் வாழ்க்கைக் குறிப்பிலே இவர் குறிப்பிட்டுள்ளார்.

கான்பூர் மாநாட்டிலே செய்த முடிவை ஒட்டிக் காங்கிரசின் சார்பாகச் சட்டசபைத் தேர்தல் பிரசாரம் புரிய இவர் ஈடுபட்டார். அப்போது ஜஸ்டிஸ் கட்சியின் செல்வாக்குப் பெருகியிருந்தது. இவரும் எஸ். ஸ்ரீநிவாச ஐயங்காரும் எடுத்துக்கொண்ட முயற்சி செப்பற்கரியது. ஓய்வொழிச்சல் இல்லாமல் திரிந்தனர். ஆறு திங்கள் வரை இப் பிரசாரம் நடந்தது. காங்கிரசுக்குப் பெருவாரியான வெற்றியுங் கிடைத்தது. ஆனல், வெற்றிக்குப் பின்னர்க் காங்கிரசுத் தலைவர்கள் நடந்துகொண்ட முறை இவரைத் திகைப்பூட்டியது.

கான்பூர் மாநாட்டினர் காங்கிரசு சட்டசபையிலே அமர்ந்து அரசாங்கத்திற்கு முட்டுக்கட்டை இடுவதென்றே முடிவு செய்தனர். ஆனல், வெற்றி மிகுதியாகக் கிடைத்தால் மந்திரிசபை அமைப்பதெனத் தலைவர்கள் மறைமுகமாக முடிவு செய்தனர். இது சுந்தரனர்க்குத் தெரியாது.

தேர்தல் நடைபெறுவதற்கு முன்னேயே ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் பனகல் மன்னர் ஒருநாள் இவரைப் பீட்டர்ஸ் ரோட்டிலே கண்டபோது, 'நீங்கள் முட்டுக் கட்டைப் பிரசாரம் செய்கிறீர்கள். மக்கள் ஏமாந்து வாக்களிக்கப்போகிறார்கள். முட்டுக்கட்டை நடக்கப் போவதில்லை. காங்கிரஸ் மந்திரிசபையை அமைத்தே தீரும்' என்றுரைத்தார். சுந்தரனார் உடனே சீநிவாச ஐயங்காரிடம் சென்று உண்மையா என வினவினார். அவர், "காங்கிரசுக்குப் பெருவாரி வெற்றி கிடைத்தால் முட்டுக்கட்டை இடுதல்கூடும். பெருவாரி வெற்றி கிடையாதொழியின் சுயேச்சைக் கட்சி முதலிய சிறு கட்சிகளுடன் சேர்ந்து ஜஸ்டிஸ் கட்சி மந்திரிசபை அமைத்துக்கொள்ளும். அந்நிலை நேராதவாறு தடுக்கக் காங்கிரசு சுயேச்சைக் கட்சிக்கு ஆதரவு நல்கி அதை மந்திரிசபை அமைக்கத் துணைநிற்க முயலும். அம் மந்திரிசபையைக் காக்கக் காங்கிரசு கருத்தைச் செலுத்திவரும். இவ்வாறு காங்கிரசு வட்டாரத்திலே பேச்சு நடந்தது உண்மை," என்றார்.

இவ்வாறு காங்கிரசில் ஊழல் நிலவியதால் சுந்தரனார் காங்கிரசு செயற்குழுவினின்றும் விலகியதாக இராஜிநாமா எழுதி அனுப்பிவிட்டார்.

நவம்பரில் தேர்தல் நடந்தது. வியக்கும் முறையிலே காங்கிரசு வெற்றியடைந்தது. ஆனால், சட்டசபையிலே முட்டுக்கட்டையிடவில்லை. சீநிவாச ஐயங்கார் முன்னர் இவரிடம், 'பெருவாரியான வெற்றி பெற்றால் முட்டுக்கட்டை இடும்' என்று கூறியிருந்தார்; அது நடைபெறவில்லை, சுயேச்சைக்கட்சிக்கு ஆதரவு நல்கி அதனை மந்திரிசபை அமைக்கச் செய்தது. இவ்வாறு

காங்கிரசின் நிர்வாகம் இகழ்வுற்றது. இந் நிலை கண்ட சுந்தரனார் நான்கணாச் சந்தாவும் இன்றிக் காங்கிரசுக் காரராக இருந்து வந்தார்.

தொழிலாளர் சேவை

தொழில் என்பது என்ன? இயக்கமே தொழில். உலகம் இயக்கம் இன்றி இருத்தல் ஒல்லாது. உண்ணவும் உடுக்கவும் பெறும் பொருள்களும் தொழிலாகிய உழைப் பின்றிக் கிடைத்தல் இல்லை. ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய உணவு உடை முதலியவற்றைத் தாமே தேடிக்கொண்டால் எல்லோரும் தொழிலாளராவர். அங்ஙனமின்றி ஒருவருழைப்பில் மற்றவர் தம் தேவை யைப் பெறுவதாலேதான் உழைப்போர் என்றும் அவ ருழைப்பில் வாழ்வோர் என்றும் இருவகையினர் உண்டா யினர். எங்ஙனமோ உழைப்போர் வறியராகவும் அவ ருழைப்பில் வாழ்வோர் செல்வராகவும் உலகில் அமைந்து விட்டனர். தாம் இறுகிப் பிடித்து வைத்திருக்கும் செல் வத்தின் சிறு துளிகளைச் சிதறி அவற்றைப் பெற்றுப் பசியைத் தணித்துக்கொள்ள வரும் வறியரிடம் காலத் திற்கும் இடத்திற்கும் தம் ஆற்றலுக்கும் ஏற்றவாறு வேலை வாங்கிக் கொள்வது செல்வ உலகின் இயல்பு. செல்வரின் தந்நலநோய் தொழிலாளரின் பசிக்கொடுமைக் கேற்றவாறு கூலியைக் குறைக்கும். மக்களுக்குரிய பண்பாகிய இரக்கம் செல்வத்தழைப்பிலே முளைப்பதும் அருமை. செல்வம் சேரச்சேர மேலும் மேலும் செல் வத்தை மீட்டவே கருத்துச் செல்லும். தம்மின் மெலி யாரை நோக்குதல் செல்வரியற்கையன்று. 'நூற்றுக்கு மேல் ஊற்று' என்பதே அவருக்குரிய பாடம். 'போது மென்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்பது கூலி பெறுவோர்க்குரிய பாடமேயாயிற்று.

தொழிலாளர் நன்றாக வாழ்ந்தால் நாமும் நன்றாக வாழமுடியும் என எண்ணுவிடினும், தொழிலாளர் உடல் உறுதியே நமக்குழைக்க ஆதாரமானது என்ற எண்ண மேனும் செல்வர்க்கெழுதல் இல்லை. தொழிலாளர் உழைப்பாகிய கட்டடத்தில் வாழ்வோர் அக் கட்டடம் பழுதின்றியிருக்கப் பார்த்துக்கொள்ள எண்ணுவதில்லை. உலகிலே செல்வர்களாகிய முதலாளிகளும் உழைப் போராகிய தொழிலாளிகளும் மட்டும் இருந்தால் அவ் வுலகு விரைவில் அழிவதியற்கை. முதலாளிகள் முதல் நிலைக்கவும் தொழிலாளிகளின் உடல் உரம் பெறவுமா வது நலம்புரிய அறிஞருலகு தலையிட வேண்டுவ தாயிற்று.

பல நூற்றாண்டுகளாக உலகெங்கும் தொழிலாளர் நிலைக்கிரங்கிய அருளாளர்கள் தம் நலத்தை விட்டுழைத் தனர். பல நூல்கள் எழுதினர். இப்போது தொழி லாளருக்கும் தம் உழைப்பின் அருமை தெரிகிறது; முத லாளிகட்கும் தெரிகிறது. உழைப்பின் அருமையை அறியப் பொருளாதார நூல் பயிலவேண்டியதில்லை. மனம் உழைப்பிலே செல்ல வேண்டும்.

சுந்தரனாரின் வாழ்விலே பெரிதும் பங்கெடுத்துக் கொண்டது தொழிலாளருக் குழைத்த காலமேயாகும். தொழிலாளரியக்கம் அவருடைய ஊணையும் உறக்கத்தை யும் குலைத்து மெலிவித்தது என்றுங் கூறலாம். 'இந்தியா வும் விடுதலையும்' என்னும் நூலிலே தொழிலாளரிடை இவர் கொண்ட தொடர்பு நன்கு விளக்கப் பெற்றுள்ளது. இவருடைய மணிவிழாவிலே எம். எஸ். எம். தொழிலா ளர் சங்கமும் சென்னைத் தொழிலாளர் சங்கமும் இவ ருடைய உருவப்படங்களை வைத்தன; ஒன்று இவர்

சென்னைத் தொழிற்சங்கத்தைக் கண்ட காலத்தின் உருவம். மற்றொன்று மணிவிழாக்காலத்திற் கொண்ட உருவம். இரண்டும் எவ்வுருவுடன் தொழிலாளர் உலகில் நுழைந்தார் என்பதையும் இப்போது அவ்வுருவம் எப்படி மெலிந்ததென்பதையும் காட்டும் முறையில் அமைந்தன. 'பீமன் பிருங்கியான கதை'யை அவை உணர்த்துகின்றன என்று தம் வாழ்க்கைக் குறிப்பிலே இவரே குறிப்பிட்டிருக்கிறார். இவர் தொழிலாளரியக்கத்திற்கு உழைத்ததைச் சுருக்கமாகக் குறிப்பிடுவோம்.

இவருளத்திலே தொழிலாளர் இயக்க விதை விழுந்த காலம் 1908-ஆம் ஆண்டாகும். அப்போது இவர் 'ஸ்பென்ஸர்' கம்பெனியிலே சிறு கணக்கராக இருந்தார். அந்நாளில் எழுந்த சுதேசி இயக்கக் கிளர்ச்சியின் பயனாக இந்தியா நோக்கி வந்த 'பார்லிமெண்டு' உறுப்பினரில் தொழிற்கட்சித் தலைவராகிய 'கீர்ஹார்டி' என்பவரை இவர் கண்டார். அவர் வரலாற்றுச் சுருக்கமும் பத்திரிகைகளில் வெளியாயிற்று. தொழிலாளர் உலகம் இவருளத்திலே படிய 'கீர்ஹார்டி'யின் தோற்றமும் வரலாற்றுச் சுருக்கமும் காரணமாயின.

பின்னர் இவர் வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தபோது, அந்நாளில் சென்னை - சூளைப்பட்டாளத்தில் 'வேங்கடேச குணாமிர்த வர்ஷணி சபை'யின் செயலாளராக இருந்த செல்வபதி செட்டியார் என்பவரை நண்பராகக் கொண்டார். அந்தச் சபையிலே சொற்பொழிவாற்றப் பலமுறை சென்றார். அங்குக் கூடிய மக்களிற் பெரும்பாலோர் தொழிலாளராக இருந்தனர். அவர்களைக் காணும்போதெல்லாம் இவருக்கும் செட்டியாருக்கும் அவர்களின் முன்னேற்றத்திலே கருத்

துத் தோயும். பின்னர் இவர் கல்லூரி ஆசிரியர் அலு வலைவிடுத்துத் தேசபக்தன் ஆசிரியராக ஆனபிறகு, திவான்பகதூர் கேசவப்பிள்ளையவர்களின் நட்பைப் பெற்றார். மில்தொழிலாளரின் குறைபாடுகள் பிள்ளை யவர்களால் 'இந்தியன் பேட்ரியட்' என்ற பத்திரிகையில் எழுதப்படும். அவற்றிற் சிலவற்றை இவர் தேசபக்த னிலே மொழிபெயர்த்து வெளியிடுவார். மற்றும் தொழி லாளர் குறைபாடுகளை ஜி. இராமஞ்சலு நாயுடு என்ப வரும் பிள்ளையவர்களின் மருகர் இலட்சுமணசாமி முதலி யாரும் திரட்டிக் கடிதவாயிலாகத் தேசபக்தனில் வெளி யிட்டனர் இவ்வாறு தொழிலாளர் இயக்கம் சுந்தரனார் உள்ளத்திலும் இவர் தோழர்களின் உள்ளத்திலும் உருவாகி வந்தது.

முதற்கூட்டம் 1918 ஆம் ஆண்டு மார்ச்சு 2-ஆம் நாள் செல்வபதி செட்டியார் செயலாளராக இருக்கும் சபையின் சார்பிலே நடந்தது. அரசாங்க ஊழியராக இருந்த சுதர்சன முதலியாரென்பவர் தலைமையில் இவரும் ஜனாப் குலாம் அமீது என்பவரும் பேசினர். தொழி லாளர்கள் தங்களுக்கு ஒரு சங்கம் வேண்டுமென்பதை அன்று உணர்ந்தனர். தலைவருக்கு முதலில் இவர்கள் தொழிலாளர் சார்பாகப் பேசுவார்களென்று தெரி யாது. அதனால் தலைமை யேற்றார். தம் தலைமையுரை யிலே இவர்கள் பேச்சை மறுத்தார். தொழிலாளர்கள் எதிர்ப்புக் கூச்சலிட்டனர். செல்வபதி செட்டியார் தலை வர் பேச்சை வெட்டிப் பேசினார்.

இடையறு முயற்சியால் 1918 ஏப்ரல் 27-ஆம் நாள் சென்னைத் தொழிலாளர் சங்கம் பிறந்தது. 'வாடியா' தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். திவான்பகதூர்

பிள்ளையவர்களும் சுந்தரனாரும் வேறு சிலரும் துணைத் தலைவராயினர். செல்வபதியும் இராமாஞ்சலுவும் செயலாளராயினர்.

பின்னர் நம் சுந்தரனார் காங்கிரசுச் சொற்பொழிவிற்குச் செல்லும்போது தொழிற்சாலைகள் இருக்குமிடமெங்கும் சங்கம் காணுமாறு பேசுவார். இம் முயற்சியினால் சென்னையிலும் வெளியூர்களிலும் பல சங்கங்கள் காணப்பட்டன. அவற்றிற் குறிப்பிடத்தக்கவை: எம். அண்டு. எஸ். எம். தொழிலாளர் சங்கம், டிராம்வே தொழிலாளர் சங்கம், மின்சாரத் தொழிலாளர் சங்கம், மண்ணெண்ணெய்த் தொழிலாளர் சங்கம், அச்சுத் தொழிலாளர் சங்கம், அலுமினியத் தொழிலாளர் சங்கம், ஐரோப்பியவீட்டுத் தொழிலாளர் சங்கம், நாவிதர் சங்கம், தோட்டிகள் சங்கம், ரிக்ஷா ஓட்டிகள் சங்கம், போலீசார் சங்கம், நாகை-தென்னிந்திய ரெயில்வே தொழிலாளர் சங்கம், கோவை - நெசவுத்தொழிலாளர் சங்கம், மதுரை - நெசவுத்தொழிலாளர் சங்கம் முதலியவை.

சுந்தரனாருடன் தொழிலாளர் இயக்கத்திலே ஈடுபட்டவர்களிற் சிறப்புற்றவர்கள்: சர்க்கரைச் செட்டியார், இ. எல். ஐயர், என். தண்டபாணிபிள்ளை, ஹரி சர்வோத்தமராவ், இராசகோபாலாச்சாரியார், ஆதிநாராயண செட்டியார், எம். எஸ். சுப்பிரமணிய ஐயர், வி. ஓ. சிதம்பரம் பிள்ளை, ஏ. எஸ். ராமுலு, எம். ஸி. ராஜு, டாக்டர்-நடேசமுதலியார், கஸ்தூரிரங்க ஐயங்கார், வி. பி. நாகை - பக்கிரிசாமிபிள்ளை, கோவை-என். எஸ். இராமசாமி ஐயங்கார், மதுரை - ஜார்ஜ் ஜோசப் முதலியோர்.

இங்கு எழுந்த கிளர்ச்சி வடநாட்டிலும் பரவியது. ஆங்காங்கே தொழிற் சங்கங்கள் எழுந்தன. போலீஸ் தொழிலாளர் சங்கம் காணும்போதும், எம். அண்டு. எஸ். எம். தொழிலாளர் சங்கம் காணும்போதும் எவ்வளவோ இடையூறுகள் நேர்ந்தன.

இச் சங்கங்கள் பல எழுந்தவுடன் அரசியல் தலைவர்களாலே எதிர்ப்புக்கள் கிளம்பின. 'மெயில்' பத்திரிகையில், இந்தியாவுக்குத் தொழிலாளர் இயக்கம் வேண்டா என்று கடிதங்கள் புறப்பட்டன. 'நியூ இந்தியா'வும், 'தேசபக்த'னும் அவற்றுக்கு மறுப்பு விடுத்தன.

1920-ஆம் ஆண்டு மார்ச்சு 21-இல் தொழிலாளர் மத்தியச் சங்கம் தோன்றியது. சுந்தரனார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். கவியரசி - சரோஜினி தேவியாரின் தங்கை மிருநாளினி அம்மையார் செயலாளரானார்.

தொழிலாளர் இயக்கத்திலே தொழிலாளர் முன்னேற்றத்திற்கெனக் கொள்ளப்பெற்றவை சம்பள வுயர்வு, நேரக்குறைவு, இராப்பாடசாலை அமைப்பு, சுகாதாரம் ஆகிய நான்குமாகும். இவை தொழிலாளர்க்கு வேண்டும் எனச் சங்கங்கள் கிளர்ச்சி செய்தன.

இயக்கம் தோன்றிய சில திங்களிலேயே கதவடைப்புக்களும், வேலைநிறுத்தங்களும் பெருவாரியாக நடைபெற்றன. இவற்றிற் பேர்பெற்று விளங்கியவை சென்னைத் தொழிலாளர் சங்கம், டிராம்வே தொழிலாளர் சங்கம், அச்சுத் தொழிலாளர் சங்கம், மண்ணெண்ணெய்த் தொழிலாளர் சங்கம் ஆகிய நான்குமே.

எல்லாச் சங்கங்களும் மத்திய சங்கத்துடன் தொடர்பு கொண்டிருந்தன. ஒற்றுமையாகவும் இருந்தன. ஒற்றுமைக்கு ஒருசான்று;

அந்நாளில் லார்டு வில்லிங்டன் கவர்னராக இருந்தார். அவர் தொழிலாளர் இயக்கம் வீறுகொண்டு வளர்வதை அடக்கத் தொழிலாளர் சட்டம் ஒன்று செய்ய விரும்பினார். அதற்கு முன்னர் ஒரு விசாரணைக் குழு அமைக்க ஜஸ்டிஸ்-குமாரசாமி சாஸ்திரியாரைத் தலைவராக்கினார். அவர் பஞ்சாப் படுகொலைக்கு மூலமாக இருந்த 'ரௌலட்' சட்டம் பிறப்பிக்கக் கையெழுத்திட்டவர்களில் ஒருவர் என எங்கும் அறிந்திருந்தனர். எனவே, எல்லாத் தொழிற்சங்கங்களும் இவரை விசாரணைக் குழுவின் தலைவராவது கூடாதென்று ஆங்காங்கே கூடிக் கண்டனஞ் செய்தன. 'லார்டு வில்லிங்டன்' மருண்டார். மத்தியத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை வரவழைத்து உரையாடினார். சாஸ்திரியாரை விரும்பவில்லையென்றறிந்தார். இறுதியாகச் சட்டம் செய்யும் எண்ணத்தை ஒழித்தார். இது ஒற்றுமைக்குச் சான்றாகும்.

தொழிலாளர் உடலுரமுடையவர்களானாலும் பொருளுர மில்லாமையால் முதலாளிகளின் ஆதரவு பெற வேண்டியவர்களாவர். வேலை நிறுத்தம் புரிந்தால் தொழிலாளராலேயே நீண்டநாள் தாங்கல் இயலாது. முதலாளிகளுக்கு ஊதியங் குறையுமேயன்றி உணவுத் தட்டேற்படாது. தொழிலாளிகட்கு நேரும் முதல் இடையூறு பசித்துன்பமே. பசியை அடக்கத்தானே குறைந்த கூலிக்கும் உழைக்கின்றனர்? இனி, வேலை நிறுத்தஞ்செய்து, தங்கள் உழைப்பின் பலனை முதலாளி

கள் உணரும்படி செய்தாலன்றித் தொழிலாளிகளின் நலனை அவர்கள் எண்ணமாட்டார்கள். தொழிலாளர் களைத் தூண்டுகின்ற தலைவர்கள் மட்டும் தொழிலாள ரின் பிணியை எங்ஙனம் நிறுத்தமுடியும்? எனவே வழிகாட்டுதல் தலைவர்களிடமிருந்தாலும் தொழிலாளர் களே தங்கள் தியாகத்தின் மூலமாகத் தங்களுக்குப் பின்னர் வரும் தொழிலாளர்க்கேனும் நலம் விளைத்தல் வேண்டும். தியாகம் புரிந்தாலன்றி முதலாளிகளின் மனம் இளகாது.

எனவே, தொழிலாளர் இயக்கத்திலே எவ்வளவு துன்பங்கள் தலைவர்கட்கும் தொழிலாளர்கட்கும் நேர்ந் தன என்பதை ஒரு சான்றின் வாயிலாகக் காண்போம்.

சுந்தரனார் தொழிலாளர்க்குப் பொருளாதார உணர்ச்சியை ஊட்டவேண்டுமெனப் பன்னெடுநாள் நினைந்திருந்தார். தொழிலாளர் இயக்கம் வேரூன்றிய பிறகு, அதைமெல்லமெல்லத் தொழிலாளர் உள்ளத்திலே நட்டார். செல்வம் ஒருபுறம் பெருகி மற்றொருபுறம் அருகுவது ஓருடம்பிலே ஒரு பக்கம் பருத்து மற்றொரு பக்கம் சூம்புவதுபோல் உலகிடைத் தீங்கு பல விளையும் என்பதை விளக்கிச் செல்லிவந்தார். "தொழிலாளர்கள் உழைத்துச் சம்பளம்மட்டும் பெறுங் கூலிகளாய்க் காலங்கழித்தல் தவறு. தொழிலாளர் உழைப்பின்றி எவ்வகை விளைவும் உண்டாவதில்லை. ஆகையால், தொழிற்சாலைகளில் தொழிலாளர்க்கும் பொருளாதார உரிமைவேண்டும். முதற்படியாக ரூபாவுக்கு இரண்டணு வாவது ஊதியத்திலே பங்குபெறல் தொழிலாளர்க்கு வேண்டும். எவ்வழியாவது தொழிலாளர்க்குத் 'தாம் வேலைசெய்யும் சாலைகளில் உரிமையுண்டு' என்னும்

உணர்வுண்டாகுமுறையிலே அரசாங்கம் சட்டம் செய்தல் வேண்டும். இவ்வுரிமை பெறத் தொழிலாளர் கிளர்ச்சி வேண்டும்.'' என்னும் கருத்தைத் தம் சொற்பொழிவுகளிலே பரப்பினர்.

இப்பேச்சு 'நச்சுவிதை' என்று முதலாளிகளும் சில அரசியல் தலைவர்களும் கருதி வெறுத்தனர். தொழிலாளர்களோ தாம் ஒரு புதிய உலகிலே செல்வதாக எண்ணினர். நிற்க.

1921-ஆம் ஆண்டு மேமீ 17-ந் தேதி வாக்கில் 'கர்நாட்டிக் மில்'லில் 'கார்டிங்' பகுதியில் ஊதியம் பற்றிய தகராறெழுந்தது. இரண்டு தொழிலாளர் நீக்கப்பட்டனர். எனவே, அப் பகுதியினர் வேலைநிறுத்தம் செய்தனர். அதனால் மில் மூடப்பட்டது. 17, 18, 19—5—1921-இல் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயருடன் சைவ சமயச் சொற்பொழிவு செய்யத் திருப்பாதிரிப்புலியூர் சென்றிருந்த சுந்தரனார் இதனைச் செய்தித்தாளிலே கண்டார் விரைந்துவந்து வேலைநிறுத்தக்காரரைக் கூப்பிட்டு, 'நீங்கள் சங்கத்தின் ஆணையின்றி வேலை நிறுத்தஞ் செய்தது தவறு. எல்லோரும் வேலைக்குச் செல்லுங்கள்' என்றார். அப் பகுதியினர் வேலைக்குச் சென்றனர். 'கார்டிங்' பகுதியினர்க்கேயன்றி எல்லாத் தொழிலாளர்க்கும் 'போனஸ்' பறிமுதல் செய்யப்பட்டது என்றும், விரும்பினால் தொழில் செய்யலாம் என்றும் மில் முதலாளிகள் அறிவித்தனர். ஒரு பகுதியில் நேர்ந்த இடையூற்றுக்காக எல்லோருக்கும் 'போனஸ்' பறிமுதல் செய்தல் அறமன்றெனச் சங்கம்செய்த முடிவை மில் அதிகாரிகளுக்கு அனுப்பினர். லேபர் கமிஷனர் மாயருக்கும் அரசாங்கத்தில் தொழில்துறைப் பொறுப்பேற்

றிருந்த கே. சீனிவாச ஐயங்காருக்கும் விண்ணப்பம்செய் தனர்; பயன் இல்லை.

3—6—1921-இல் 'பக்கிங்காம் மில்' தொழிலாளர் ஒன்றுகூடிக் 'கர்நாட்டிக் மில்' தொழிலாளருக்கு ஒரு வாரத்தில் நீதி வழங்காவிடின் தாமும் வேலை நிறுத்தம் செய்வதாக மில் அதிகாரிகளுக்கு அறிக்கை விடுத்தனர். 11-உ வரை விடையில்லை. 'பக்கிங்காம் மில்' தொழிலாளர் 14உ கூடினர். 20உ அநுதாப முறையில் வேலைநிறுத்தஞ் செய்வதாக முடிவுசெய்து மில் அதிகாரிகட்கும் அரசாங்கத்திற்கும் அனுப்பினர். சுந்தர னார் 19உ தொழிலாளரைக் கூட்டி எச்சரிக்கை செய் தார். மில் முதலாளிகள் 'வேலைநிறுத்தம் நிகழாது; சங்கம் தொலைந்துவிடும்' என்று நம்பியிருந்தனர். ஆனால், 20உ வேலைநிறுத்தம் தொடங்கியது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர் தொகை பதின்மூவாயிரம்! மில்முதலாளிகள் திடுக்கிட்டனர். எனினும், முன் னொருமுறை (21—10—1920) பக்கிங்காம் மில்லில் வேலைநிறுத்தம் நடைபெற்றபோது தொழிலாளர் சேமிப்பு நிதியிலிருந்த பணம் செலவாய்விட்டதால் இப் போது வேலை நிறுத்தம் நீடிக்காதெனமில் முதலாளிகள் எண்ணினர். ஆனால், வேலை நிறுத்தப் போராட்டம் ஆறு திங்கள் நடைபெற்றது.

அப்போது வேலையின்றியிருக்கும் தொழிலாளர்க்கு உதவப் பலர் முன்வந்தனர். சில தொழிலாளர்கள் உண்டி மூலம் பொருள் திரட்டி உதவினர். தியாகராஜ செட்டியார் சென்னை மண்டிக்காரரை அணுகி நாடோ றும் அரிசி, பருப்பு, புளி, மிளகாய், உப்பு முதலியவற் றைத் தொழிலாளர்க்கனுப்புமாறு கேட்டுக்கொண்டார்;

தம் வீட்டுக்கு வரும் தொழிலாளர்க்கு உணவளித்தார். அப் பணி தவறாது நடைபெற்றது. கொத்தவால்சாவடியிலிருந்து காய்கறிகள் கிடைத்தன; கட்டைகள் வந்தன. எஸ். சீநிவாச ஐயங்காரும் பலப்பல வழிகளில் உதவி நல்கினர். வ. வே. சு. ஐயர் தொழிலாளருடன் சென்று திருவல்லிக்கேணியிலே அரிசி தண்டினார். வேறு சிலரும் துணைபுரிந்தனர்.

வேலை நிறுத்தத்தை நசுக்க மில் முதலாளிகளுடன் அரசாங்கமும் முயன்றது. வகுப்புப் பிணக்குண்டாக்கினர். ஆதிதிராவிடர்களிற் சிலரே அதற்கிரையாகிப் போலீசார் காவலுடன் மில்லிற் சென்று வேலை செய்தனர். வெளியூரிலிருந்து ஆட்கள் வரவழைக்கப்பட்டனர். போலீசும் இராணுவமும் மில் வட்டத்திலே காவல் புரிந்தன மில்முதலாளிகள் கருங்காலிகளை உண்டாக்கிவிட்டனர் அவர்கள் தொழிலாளருடன் சண்டையிட்டனர்; தொழிலாளர் வீடுகளுக்குத் தீ வைத்தனர். ஓடிட்ட வீடுகளின் ஓடுகள் பறந்தன! தொழிலாளர் மேல் போலீசார் வழக்குத் தொடர்ந்தனர். பல இடங்களில் குழப்பமும் கலகமும் எழுந்தன. சங்க நிலையம் போலீசாரால் காக்கப்பெற்றது; நிலையமும் சோதனை செய்யப்பெற்றது. சங்கத்திலே காலையும் மாலையும் அறப்போர் முறை கூறப்பட்டது. தொழிலாளர் தலைவருக்கு 144 வழங்கப்பட்டது; சுந்தரனார் நாடு கடத்தப்படுவாரெனும் வதந்தி எழுந்தது.

4—7—1921-இல் நீலகிரியினின்றும் வந்த லார்டு வில்லிங்டன் அப்போது இரட்டையாட்சிப் பதவியில் இருந்த சர். பி. தியாகராஜ செட்டியாரையும் பனகால் அரசரையும் கூட்டிச் சுந்தரனாரை நாடு கடத்தலாமா என ஆலோசித்தார். அவர்கள் இச் செயலால் தம்

கட்சிக்குக் கெட்ட பெயர் உண்டாகும் என்றும் நகரத்தில் குழப்பம் நேருமென்றும் கூறிவிட்டனர். எனவே, அந்த எண்ணத்தைக் கவர்னர் விடுத்தார். ஆனால், சுந்தரனார், சர்க்கரைச் செட்டியார், இ. எல். ஐயர், ஜலில் கான், அப்துல் ஹகீம் ஆகிய ஐவரையும் வரவழைத்து ஜஸ்டிஸ் கட்சி அமைச்சர் நிர்வாக உறுப்பினர் முன்னிலையிலே, 'தொழிலாளர் வேலைநிறுத்தம் காரணமாகச் சென்னையில் வெட்டும் குத்தும் வெடியும் தீ வைத்தலும் நடைபெறுகின்றன. அவற்றிற்கு நீங்களே காரணர் என அறிகிறேன். இனியும் நிகழ்ந்தால், நாடு கடத்தப்படுவீர்கள்' என்று எச்சரிக்கை மட்டும் செய்தார்.

சென்னை அரசாங்கத்தின் ஏவுதற்கிணங்கப் போலீஸ் கமிஷனர் குழப்பம் நிகழ்ந்தால் கடுமையான முறைகள் கையாளப்படுமென்றும் குழப்பம் உண்டாகுமிடத்தில் போலீஸ் காவல்வைத்துச் செலவை அங்குள்ள மக்களிடம் வாங்கப்படும் என்றும் அறிக்கை விடுத்தார்.

29—8—1921-இல் தொழிலாளர்மீது அரசாங்கம் துப்பாக்கிக்குண்டு பொழிந்தது நூற்றுக்கணக்கானவர் காயமுற்றனர். ஒரு பெண்மணியுள்பட எழுவர் மாண்டனர்! ஏழைமக்கள் தம் கூட்டாளிகட்காகச் செய்த தியாகம் இது! ஏழு பிணங்களும் சென்னையில் ஊர்வலமாக வந்தன; திருவல்லிக்கேணியிலே பிணங்கள் எரிக்கப்பட்டன. போலிசார் சார்பிலே ஒரு 'சார்ஜென்டும்' 'ஹெட்கான்ஸ்டபிளும்' இறந்தனர். குழப்பத்தைப்பற்றி நகராண்மைக் கழகத்திலும் சட்டசபையிலும் விவாதங்கள் நடைபெற்றன. ஓ. தணிகாசலம்

செட்டியார் சட்டசபையில் அரசாங்கத்தின் இழிதகவை எடுத்துக்காட்டிப் பேசியது பாராட்டத்தக்கதாயிருந்தது. தொழிலாளர்மீது நாடு இரக்கங் கொண்டது.

இறுதியில் வேலை நிறுத்தம் பயனின்றி முடிந்தது. ராஜா சர். இராமசாமி முதலியார் பங்களாவின் வெளியில் கூடிய கூட்டத்தில் சர். பி. தியாகராஜ செட்டியார், 'ஆறு திங்கள்கள் கடந்தன. இனிப் பிடிவாதம் வேண்டா. உங்களுக்கு இராஜ தந்திரம் வேண்டும். மில்களில் புது ஆட்கள் நிரப்பப்படுகிறார்கள். புது ஆட்கள் தொழிலைப் பயின்று விடுவார்களாயின் உங்களுக்குத் தொல்லை விளையும். போலீஸ் காவலையும், இராணுவக் காவலையும் கடந்து அவர்களைத் தடுத்தல் இயலாது. ஆனால், அவர்களை ஒரு வழியில் அப்புறப் படுத்தல் கூடும். நீங்கள் எல்லோரும் வேலைக்குச் செல்ல உறுதி கொண்டால் அவர்கள் வீட்டுக்கனுப்பப் படுவார்கள். ஆதலால், நீங்கள் உள்ளே போங்கள்; நன்மையே விளையும். சங்கம் சாகாது' என்று அறிவுரை கூறினார். பட்டினி கிடந்துகிடந்து போராட்டம் நடத்திச் சோர்ந்த தொழிலாளர் என் செய்வர்? திரும்பினர்.

வேலைநிறுத்தக் காலத்திலே சுந்தரனார் வெண் குதிரை பூட்டிய வண்டியொன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு நகரெங்கும் சுற்றினார். காலையிற் சென்று மாலையில் திரும்புவார். இரவில் நேரங்கழித்தே வருவார். வெண்குதிரையின் மணியொலி கேட்கும் வரையில் இராயப்பேட்டை துயிலாது. தெருத்திண்ணையிலே நண்பர்கள் காத்திருப்பர். அன்னையார் தெருவாயிற்படியிலே ஏக்கத்துடன் அமர்ந்திருப்பார். அக் காட்சி சுந்தரனார் உள்ளத்தை உருக்கும்.

ஒருநாள் இரவு பிரம்பூர் சென்று வியாசர்பாடி வழியே வரும்போது ஒரு கூட்டம் வண்டியை மறித்தது. இன்னார் என அறிந்தவுடன், 'ஐயா! இரவில் வரலாமா? தனியே வரலாமா?' என்று எச்சரிக்கை செய்து ஜெனரல் ஆஸ்பத்திரி வரையில் மூவர் துணையாகவந்து விட்டுச் சென்றனர். அவர்கள் முதலாளிகளால் அமர்த்தப்பட்ட கருங்காலிகளே என்று சுந்தரனார் அறிந்தார். மற்றொருநாள் வண்டி கோட்டை வழியாக வரும்போது மன்றோ உருவச்சிலையின் அருகில் ஒரு மரத்தடியினின்றும் ஒரு கூட்டம் வண்டியைத் தொடர்ந்து ஓடிவந்தது; இவருடன் வந்த நடேச நாயகரும் ஐயமுற்றார். பி. ஆர். அண்டு சன்ஸ்வரை ஓடிவந்த அக் கூட்டம் நின்றுவிட்டது. அது விளையாட்டாக ஓடிவந்ததாம்.

சங்கங்களின் கூட்டம் நடைபெறும்போது, கட்டளையின்றிப் போலீசார் உள்ளே நுழைதல் ஆகாதென்ற சட்டம் இருந்தது. தொழிலாளரின் உறவினன் ஒருவன் ஒற்றனாக இருந்து சங்க நிகழ்ச்சிகளைக் குறித்தனுப்பிக் கொண்டிருந்தான். இது ஒருநாள் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு முதிய வைதிகர் ஒருவர் இராயப்பேட்டையிலே இவர் வீட்டிற்கு அடிக்கடி வந்து இவரிடம் உரையாடியும் மலர்களைப் பூசைக்குக் கொண்டுவந்து கொடுத்தும் பழகி ஒற்றறிந்து வந்தார். அதுவும் ஒருநாள் கண்டுபிடிக்கப்பட்டது.

ஓரொற்றன் தொழிலாளருடன் பழகிப் பழகித் தோழமை பூண்டான்; தொழிலாளர் சங்கத்துக்கு வந்தான். சில நாட்கள் கழித்து அவன் சூழ்ச்சியும் வெளியாயிற்று. தொழிலாளர்களிடம் இரவு 11-மணிக்கு வந்து தற்காப்புக்குப் பயன்படுத்திக் கொள்ள வெங்காய

வெடிகளை வாங்கிக்கொண்டு போமாறு அவன் அவர்களிடம் கூறுவதென்றும், அவர்கள் கொண்டு செல்லும்போது போலீசார் சிறைப்படுத்தவேண்டும் என்றும் அவன்மூலம் போலீசார் திட்டமிட்டிருந்தனராம்.

இவ்வாறு பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொழிற் சங்கங்களின் ஊக்கம் ஆறு திங்கள் போராட்டத்திற்கப்புறம் சோர்ந்துபோயிற்று. மத்தியச் சங்கம் மறைந்தும் போயிற்று.

சுந்தரனாரின் உடல்நலம் குன்றியது. 20—9—1923-இல் ஒரு கூட்டங்கூட்டி நடேச நாயகர் என்னும் தொழிலாளரைத் தலைவராக்கிவிட்டு இவர் நிர்வாக உறுப்பினராகமட்டும் இருந்துவந்தார்.

16—2—1924-இல் நடைபெற்ற சென்னை மாகாணத் தொழிலாளர் இரண்டாவது மாநாட்டிலே சுந்தரனார் செய்த சொற்பொழிவு தொழிலாளரை மீண்டும் ஊக்கத்துடன் சங்கம் நடத்தத் தூண்டியது. 1924, 25, 26-ஆம் ஆண்டுகளில் காங்கிரசிலே பெரிதும் ஈடுபட்டுத் தொழிலாளர் பணியிலே சிறிது ஓய்வுபெற்றார். 1926 ஜனவரி முதல்வாரத்திலே அகில இந்தியத் தொழிலாளர் காங்கிரசு சென்னையிலே கூடியபோது (எட்வர்டு பார்க்கில்) சுந்தரனார் தொழிலாளர்க்கு ஊக்கம் ஊட்டினார். 1927 பிப்ரவரி 27-ஆம் நாள் 'சாபூர்ஜி சக்லத்வாலா' என்பவர் சென்னைத் தொழிலாளர் சங்கத்திலே அவர்கட்கு ஊக்கமூட்டும் வகையிலே பேசினார்; மேனாட்டுக்கும் இந் நாட்டுக்கும் தொழிலாளர் நிலையிலுள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டினார்.

1927-ஆம் ஆண்டு நடத்திய நகரசபைத் தேர்தலிலே காங்கிரசுடன் போட்டியிட்ட செல்வபதி செட்

டியார் வெற்றிபெற்ருர். இவருக்குத் தேர்தலிலே வெற்றி கிடைக்கும்படி ஆதரவு செய்தார் நம் சுந்தரனுர். சுந்தரனுர் பின்னர்ப் பல இடங்களில் நடைபெற்ற தொழிலாளர் மாநாடுகளிலே கலந்து தொண்டுசெய்தார்.

மாமண்டூர் உழவுத்தொழிலாளர் வேலைநிறுத்தத்தை வி. எம். இராமசாமிமுதலியார், வி. வி. கிரி ஆகியோருடன் சுந்தரனுர் சென்று சமாதானஞ் செய்ய முயன்ருர். 1935-ஆம் ஆண்டு மீண்டும் மத்தியச்சங்கம் எழுந்தது. இவர் தலைவரானுர். அடிக்கடி சென்று தொழிலாளர்க்குத் தொழிலியக்க வரலாறுகளை எடுத்துக் கூறிவந்தார்.

காங்கிரசின் ஆட்சியிலே மீண்டும் ஒருமுறை 1939-இல் சூளைமில்லில் வேலைநிறுத்தம் நடந்தது. அவ் வேலைநிறுத்தத்திலே நூறு தொழிலாளர் சிறை சென்றனர். சூளைமில்லை மூடிவிடுவதென வேலைநிறுத்தத்துக்குமுன்னரே செய்திருந்த முடிவுப்படி இப்போது மூடிவிட்டனர். பழி தொழிலாளர் தலையில் விடிந்தது.

1938-இல் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்யும் உரிமையைப் பறிக்கும் சட்ட மொன்றியற்றப் பம்பாய் அரசாங்கம் முற்பட்டபோது 11—11—1938-இல் சர்க்கரைச் செட்டியார் தலைமையில் பல தொழிலாளர் தலைவர்கள் அரசாங்கத்தைத் தாக்கிப் பேசினர். அப்போது, காங்கிரசைத் தாக்குதல் கூடாதென எழுந்த குழப்பத்தைத் தணித்து அமைதியை நிலைநாட்டிக் கண்டனத் தீர்மானம் நிறைவேறச் செய்தார் நம் சுந்தரனுர்.

மற்றெருமுறை 'கர்நாடிக் மில்'லில் 'ஸ்பின்னிங் டிபார்ட்மெண்'டில் நடந்த தொழிலாளர்களின் தகராறு உள்வேலை நிறுத்தத்திலே கொண்டுவந்தது. போலிசார்

யில் அதிகாரிகள் சார்பில் உள்ளே நுழைந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். எழுவர் மாண்டனர். வெளியிலும் இருவர் மாண்டனர். சங்கம் நோக்கிவந்த சுந்தரனார் வெளியில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் மாண்டதை நேரிற்கண்டு கலங்கினார். அங்கிருந்த போலிஸ் அதிகாரி ஒருவர் இவரை, 'இங்கு ஏன் நிற்கிறீர்கள்?' என்று வினவினார். 'என் ஈரமனம் துப்பாக்கியை நாடுகிறது' என்றார் இவர்! அப்போது இவர் மனம் குழம்பிநின்றது.

நாளடைவிலே தொழிலாளர் இயக்கம் கட்சிப் பிணக்கிலும் சிக்கியது. அதைக்கண்டு இவர் மனம் வருந்தியது. சுந்தரனார் செய்த நாட்டுப்பணிகளிலே தலைசிறந்தது தொழிலாளர் பணி என்னலாம். தாம் பணி செய்த காங்கிரசுக் கட்சி ஆட்சிக்கு வந்தபோதும் தொழிலாளர் சார்பிலே நின்று காங்கிரசை எதிர்த்திருக்கிறார்.

**சமயம்**

சமயம் என்பது நெறி. சமயம் ஒரு குறிக்கோளுடையது. அக் குறிக்கோள் இறைவன். இறைவனுக்கு உருவம் இல்லை; பெயரும் இல்லை. 'ஒரு நாமம் ஓருருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம்' கண்டனர் ஆன்றோர். சிவன், திருமால், என்பன போன்ற பெயர்கள் ஓர் இறைக்கே அமைந்தவை. எனினும், சைவம், வைணவம், வேதாந்தம், கிறித்துவம், இஸ்லாமியம் போன்ற சமயங்கள் மக்களைத் தனித்தனிக் குழுவாகப் பிரித்துவிட்டன. இவற்றிடையே பூசல்களும் நேர்கின்றன. இவற்றை ஒற்றுமைப்படுத்தினால் மக்களிடை ஒற்றுமை நிலவும். ஒற்றுமைக்கு வழி யாது? சமயங்களின் கருத்துக்கள் ஒற்றுமைப் பட்டிருப்பதை மக்க

ளிடை எடுத்துக்கூறி வேற்றுமையை அகற்றுவதே யாம். இவ்வழியிலே இப்போது பலர் முயல்கின்றனர். கலியாணசுந்தரனாரிடம் சமய ஒற்றுமை காணும் கருத்தும் சொல்லும் செயலும் மிளிர்ந்தன. அதனால், இவரைச் சைவப் பெரியார் பலர் வெறுத்தனர். எனினும், இவர் தம் கொள்கையிற் பிறழவில்லை. 'சமயமும் சன்மார்க்கமும்' என இவர் தம் வாழ்க்கைக் குறிப்பிலே கூறும் பகுதி இதனை வற்புறுத்தும்; இவர் எழுதிய நூல்கள் வற்புறுத்தும்.

இவர் தந்தை சைவர். இவர் சிறுவராக இருக்கும்போது தந்தையுடன் சிவபிரான் திருக்கோயிலுக்குச்செல்வார் தந்தையின்பால் சிவபுராணக்கதைகளைக் கேட்டார். பொருளறியாத இளம்பருவத்திலே சோமசுந்தர நாயகரின் சொற்பொழிவுகளைக் கேட்டாலும் சைவக் கருத்துக்கள் பதியவில்லை. இவர் லோயர் செகண்டரிதேர்ந்த 1901-டிசம்பரிற் கதிரைவேற்பிள்ளையவர்களின் சைவச் சொற்பொழிவைக் கேட்டதிலிருந்து சைவத்தின் பொருளறியத் தொடங்கினார். 1902 முதல் கதிரைவேலர் இவர் பயின்ற வெஸ்லியன் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராக வந்ததிலிருந்து நெருங்கிய பழக்கமும் சைவப் பற்றும் உண்டாயிற்று. பாலசுப்பிரமணிய பக்தஜன சபை 1903-இல் கதிரைவேலரைக் கொண்டு தோன்றியது. சுந்தரனாரும் உடன்பயிலும் மாணவர்களும் சபைக்குப் பணிபுரிந்தனர். மூன்று ஆண்டுவிழாக்கள் கதிரைவேலரின் தலைமையிலே நடைபெற்றன.

அந்நாளிலே இராயப்பேட்டையில் சுப்பராயசெட்டியார் என்பவரால் வேதாந்த நூல்கள் பாடஞ்சொல்லப்படும். சில நாட்களில் நாராயணசாமி தேசிகர்,

கோ. வடிவேலு செட்டியார் முதலான அறிஞர்கள் வந்து சொற்பொழிவு செய்வர். அவர்கள் சைவத்தையும் கதிரைவேலரையும் தம் சொற்பொழிவிடையே தாக்கிப் பேசுவர். கதிரைவேலரும் வேதாந்தத்தையும் வேதாந் தச் சொற்பொழிவாளரையும் தாக்குவார். அந்நிலையிலே சுந்தரனார் வேதாந்த சபையாரைத் தாக்குவார். இவரும் இவருடைய கூட்டாளிகளாகிய பிற மாணவர்களும் கதிரைவேலரின் முன்னணிப் படைபோல் இலங்கினர்.

இங்ஙனம் தொடக்கத்தில் இருந்தாலும் கதிரை வேலர் இறைவனடி சேர்ந்த பிறகு, பிறசமயத் தாக்கு தல் இவரிடமிருந்து விலகியது. சைவசித்தாந்த நூல் களைத் தணிகாசல முதலியார் முதலியோரிடம் கேட்டுத் தெளிந்தார். பிறசமயச் சொற்பொழிவுகளையும் கேட் டார்; நூல்களையும் பயின்றார். பள்ளியிற் பயிலும்போது கிறித்துவ நூலான பைபிளைப் பயின்றார். பிறகு, பைபி ளின் பொருளை மேல்வகுப்புக்களிலே உணர்ந்தார். மலைச் சொற்பொழிவு இவருக்குப் பிடித்தமானது. வெஸ்லியன் பள்ளித் தலைமையாசிரியரான ஜான் ரத்தினம் முதலி யோரிடம் வாதித்துக் கிறித்துவசமயக் கருத்துக்களை உணர்ந்தார். சமயங்களில் உள்ள நல்ல கருத்துக்கள் ஒருதன்மையாகவே இருக்கின்றன என்று கண்டார். கிறித்துவின் சுவிசேஷமும் மாணிக்கவாசகர் திருவாசக மும் ஒற்றுமைப்பட்டுள்ளன என்று துணிந்தார். பின் னர் இவருக்குச் சமயங்கள் சார்பான சொற்பொழிவுக ளிலே சீர்திருத்த நோக்கே மிளிர்ந்தது.

பாலசுப்பிரமணிய பக்தஜனசபை கதிரைவேற் பிள்ளைக்குப் பிறகு திருப்பாதிரிப்புலியூர் இராசப்ப முத லியாரைத் தலைவராகக் கொண்டது. அதற்கொரு மண்டபங்கட்ட இவர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயருடன் செய்த

திட்டம் இவருடைய சீர்திருத்த நோக்கத்தை வெறுத்த சபையாரின் எண்ணத்தால் நின்றுபோயிற்று. இவருடைய சீர்திருத்த விழைவை வேண்டாத சபையார் நிலைநோக்கி இவர் சிறிது விலகியே இருந்தார். 1934-இல் மீண்டும் சபையினர் இவரை விழைந்தனர். இவரும் இணங்கினார், ஞானியார் அடிகளின் தலைமையிலே அந்த ஆண்டு விழா நடந்தது. 1934 முதல் நான்காண்டுகள் இவர் தலைவராக இருந்து சபையைக் கவனித்தார். பிறகு சச்சிதானந்தம் பிள்ளை விளங்கினார். பின்னர் பொ. மீனாட்சி சுந்தரனார் தலைவ்ராக இலங்கினார்.

சுந்தரனாருடைய சைவச்சொற்பொழிவுகள் பாலசுப்பிரமணிய பக்தஜனசபையில் மட்டுமின்றி வேறு பல இடங்களிலும் நிகழ்ந்தன.

1908-இல் திருவல்லிக்கேணியிலே சிவனடியார் திருக்கூட்டம் என ஒருசபை தோன்றியது. அதன் தலைவராகச் சுந்தரனார் விளங்கினார். திருவல்லிக்கேணி சுப்பராயநாயகர் என்பவர் சிவம்பழுத்த மனமுடையவர். அன்பிற்சிறந்த அவர் வீட்டிலே பெரியபுராணச் சொற்பொழிவு வகுப்புமுறையிலே ஏழாண்டுகள் ஞாயிறு தோறும் நடைபெற்று ஒரு காண்டம் முடிந்தது. இங்கு நடைபெற்ற ஆண்டுவிழாக்களில் சாதி வேற்றுமை முதலியன இன்றியே உணவளிக்கப்பட்டது.

1915-இல் சென்னை—புதுப்பாக்கத்திலே ஸ்ரீ சிவசுப்பிரமணிய பக்தஜனசபை தோன்றியது. அச் சபையிலும் முதல்தலைவர் சுந்தரனாரே. அச் சபையிலே 'ஜஸ்டிஸ்' கட்சியினர் தொகை பெருகியது. காங்கிரசினராகிய இவர், அச்சபையின் தலைமைப் பதவியைத் தாமே விட்டு விலகினார். 1940-இல் அச் சபையின் வெள்ளிவிழா இவர் தலைமையிலேயே நடைபெற்றது.

1911-இல் சென்னை விக்டோரியா மண்டபத்தில் ஜெ. எம். நல்லசாமிபிள்ளை தலைமையில் நடைபெற்ற சைவசித்தாந்த மகாசமாச ஆண்டுவிழாவிலே 'சைவன் எவன்?' என்னும் பொருள்பற்றிச் சுந்தரனார் பேசினார். சாதிமதங்கடந்த அன்புநிலையே சைவத்தின் குறிக்கோள் என்று இவர் பேசியது சாதிவிழைவுடைய சைவர் பலருக்குப் பிடிக்கவில்லை. 1912-ஆம் ஆண்டுக்கு இச் சமாசத்தின் செயலாளராகத் திரு. சச்சிதானந்தம் பிள்ளை தேர்ந்தெடுக்கப்பெற்றார். சுந்தரனாரும் இவரும் தாழ்த்தப்பட்டோர் இருப்பிடங்கட்கெல்லாம் சென்று சைவச்சொற்பொழிவு செய்தனர். காஞ்சியிலே நடைபெற்ற ஆண்டுவிழாவிலே சுந்தரனார், 'அப்பர் கொள்கை' என்பதுபற்றிப் பேசினார். அப்போது பாதிரியார் ஒருவரை ஒரு சைவ நண்பர் திருத்தணிகைக் கோயிலினுள் அழைத்துச்செல்ல மறுப்பதுபோன்ற உரையாடலை அமைத்துப் பேசினார். அப்பேச்சும் சைவர் பலருக்கு வெறுப்பூட்டியது. 1913-ஆம் ஆண்டிலே சமாச ஆண்டுவிழா வேலூரில் நடைபெற்றது. அப்போது 'சிவஞானபோத நுட்பம்' என்னும் பொருள்பற்றிச் சுந்தரனார் பேசினார். அப்போது தலைமையேற்றவர் ஞானியார் அடிகள். அவ் விழாவின்போதுதான் முதன் முதல் ஞானியாரடிகளை இவர் நேரிற்கண்டார். அவ் விழாவின்போதும் இவர் கூறிய கருத்துக்கள் ஜெ. எம். நல்லசாமி பிள்ளையவர்களும் யாழ்ப்பாணம் சபாரத்தின முதலியாரும், 'தப்பு! தப்பு!!' எனக் கூறச்செய்தன. ஞானியாரடிகளும் தம் முடிவுரையிலே, 'குழந்தை கையில் கத்தியும் பழமும் கொடுக்கப்பட்டால் அது? கையையும் அறுத்துக்கொள்ளும்' என்றனர். இவ்வாறு இவருடைய சீர்திருத்தக் கருத்துக்கள் ஆங்காங்கே

வெறுக்கப்பட்டாலும் இவர் மனம் சீர்திருத்தத்திலேயே நின்றது. 1930-இல் சமாசத்தின் வெள்ளிவிழா கிழக்கு மருதூரில் பெருநிலக்கிழவர் நாராயணசாமி நாயுடுவின் திருமணத்தின்போது நடைபெற்றது. முதல்நாள்விழா சுந்தரனார் தலைமையில் நடந்தது. அது 'நினைப்பவர் மனம்' என்னும் நூலாக விளங்கியது. பின்னர் 1934-ம் ஆண்டு சமாசவிழா திருவதிகையில் நடைபெற்றபோது இவர் தலைமையேற்றார். ஞானியாரடிகள் திறப்புவிழா நடத்தினார்கள். இவர்தம் தலைமையுரையிலே சைனத்துக்கும் சைவத்துக்கும் உள்ள தொடர்பை விளக்கினார். அப்போதும் சிலருக்கு அது கலக்கத்தையே உண்டாக்கியது.

தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையிலே 1912, 1913-ஆம் ஆண்டுகளில் மறைமலையடிகளுடன் சென்று சைவச்சொற்பொழிவு செய்தார். பின்னர் 1924-ஆம் ஆண்டிலும் 1928-ஆம் ஆண்டிலும் தலைவராயிருந்தார். அப்போது பேசிய தலைமையுரைகள் 'சைவத்தின் சமரசம்,' 'சைவத்திறவு' என்னும் நூல்களாக வெளிவந்துள்ளன.

பூவாளூர் சைவசித்தாந்த சபையிலே 1924-ஆம் ஆண்டிலே தலைவராய்ப் பணிசெய்தார். மற்றொருமுறை 1929-ஆம் ஆண்டிலும் தலைமைப்பணி புரிந்தார். அந்த ஆண்டு இவரும் ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் காங்கிரசுப் பணிபுரிந்தகாலம். நாயக்கர் கூட்டத்தார் சிறு குழப்பம் விளைவித்தனர்.

இவ்வாறு இவர் பல சபைகளில் சைவச்சொற்பொழிவுகள் சீர்திருத்தமுறையிலேயே நிகழ்த்தினார். சீர்திருத்தப்பேச்சை விழையாத சபைகள் சில இவரை

அழையாமலும் இருந்தன. அவைகளும் ஈ. வெ. ராவின் சுயமரியாதைப் பிரசாரத்திற்குப் பின் இவரை அழைத்தன.

நூலாராய்ச்சியாலும், பிரசாரத்தாலும், திருக்கோயில் வழிபாட்டாலும் சைவசமயத்தின் சமரசம் இவரிடம் வேரூன்றியது. சாதி மொழி நிறம் மதம் நாடு முதலிய கட்டுக்கள் சைவத்திற்கேலா என்று கொண்டார். தாயுமானாரும் இராமலிங்க அடிகளும் இவர் கொள்கைக்கு ஆதரவு நல்கினர். இராமலிங்க அடிகளுக்குப்பின் மறைமலையடிகளும் இவரும் சைவத்திலே சமரசத்தைக்கண்டவர்கள் எனலாம். இந்த நோக்கத்தை இவர் எப்போதுங் கைவிட்டதில்லை. தாம் எழுதிய கதிரைவேற்பிள்ளை வரலாற்றிலும்—அவர் பிற சமய எதிர்ப்பாளராக இருந்தும் — கடவுள் வாழ்த்திலே திருமால்வாழ்த்துப் பாடி வைத்தார். இவர் கருத்துக்கு மாறாக அவ்வரலாற்றைப் பதிப்பித்தோர் அச் செய்யுளை நீக்கிவிட்டனர், அந்நூலைப் பதிப்பித்த வேதாகமோக்த சைவசித்தாந்த சபையிலே ஒருமுறை வாதவூரடிகள் புராணங்கூற நேர்ந்தபோது திருமால் வாழ்த்தைக் கூறியே பயணந் தொடங்கினார். அச் சபையார் அதனை விரும்பவில்லை. பின்னர் இவரும் அங்குப் புராணங் கூறவில்லை. ‘தமிழ்நாடும் நம்மாழ்வாரும்’ என்ற நூலும் திருமால் அருள்வேட்டலும் இவராற் செய்யப் பெற்றனவே. அருக சமயத்துக்கும் சைவசமயத்திற்கும் உள்ள ஒருமைப்பாட்டைச் ‘சித்தமார்க்கம்’ என்னும் நூலாக வெளியிட்டார். ஒரு பௌத்தசங்க ஆண்டு விழாவிலே (6—4—1928) ‘தமிழ் நூல்களிற் பௌத்தம்’ என்ற பொருள்பற்றிப் பேசினார். அது ஒரு நூலாக வெளிவந்தது. நபிநாயகம் பிறந்த திருநாட் கொண்டாட்

டத்திலே பல இடங்களிற் சொற்பொழிவு செய்துள்ளார். மாயவரத்தில் (19—6—1936) கூடிய ஒரு மாநாட்டிலும் தென்காசியில் (27—5—1937) கூடிய ஒரு மாநாட்டிலும் தலைவராக இருந்திருக்கிறார். 'முடியா? காதலா? சீர்திருத்தமா?' என்ற நூலிலே தாம் உணர்ந்த முறையிலே கிறித்துவத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

1929-இல் யாழ்ப்பாணத்திலே மாணவர்காங்கிரசிலே தலைமையேற்றபோது சைவ கிறித்துவ ஒற்றுமையை விளக்கினார். கிறித்துவசமயத்திலே இவருக்கு ஈடுபாடு மிகுதியாயினும் மதமாற்றத்தை விரும்பவில்லை. இவர் "ஒவ்வொருபோது உலகம், வேராக உள்ள சன்மார்க்கத்தை மறந்து, சமயங்களின் பன்மைமீது மட்டும் கருத்தைச் செலுத்தித் தடுமாற்றமுறும். அவ்வப்போது பெரியோர் தோன்றி ஒருமைச் சன்மார்க்கத்தை அறிவுறுத்துவது மரபாக இருந்து வருகிறது. அப் பெரியோர் பலர். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தோன்றியவர் சிலர். அவருள் குறிக்கத்தக்கவர் மாது பிளவட்ஸ்கி, இராமகிருஷ்ணர், இராமலிங்கசுவாமிகள், இவர்கள் போதனைகள் எனக்குச் சன்மார்க்க விருந்தளித்தன," என்று தம் வாழ்க்கைக்குறிப்பிலே, கூறியிருக்கிறார்.

# ரு. நூல்கள்

நூலாசிரியனுக்கு இரண்டு உடம்புகள் உள்ளன. ஒன்று எல்லோருக்கும் உள்ளதுபோன்ற ஊனுடம்பு. மற்றொன்று பண்புடம்பு, பண்புடம்பு நூலிலே காட்சியளிக்கும். ஊனுடம்பு அழியக்கூடியது. பண்புடம்பு நூலிலே மிளிர்வதால் எப்போதும் அழிவின்றி விளங்கும். எனவே, அழிவிலா உடம்பு நூல் என்று கூறிவிடலாம். சுந்தரனாருடைய நூல்கள் அத்தகைய பெருமையுடையவை. அவை தமிழன்னையின் புத்தணிகளுமாகும்; தமிழர்களின் அழியாச் செல்வமுமாகும்.

சிலர் பேச்சில் வல்லவராக இருப்பர், எழுத்திலே மெலிவர். சிலர் எழுத்தில் வல்லவராக இருப்பர்; பேச்சிலே பின்னிற்பர். சுந்தரனாருடைய எழுத்தும் சொல்லும் முன்னிற்பவையே; எக்காலத்தும் பின்னிற்பவை அல்ல. மற்றும் இரண்டும் ஒரே நடையாகும்; இலக்கிய நடையாகும்; கற்பனையும் அணியும் செறிந்த நடையாகும். இவருடைய நடை பாடஞ்செய்யும்படி அத்துணை ஆர்வத்தையூட்டும். மாணவர்கள் இவர் நடையை அவ்வாறே பாடஞ் செய்து மகிழ்வர். அணிபல செறிந்த-சுவைமிக்க-பொருள் பொதிந்த-செந்தமிழ்ச் சீரிய நடை இவருடைய நடையெனல் புகழுரையன்று. இப்போது பலவகைத் தமிழ்நடைகள் தமிழ்நாட்டிலே உலவுகின்றன. செய்தித்தாள் நடை பலவகை; திங்கள் வெளியீடு நடை பலவகை; வார வெளியீடு நடை பலவகை. தனித்தமிழ் நடை ஒரு பக்கம்; கலப்புத்தமிழ் நடை ஒரு பக்கம்; பேச்சுத்தமிழ் நடை ஒரு பக்கம். இலக்கண

நடை ஒரு பக்கம்; இலக்கணம் வேண்டா நடை ஒரு பக்கம்; இன்ன நடைதான் தமிழ்நடை என முடிவுசெய்ய முடியாத தமிழ் நாட்டிலே சுந்தரனார் தமிழ்நடைமட்டும் உலவினால்-அவ்வாறுதான் எழுதுதல் வேண்டும் என அரசாங்கம் சட்டம் இயற்றினால்-நன்மை விளையும் என்பதில் ஐயமில்லை.

நல்ல தமிழ் நடை தமிழ்நாடு பெறவேண்டுமானால் சுந்தரனாருடைய தமிழ்நடையை எல்லோரும் பின்பற்ற வேண்டும்.

அவர் தமிழ் மாணவர்கட்கு 'இளமை விருந்'திலே கூறுவதை நோக்குக :

"அருமைத் தமிழ் மாணக்கர்களே! உங்கள் நாட்டை நோக்குங்கள். அஃது எப்படியிருக்கிறது? அருமைத் தமிழ்நாடு சின்ன பின்னமாகச் சிதறுண்டு கிடக்கிறது! காரணம் என்னை? தலையாய காரணம் என்னை? தாய் மொழியைப் பேணாமை. அதனை ஓம்பாமை-அதன்பால் பற்றுள்ளங் கொள்ளாமை. தமிழ்த்தாயின் நிலையை உன்ன உன்ன உள்ளங் குழைகிறது. உலகத்திலுள்ள எல்லாத் தாய்மார்களிலும் நம் செந்தமிழ்த்தாயே மிக இழிநிலை யுற்றிருக்கிறாள். ஒருபோது முடியணிந்து கோலேந்திக் கலையணிந்து அரியாசனம் வீற்றிருந்த நம் அன்னை-எல்லோர்க்கும் மூத்த நம் பேரன்னை-இப்போது எந்நிலையில் இருக்கிறாள்? அவள் முடியிழந்து, கோலிழந்து, கலையிழந்து, நலமெலாம் இழந்து கிடக்கிறாள்; அவள் உடற்கூறுகள் எல்லாம் ஊறுபட்டுக் கிடக்கின்றன. அவள் முகமெல்லாங் குறுமறுக்கள் எழும்பி, அவள் எழிலைக் கெடுத்து வருகின்றன. அவளிருக்கத் துச்சிலும் இல்லை அவளைத் தூறும் புற்றும் மூடிக் கொள்ளுமோ என அஞ்சுகிறேன்."

என்று தமிழன்னையின் நிலையை அவர் எடுத்துக் காட்டியுள்ளது சிறிதும் கற்பனை கலவாத உண்மையாகும். ஆகவே, அவர் தமிழ்நடை தமிழன்னையின் நோயையெல்லாம் போக்கும்-இன்பத்தேன் பிலிற்றும்-நடையாகும்; சிறுசிறு சொற்கள்-நுட்பக் கருத்து-மொழி, நாடு, கலைகளின்பற்று விழுமியவாகக் கலந்த நடை, அணிநலஞ் செறிந்த பாவினைப் படிப்பதுபோல இவர் நடை இனிக்கும்.

இவரெழுதிய நூல்கள் பலவற்றின் சிறப்பையும் தனித்தனியே எடுத்துக்கூறுவது இயலாத தொன்றாகும். நுண்மாண் நுழைபுலம் திகழும் இவருடைய நூல்கள் மதிப்புரை வேண்டாதவை; பிறர் பின்பற்றும் இலக்கணமாய் அமைந்தவை. எனவே, அவை எப்போது எதன் பொருட்டு எழுதப்பட்டவை? உள்ளுறை என்ன? என்பவற்றை மட்டும் காலவரை முறையிலே ஒருவாறு கூறுவோம்; இவரெழுதிய நூல்கள் உரைநடையும் செய்யுளும் என இருவகைப்படும். முதலில் உரைநடை நூல்களும் பின்னர்ச் செய்யுள் நூல்களும் கூறப்படும்.

## அ. உரைநடை நூல்கள்

**என்கடன் பணிசெய்து கிடப்பதே!**

இம்மொழி திருநாவுக்கரசருடையது. அவருடைய வாழ்வின் அடைவு இத்தொடராற் குறிக்கப்பெறுகிறது.

‘இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும்
உழவாரத்தின்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே
பதித்த நெஞ்சும்’

உடையராய்ச் சிவபெருமான் திருக்கோயில்தோறுஞ் சென்று பணிபுரிந்து, தமிழ்மறை ஓதிய பேரருளாளரான

அப்பர், பல்லவ மகேந்திர வர்மனுடனும் சமணருடனும் அறப்போர் புரிந்து வெற்றிகண்ட வீரர். அப் பெரியார் அருளிய இத் தொடரிலே சுந்தரனாருக்கு அளவிலாப் பற்றுண்டு இளமையில் இதைப்பற்றிப் பல சொற் பொழிவுகள் நிகழ்த்தினார். இத் திருவாக்கைப் பற்றி ஒரு கட்டுரை வரையப் பன்னெடுநாள் எண்ணியதின் பயனாகத் தேசபக்தன் அநுபந்தமாக 1919-இல் ஒரு கட்டுரை இவரால் எழுதப் பெற்றது; 1921-இல் நூல்வடிவாகப் பெயர்ந்தபோது சிறுபகுதி சேர்க்கப்பட்டது; ஐந்தாம் பதிப்பிலும் சில கூடின. "என் தாய்நாடு உரிமை பெற்றாலன்றி, என் தமிழ்த்தாய் அரசுபோற்றுங் கழகமேறி அரியாசனம் வீற்றிருக்கமாட்டாள் என்றும், சிறப்பாக அரசியல் துறை நண்ணிப் பணிசெய்தால் தமிழ்த்தாய்க்கு நலம் விளையும் என்றும் எண்ணி அத் துறையில் இறங்கித் தொண்டு செய்யலானேன். இந்நூலிலும் தேசப்பணியையே பெரிதும் வலியுறுத்திப் போற்றியிருக்கிறேன்." என்று இந்நூலின் முன்னுரையிலே இவர் கூறியதை நோக்குக. இந்நூலில் எங்கும் பணியின் மணமே கமழும். நாட்டுப் பணியின் பற்றை வளர்க்க வேண்டும் என்னும் நோக்கத்தோடே இந்நூல் எழுதப் பெற்றது.

இந்நூல் என்—கடன்—பணி—செய்து கிடப்பதே என்னும் நான்கு பிரிவாக அமைந்துள்ளது. 'என்' என்பதில், உயிர் உண்மை, அதன் முன்பின் நிலைகள், நாத்திகக்கொள்கை மறுப்பு, மேல்நாட்டுநிலை, கடமைத் தோற்றம் முதலியனவும்,

'கடன்' என்பதில் நான்குவகை வாழ்க்கை, கடமையினின்றும் பணி அரும்புதல் முதலியனவும்,

'பணி' என்பதில் இறைவன்பணி, சராசரப்பணி, எல்லாம் பணிமயம் என்பதும், உயிர்கள் பணிவிளக்கம், மனிதன் பணிநிலை இவை போன்ற பல பணிகளும்,

'செய்து கிடப்பதே' என்பதில், சகுணவழிபாடு, ஐந்தொழில், வீட்டின்பத்தினும் பணி சிறப்புடைய தென்பது, காமியப்பணி நிட்காமியப்பணி இயல் முதலியனவும் அடங்கியுள்ளன.

**மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்**

சுந்தரனார் இளமையிற் பயின்ற சில ஆங்கில நூல்களினும் தமிழ் நூல்களினும் கண்ட மெய்ப்பொருளாகக் காந்தியடிகள் இவருக்குத் தோற்றம் அளித்தார். அத் தோற்றம் இவர் வாழ்விற்கு அரணாகியது; பண்பமைத்தது; காந்தியடிகளின் அறத்தையும் அவர் வாழ்விலுள்ள நுட்பத்தையும் தமிழில் வெளியிட வேண்டும் என்னும் அவாவை எழுப்பியது அதனால், காந்தியடிகளைப்பற்றிய நூல்களைப் படிக்குந்தோறும் ஆங்காங்குக் கிடைத்த உயரிய கருத்துக்களாகிய தேனைத் திரட்டி ஒழுங்கு செய்தார்.

'தேசபக்தன்' ஆசிரியராகப் பணியாற்றியபோது, ஓர் ஆண்டு மடலில் தாம் திரட்டிய தேனைத் தமிழுலகுக்குத் தந்தார். பின்னர், அது 1921-இல் ஐம்பத்தொரு பக்கங்களில் ஒரு நூலாக 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்னும் பெயரில் வெளிவந்தது. அதுவே, 1926 இல் இரண்டாம் பதிப்பில் ஐந்நூறு பக்கங்களாக மலர்ந்தது.

நூலினூடே ஆங்காங்கே எடுத்துக்காட்டுக்களாக ஆண்டுள்ள அடிகளின் மெய்யுரைகள் பெரும்பாலும், 'யங் இந்தியா'வினின்றும் பிறநூல்களினின்றும் திரட்டி

மொழி பெயர்த்து வைக்கப்பட்டன; சிற்சில இவர் நினைவிலிருந்தும் எழுதப்பட்டன. ஒவ்வொரு பதிப்பிலும் சிற்சில பொருள்கள் சேர்ந்தும் ஒழுங்குற்றும் வெளிவந்தன; ஆறுபதிப்புக்கள் வெளிவந்துள்ளன.

இந்நூல் மூன்றுபிரிவுகளாக உள்ளன. அவை: மனிதன் எவன்—ஒருவன் மனிதனாக எத்தகைய வாழ்வை நடத்தல் வேண்டும்—மனிதவாழ்விற்கு இலக்கியமானவர் காந்தியடிகள்.

முதற்பகுதியில் மக்கட்பிறப்பின் விழுப்பமும் மனிதன் எவன் என்பதும் விளக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில் வாழ்வின் புறத்தூய்மைக்கும் அகத்தூய்மைக்கும் உரிய முறைகளும், வாழ்வின் முடிந்த நிலை இன்னது என்பதும் அந்நிலை பெற்ற சில அறப்போர் வீரர்களின் வரலாறுங் கூறப்பட்டுள்ளன. மூன்றும் பகுதியில் காந்தியடிகளின் பிறப்பு, வளர்ப்பு, கல்வி, தியாகம், உண்மைத்தொண்டு, அறம், அன்பு முதலியவற்றினின்றும் திரண்ட காந்தீயம் விளக்கப்பட்டுள்ளது.

### நாயன்மார் திறம்

சாதிப் பகைமையின்மை, அன்பு, சமயமாண்பு, தொண்டின் சிறப்பு, நாயன்மார்கொண்ட உண்மை உறுதி அஞ்சாமை ஒழுக்கம் வீரம் முதலியன, மக்கட்கு இன்றியமையாத வேறுபல செம்பொருள்கள் ஆகியவை இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. சிவனடியார் அறுபத்துமூவரைப்பற்றிக் குறிப்பிடும் இந்நூல் 1921-இல் சுதேசமித்திரன் அநுபந்தத்துக்கென வெளியிடப்பெற்றுப் பின்னர்க் காரைக்குடிச் சிவனடியார் திருக்கூட்டத்தார் விரும்பியவாறு 1922-இல் நூல்வடிவாக வந்தது.

முருகன் அல்லது அழகு

இந் நூல் சுந்தரனாரின் கருத்துப் பதிந்துள்ள அழகிய நூல். அழகு என்ற இப்பெயர் இந்நூலுக்கு முற்றும் பொருத்தமானது. பழந்தமிழர் எங்கும் நிறைந்த இயற்கையழகை முருகு என அழைத்தனர். அம் முருகின் அழியா இளமையும் மன மொழி மெய் கடந்த—நினைக்க நினைக்க—ஆராய ஆராய—முற்றுருத கடவுட்டன்மையுங் கண்டு கண்டு இவ்வியற்கையைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபட்டனர். பின்னரே புராண வரலாறுகள் முளைத்தன. இவ்வாறு முருகனைப் பற்றிப் பழந்தமிழர் கொண்ட கருத்து இந்நூலாசிரியரின் கருத்துக்கு விழுமியதாய்த் தோன்றியது. இக் கொள்கையைச் சுந்தரனார் தம் வேட்கைமேலீட்டால் வாய்ப்பு நேர்ந்தபொழுதெல்லாம் எழுதியும் பேசியும் வருவதை ஒரு பணியாகக்கொண்டார். அக் கொள்கையின் விளைவே இந்நூல்.

காரைக்குடியினின்றும் அந்நாளில் வெளிவந்த 'குமரன்' என்னும் திங்கள்மலரின் முதலிதழில் 'முருகன்' என ஒரு சிறு கட்டுரை சுந்தரனார் எழுதினார். அக் கட்டுரையின் விழுப்பம் நோக்கிய நண்பர்களின் தூண்டுதலால் 1925-ஆம் ஆண்டில் 'முருகன்' என்னும் பெயருடன் வெளிவந்தது. அந் நூலிற் சில பொருள்களே கூடின. 1927-இல் வெளியான இரண்டாம் பதிப்பிலே பல பொருள்கள் கூடின. 'முருகன் அல்லது அழகு' என்னும் பெயரும் அமைந்தது.

அழகை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பெற்ற இந்நூலில் முருகன் சொற்பொருள் விளக்கம், அழகின் இயல், இளமைப்பேறு, இயற்கையழகே முருகென்பது,

பாட்டும் ஓவியமும் இசையும் ஆகிய இவற்றின் வழியே இயற்கை அன்னையை வழிபடல், பெண்ணின் பெருமை, நோன்பின் திறம், முருகனடியார் இயல் முதலியன கூறப் பட்டுள்ளன.

இயற்கை என்னும் ஆருயிர் அன்னைக்கும் அவ் வியற்கையை விடுத்து என்றும் நீங்காத அழகு என்னும் அப்பனுக்கும் இந் நூலைக் கோயிலாக்கித், தம் அன்பின் மலர்ந்த தமிழ் மலர் தூவித் தம் வழிபாட்டை இவர் நிகழ்த்தியிருக்குந் திறன் வியத்தற்குரியது. மற்றும் இவர்தம் இயல்புக்கேற்ப இயற்கை முருகுக்கும் புராண முருகனுக்கும் ஒற்றுமை கண்டும் அழகிய முறையிலே விளங்கக் கூறியிருக்கின்றனர்.

இந் நூலை முற்றும் பயில்வோர் உள்ளத்தில் ‘இயற்கை வழிபாட்டில் ஆர்வம், ஒரே கடவுள், ஒரே நெறி என்னும் உறுதி, எவ்வுயிர்க்குந் தீங்கு நினையாப் பேரறம் முதலியன நிலவும்’ என்பது ஆசிரியரின் உள்ளக் கிடக்கையாகும். 1950-இல் எட்டாம் பதிப்பு வெளியாகியுள்ளது.

**சைவத்தின் சமரசம்**

தாயுமானவரும் இராமலிங்க அடிகளும் சைவத்திலே சமரசம் உண்மையை வெளியிட்ட பெரியார்கள். தாயுமானவர் ‘ஆகாரபுவனம்’ என்னும் பகுதியிற் பல சமயங்களைக் குறிப்பிட்டு ‘இப்பரிசாம் சமயமுமாய் அல்லவாகி’ எனச் சைவத்தைப் போற்றியுள்ளார். மற்றும் அவர்,

“வேறுபடுஞ் சமய மெலாம் புகுந்து பார்க்கின்,
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடும் கருத்தில்லை; முடிவில் மோன
வாரிதியின் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா”

என்று கூறுவது காண்க. இக் கருத்தை விழுமிதாகக் கொண்ட சுந்தரனார் 1924-ஆம் ஆண்டில் தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையின் நாற்பத்தொன்பதாம் ஆண்டு விழாவிலே தாம் நடத்திய தலைமையுரையை அன்பர்களின் வேண்டுகோளின்படி இந் நூல்வடிவாக்கினர்.

தமிழ்த் தென்றல்

சிவபிரான் தென்திசை நோக்கி அடுக்கவந்து வந்தாடுதல், 'ஆடலின் இளைப்பு விடுக்கவும் மென் சிறுகால் திருமுகத்திடைவீசி மடுக்கவும் தமிழ் திருச்செவி மாந்தவும் அன்றோ?' என அழகுற ஆன்றோர் கூறியதுபோலத் தமிழுந் தென்றலும் தமிழ்மக்களின் உள்ளத்திற்கும் உடலுக்கும் இன்பமும் உரமும் அளித்துவருதல் கண்கூடு. சுந்தரனார் தமிழ்நாட்டுக்களித்த தமிழ்த்தென்றல் அத்தகைய தென்பதில் ஐயமில்லை.

நம் நாட்டின் பண்டைவளம், கல்வி, அறம், அரசு, வழக்க வொழுக்கம் முதலியவற்றை மக்கட்கு நினைவூட்டி, இன்றியமையாத உரிமை வேட்கையை அவர்களிடை எழுப்பவேண்டும் என்பதும், அதற்கு அடிப்படை தாய்மொழி என்பதும், அது தமிழர் உள்ளத்திலே நிலைபெறல் வேண்டும் என்பதும் ஆகிய சுந்தரனார் வேட்கையாகிய பொதியமலையிலே தோன்றியது தமிழ்த் தென்றல். நாட்டின் உரிமையைக்குறிக்கோளாக உடைய இந்நூல் 1928-இல் வெளிவந்தது.

இது ஒருநூல் முறை பற்றியதன்று; அரசியல் மாநாட்டுத் தலைமையுரைகளையும் வேறுசில மாநாட்டுத் தலைமையுரைகளையும் தொகுத்து வைத்ததாகும். தமிழ் நாட்டின் பண்டைப்பெருமை, தாய்மொழிப்பற்று, பிறப்புரிமை, உரிமைவேட்கை, நாட்டுப்பற்று, சுயராச்சி

யப்பேறு, ஒற்றுமை, சகோதரநேயம், ஊக்கம், காந்தி யடிகள் அறம், பெண்ணுரிமை, தீண்டாமை விலக்கு முதலிய பொருள்கள் இந் நூலிலே அமைந்துள்ளன. வாழ்வுக்குரிய பல பொருள்கள் இந்நூலில் இருப்பதால் தமிழ்மக்கட்குப் பயன்தரக்கூடியதாகும் இது.

அறிஞர்களின் சொற்பொழிவுகள் செய்தித்தாள் களில் அந்நாளில் உருவந்திரிந்தே வரும்நிலையில் இருந் தன. அறிஞர்கள் தம் சொற்பொழிவை முன்னரே எழுதிவந்து படித்தால் அன்றி உண்மை வெளிவருதல் இல்லை. அக் குறையையும் தமிழ்த்தென்றல் நீக்கிச் சுந்தர ஞர் அந் நாட்களில் செய்த உண்மைச் சொற்பொழிவை இன்றும் நாம் மடுத்து மகிழத் துணைசெய்கிறது. இவ ருடைய சொற்பொழிவுகள் தமிழ்ச் சோலை என்ற நூல்வடி வாகவும் வந்துள்ளன.

தமிழ் நூல்களிற் பௌத்தம்

1928-இல் தென்னிந்திய பௌத்த சங்கச் சார்பாகச் சென்னை - சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளியிலே கூடிய தென்னிந்திய பௌத்தமாநாட்டிலே அறிஞர் இலட்சுமி நரசிம்மநாயுடு அவர்கள் தலைமையிலே சுந்தர ஞர்செய்த சொற்பொழிவின் உருவம் இந்நூல்.

இந் நூலிலே நூன்முறைப்பாடு - தொல்காப்பியம் - புத்தர்காலமும் நாட்டுநிலையும்-பத்துப்பாட்டு முதலியன- ஐம்பெருங் காப்பியங்கள் - திருமுறைகள் - கம்பராமாய ணம்-புராணங்கள்-பிற்பட்ட நூல்கள் என்னும் பிரிவுகள் உள்ளன. பௌத்தக்கொள்கை மேற்காட்டிய நூல் களிற் பொதிந்துள்ளது என்று காட்டியுள்ளார் சுந்தர ஞர். சமரச நோக்கமே காரணம்.

கடவுள்காட்சியும் தாயுமானூரும்

எங்கும் நிறைகின்ற பொருளாகிய கடவுளை எப் பொருளிலுங் கண்டு மகிழ்வது அறிஞர் விழைவு. தாயுமானூர் பாடிய 'ஐவகையெனும்' என்னுஞ் செய்யுள் சுந்தரனூர் விழைவுக்குரியது. இயற்கைவளஞ் செறிந்த இடங்களிலும் வெட்டவெளிகளிலும் இன்னோரன்ன பிற இடங்களிலும் அந்திவான் கூடும்போது இப் பாட்டைப் பாடி மகிழ்வார் சுந்தரனூர். எனவே, இந்நூலைக் 'கடவுள் காட்சியும் தாயுமானூரும்' என்ற பெயரிலே தமிழர்க்கு அளித்தனர்.

குமரன் ஆண்டுமலருக்கு 1928-இல் எழுதிய கட்டுரை பின்னர் நூல்வடிவாகச் சிலமாறுதல்களுடன் வெளிவந்ததே இந் நூலின் வரலாறாகும். இந்நூலின் திரண்டகருத்து மெய்ம்மையிலே கடவுள் காட்சி பெறலாம் என்பதாகும். சமரசம், சமய ஒழுக்கம், மறை, நல்லறிவு, உடல், உலகம் முதலிய அரண்களும் இக்கருத்துக்குக் காவலாக உள்ளன.

இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்

இராமலிங்க அடிகள் 'சாத்திரத்தின் சண்டையிலும் கோத்திரக்குப்பையிலும்' விழாமல் விலகிநின்ற பேரறிஞர். அவர் பாக்களை 'அருட்பா' எனக்கூறல் தவறு என்ற கருத்தினர் இன்னும் இருக்கின்றனர். அதற்குக் காரணம் சமரச சன்மார்க்கநெறியைத் தமிழ் நாட்டிலே பரப்ப முயன்றதேயாகும். அப் பெரியாரின் நோக்கம் அவருக்கு முன்னர் இருந்த தாயுமானூரிடத்திலுங் காணப்பெற்றது.

இராமலிங்க அடிகள் வடலூரில் ஏற்படுத்திய சமரச சன்மார்க்கக் கோயிலாகிய ஞானசபையில் தைப்

பூசந்தோறும் பல்லாயிரம் அன்பர்கூடி அடிகளின் நெறியை நினைவுக்குக் கொண்டுவருகின்றனர். அத்தகைய கூட்டத்திலே (26-1-1929-இல்) தலைமை தாங்கிய சுந்தரனாரிடம் பிறந்த தலைமையுரை 'நவசக்தி'யில் தவழ்ந்து அன்பர்களின் வேண்டுகோளாலே நூல்வடிவம்பெற்றது.

அடிகளின் உள்ளக்கிடக்கையை மலராக அமைத்துச் சுந்தரனார் தம் சொற்களை நாராகக்கொண்டு இம் மலர் மாலையைத் தமிழர்க் களித்தனர். இராமலிங்கர் சமரச சன்மார்க்கத்திலே நின்று, அருள்நெறி ஓம்பி, உயிர்களை வழிபடுவதே கடவுளை வழிபடுதலாகும் என்பதை உணர்ந்து சமய வாழ்வு நடத்திய விதத்தையும், அவர் ஆண்டவனை நோக்கிச்செய்த முறையீடும், அவர் கொண்ட குருவும், பொருளும், மரணமிலாப் பெருவாழ்வும், அதற்குரிய பூசை முறை முதலியனவும் இந் நூலிலே தெளிவாக வந்துள்ளன.

**சைவத் திறவு**

28, 29—12—1928-இல் தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் நாற்பத்தைந்தாம் ஆண்டுவிழா நடைபெற்றது. அப்போது தலைமையேற்ற சுந்தரனார் செய்த சொற்பொழிவே இந் நூல்.

மணிவாசகர் நிலை, திருவண்டப் பகுதி நுட்பம், நினைப்பற நினைத்தலின் விளக்கம், மூவகை உடலங்களின் பிரிவு, ஒரே கடவுளுண்மை, சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பது, இயற்கைக்கும் இறைமைக்கும் உள்ள தொடர்பு, சேய் சிவம் என்பது, சமரசம், இறைவனை உணரும் வழி, இறைவனுடைய சொரூப தடத்த இயல்புகள், காவியங்களின் இன்றி

யமையாமை முதலான பல பொருள்களும் இந் நூலில் வந்துள்ளன. இந் நூலைப் படிப்போர் உருவ வழிபாட்டைப்பற்றிய பலதிற ஐயப்பாடுகள் நீங்குவர்.

### தமிழ்நாடும் நம்மாழ்வாரும்

சுதேசமித்திரன் 1922-ஆம் ஆண்டு அநுபந்தத்தில் சுந்தரனார் எழுதிய 'தமிழ்நாடும் நம்மாழ்வாரும்' என்ற கட்டுரை 'சாதுரத்ந சத்குரு' நூல்நிலையத்தார் விரும்பியவாறு அந்த ஆண்டில் நூல்வடிவாக வெளி வந்தது. முதற் பதிப்பு அந்த நூல்நிலையத்தாராலேயே வெளிவந்தது. இரண்டாம் பதிப்பிற் சில புதுப் பொருள்கள் சேர்ந்து முறைப்படுத்தப்பட்டன. இரண்டாம் பதிப்பு முதலாகச் சுந்தரனாராலேயே வெளி வந்தது.

தமிழ்நாடு எது? நம்மாழ்வார் இந்நாட்டை எவ்வாறு வளர்த்தார்?—என்பவை சுருங்கச் சொல்லப்பட்டன. இறை—வித்து, இறைநிலை, அட்டமூர்த்த விளக்கம், இயற்கை இறை, இயற்கை உருவம், அவதார நுட்பம், மும்மூர்த்திகளின் நிலை, வழிபாடு, சமரசம், பாட்டியல் முதலியன விளக்கப்பட்டுள்ளன.

சுந்தரனாரின் சமரச நோக்கம் இந் நூலிலே நன்கு விளங்கும்.

### இமயமலை அல்லது தியானம்

இமயமலை உலகப் புகழ்பெற்ற பனிமால்வரை. புராணங்களிலும் நிலவியல் நூல்களிலும் அதனைப் புகழாதன இல்லை. அதன் முடியைக் காணப் பலர் முயன்று இப்பொழுதே வானவூர்தியின் துணையால் கைவந்தது. அம் மலையைப்பற்றிய சொற்பொழிவு ஒன்றைச் சைவசித்தாந்த மகாசமாசத்தின் 25-ஆம்

ஆண்டு விழா 1930-ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற போது சுந்தரனார் நிகழ்த்தினார். பின்னர் அது நண்பர்களின் விருப்பத்திற்கிணங்க நவசக்தியிலே பல கட்டுரைகளாக வெளிவந்தது. பின்னர் 'இமயமலை அல்லது தியானம்' என்னும் பெயரில் நூல்வடிவாக 1931-இல் வெளியாயிற்று.

இந் நூலிலே இமயத்தின் அகப்பொருளும் புறப்பொருளும், இமயத்தின் தொன்மையும் விழுப்பமும், மலைக்கும் மக்கள் வாழ்வுக்கும் உள்ள தொடர்பு, மலை வாழ்வின் தன்மை, உயர்நோக்கின் உயர்வு, அமைதியில் அறிவு விளக்கம், கோபுரங்களின் நோக்கமும் நுணுக்கமும், தமிழரின் மலைவாழ்வு, காவியங்களில் மானத மலைப் படைப்பு, மலைவாழ்வால் உடலும் உயிரும் நல னுறல், இமயத்தின் கூறுகள், அக் கூறுகளின் வெளிப் பொருள்—உட்பொருள், காற்றின் திறம், ஆகாய விமானிகளின் அநுபவம், கயிலாயத்தின் அகப் புற விளக்கம், கௌரி சங்கரத்தைப்பற்றிய பல சமயத்தார் கொள்கை, அக் கொள்கைகளின் ஒருமை, இமயத்தின் குறி தியானம் என்பது—இவைபோன்ற பல பொருள்களும் விளக்கம் பெற்றுள்ளன.

### சித்த மார்க்கம்

உள்ளொளிக்கென்று பண்டைமக்கள் கடைப்பிடித்தொழுகிய மார்க்கம் சித்த மார்க்கம் என்பதும், சித்த மார்க்கமே சமயம் என்பதும் நாளடைவிலே சமய நோக்குச் சிதைந்து பல தெய்வ வழிபாடுகளும் பல சமய உணர்வும் சமய வெறியும் சமயப் போரும் அடக்கு முறையும்போன்ற கேடுகள் உண்டாயின என்பதும் சுந்தரனார் கருத்து. எனவே, மக்கள் சித்தமார்க்கத்

திலே நின்று, உலக வாழ்வையும் கடவுள் வழிபாட்டை யும் உள்ளொளி எழுச்சிக்கெனப் பயன்படுத்தினால் ஒரு தெய்வ வழிபாடும் சமரச நோக்கும் நட்பும் உண்டாம் என்றும் இவர் நினைத்தார். அந் நினைவின் பயனாகச் சித்தமார்க்கம் ஒளிர்ந்தது.

சைவ சித்தாந்த மகா சமாசத்தின் 29-ஆம் ஆண்டு விழா 1934 டிசம்பரில் நடைபெற்றபோது தலைமையுரை யாக இப் பொருள் பேசப்பெற்றது. பிறகு 1935-இல் நூல் வடிவாயிற்று. இந் நூலிலே சித்தமார்க்க வர லாறு, அதன் தொன்மை, அதனால் விளையும் பயன், அதன் முற்காலத் தற்கால நிலை, ஒரு தெய்வ வழிபாடு முதலியன கூறப்பட்டுள்ளன.

### இந்தியாவும் விடுதலையும்

பழம் பெருநாடாகிய இந்தியா பல திறக் கலைகளை ஈன்றும் நாகரிகத்தின் எல்லைகண்டு இருந்தும் அடிமை நாடாகக் கிடந்தது; பலருடைய முயற்சியின் பயனாகப் பின்னர் விடுதலை பெற்றது. சுந்தரனார் அடிமைநாட்டின் விடுதலை குறித்துச்செய்த பணிகளிற் கலந்தார்; அர சியல் உலகிலும் தொழிலாளர் உலகிலும் பல்லாண்டுகள் உழைத்தார். உழைப்பின் பயன் இந்திய விடுதலை குறித்தவழி இன்னதென்பதை ஒருவாறு உணரும்படி செய்தது. அதை நாடறியச் செய்யவேண்டும் என எண்ணினார். அதன்பயனே 'இந்தியாவும் விடுதலையும்' என்னும் நூலாக வெளிவந்தது. முதற் பதிப்பு 1940-இல் வந்தது; இரண்டாம் பதிப்பு 1947-இல் வெளி வந்தது.

இந்தியாவின் நிலை மூவகையாக இந் நூலில் விளங் கும். முதல்நிலை அடிமைநிலை. இரண்டாம் நிலை சிறிது

உரிமைபெற்ற நிலை. மூன்றும் நிலை முற்றுரிமை எய்திய நிலை. நாட்டு வரலாற்றை அடிப்படையாகக் கொண்டெழுந்த ஒரு விடுதலை நூல் இது. விடுதலை காண வரலாற்றுணர்ச்சி இன்றியமையாதது. இந்தியாவின் வரலாறறியாதார்க்கு இந் நூல் வேண்டும். இந்தியாவைப்பற்றியே இந் நூல் கூறுகிறது. தமிழ்நாட்டைப் பற்றித் தனிநூல் எழுதவேண்டும் என்று எண்ணியிருந்ததாக இந் நூலின் முகவுரையிலே ஆசிரியர் கூறுகிறார்.

### நாயன்மார் வரலாறு

கதிரைவேற்பிள்ளையவர்களின் கருத்துப்படி சுந்தரனார் எழுதிய குறிப்புரையுடனும் வசனத்துடனும் வெளிவந்த பெரியபுராணப் பதிப்புத் தொண்டிலே, இரண்டாம் பதிப்பின்கண் உள்ள வசனத்தை மட்டும் கொண்டது நாயன்மார் வரலாறு என்னும் நூல். இது பெரியபுராணத்தைத் தழுவியே எழுதப்பெற்றது. இடையிடையே மூலத்திலுள்ள சொற்களும் சொற்றொடர்களும் சேர்க்கப்பட்டுள்ளன. மூலத்தைப் படிப்போர்க்கு இந் நூல் பொழிப்புரை போலப் பயன்தரும்.

### சீர்திருத்தம் அல்லது இளமைவிருந்து

இந் நூல் நூல்முறைபற்றி எழுதப்பட்டதன்று. 'வாலிப நாடார் மாநாட்'டின் தலைமையுரையும் 'யாழ்ப்பாண மாணுக்கர் மாநாட்'டின் தலைமையுரையும் அடங்கி ஒரு நூலாக முதற்பதிப்பாக 1930-இல் வெளிவந்தது. 1937-இல் வெளிவந்த இரண்டாம் பதிப்பில் திருச்சி - தஞ்சை மாவட்டத் தமிழர் மாணுக்கர் 'மாநாட்'டின் தலைமையுரை சேர்க்கப்பெற்றது. ஆக மூன்று தலைமை

யுரைகள் இந் நூலில் மிளிர்கின்றன. ஒரு மாநாட்டின் தலைமையுரையில் வந்த பொருள்களிற் சில மற்றொரு மாநாட்டின் தலைமையுரையிலே வேறு வடிவில் வந்துமிருக்கும்.

இக்காலை மாணவர் நிலையை எப்படி விளம்புவது? உடலை ஓம்பலோ, உள்ளத்தை ஓம்புவதோ, தம் வாழ்க்கையை வளம்படச் செய்ய என்ன செய்து தம்மைத் திட்டப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதோ மாணவர்களின் கருத்திலே சிறிதும் இடம்பெறவில்லை. நுனிப்புல் மேயும் படிப்பும் ஒழுங்கில்லாத பயிற்சியும் மாணவர்களை உருக்குலைக்கும் முறையில் உள்ளன நாட்டில் உலவும் பேசும்படங்கள் மாணவர்களைக் கெடுக்குந் தரம் செப்பற்கியலாதது. இந்நிலை நிற்கும் மாணவர்களைத் திண்மையான உடலுரமும் அறிவகமும் உடையவர்களாகக் காணவேண்டுமென்பது சுந்தரனாரின் பேரவா. அந்த ஆவலின் விளைவே இந்நூல்.

இந்நூற்கண் இளமை மாண்பு, அழகின் பெற்றி, இளமை யழகோம்பும் முறைகள், காவியச் சிறப்பு, ஓவியத்திறன், இசைநுட்பம், நாடகநலன், சமரசசன்மார்க்கம், கோயில் சீர்திருத்தம், தமிழ் மாண்பு, தமிழர் யார்? இவைபோன்றவை பல விளக்கப்பட்டுள்ளன. நாடு மொழி பிறப்பு முதலியவற்றால் வேற்றுமை பாராட்டல் தவறு—சாதி வேற்றுமை தீண்டாமை பெண்ணடிமை முதலிய சிறுமைகளை நீக்கவேண்டும்—கண்மூடி வழக்க வொழுக்கங்கள் வேண்டா என்பனவும் தெளிவுறுத்தப் பட்டுள்ளன இவை இளைஞருக்கு விருந்தாகும் என்பதில் ஐயமில்லை.

### பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை நலம்

சுந்தரனாரின் உள்ளத்திலே ஊறியூறிக் கிளர்ந்தெழுந்த கருத்தின் பயனே இந்நூல். இந்நூல் முதன் முதலாக 1927-இல் வெளிவந்தது.

இந்நூல் பெண்மை, தாய்மை, இறைமை என்னும் முப்பொருளை முதலாகவுடையது. இவை நூலின் உடல், உள்ளம், உயிராக அமைந்திருக்கின்றன. இம் மூன்று முதலினும் கிளம்பிய கவடுகளும் கோடுகளும் நூலின் பிறவுறுப்புக்கள்; பெண் பிறவியின் சிறந்த நோக்கம் அன்பால் ஒருவனை மணந்து ஒழுங்குற்ற இல்லறம் நடத்துவதில் நிறைவேறும் என்பது நூலின் திரண்டபொருள். இயற்கை வாழ்வினின்றும் வழுக்கிச் செயற்கைப் பாழில் விழுவதால் விளையுங் கேடுகள் இந் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அறம் அன்பு அருள் முதலியவற்றிற்குப் பெண் உறையுள் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஒருத்தி ஒருவனுடனும் ஒருவன் ஒருத்தியுடனும் வாழும் உயரிய ஒழுக்க மணம் இந் நூலில் யாண்டும் கமழ்ந்துகொண்டிருக்கும்.

இயற்கை வாழ்வு, செயற்கை வாழ்வு, உடலோம்பல், மலச் சிக்கல், கூடாவொழுக்கத்தால் விளையுங் கேடுகள் போன்றவை நூலின் இடையிடையே சிலவிடங்களில் அமைந்துள்ளன.

### உள்ளொளி

கீழைச் சேரி—தெய்வசிகாமணி முதலியாரின் மணி விழாவை முன்னிட்டுச் சென்னை—சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளியிலே 1941 பிப்ரவரியில் சுந்தரனார் நடத்திய மூன்று சொற்பொழிவுகளின் திரட்சியே

உள்ளொளியென்னும் இந் நூலாகும் 'உள்ளமும் உருவமும்', 'உள்ளுணர்வும் வழிபாடும்,' 'உள்ளொளி' என்னும் முப்பொருள்களையுடையது.

இந் நூலில் உள்ளப் பாகுபாடுகள், உருவ அருவ அருவுருவ இயல்புகள், உள்ள உருவத் தொடர்பு, இரண்டுங்கடந்தநிலை, உள்ள உருவத்தொடர்பால் விளங்கும் உள்ளுணர்வு, உள்ளுணர்வு உள்ளொளியாதற்குரிய வழிபாடு, கடவுளின் இருநிலை, இயற்கை நுட்பம், காதல் வீரம் அழகு அறிவு நீதி முதலிய தெய்வக் கூறுகள், அவைகளின் வழிபாட்டுத்திறங்கள், பெண்ணின் பெருமை, குழந்தை மேன்மை, நாகரிக வகைகள், இசை காவியம் ஓவியம் ஆகியவை வழிபாட்டுக்குத் துணைசெய்யும் முறைகள், தெய்வ உருவங்களின் தத்துவங்கள், உருவ வழிபாட்டின் சிறப்பு, வழிபாடு கடந்தநிலை, யோகவிதங்கள், தியானயோகம், முறையீடு, தொண்டு, சமரசசன்மார்க்கம், பொது அறம், அநுபூதி, உள்ளொளி விளக்கம் முதலியவை அடங்கியுள்ளன.

இது ஒரு பேச்சுநடை நூலாகவே உள்ளது. இதை ஒரு சமரசசன்மார்க்கப் பொருட்காட்சி எனலாம்.

**திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்**

அறிஞர்கள் தாமே தம் வாழ்க்கை வரலாற்றை எழுதிவைப்பது எல்லாவகையானும் நலம் பயப்பதாகும். அவர்களுடைய வாழ்க்கைக்குப் பிறகு பிறர் எழுதுவது சரியான குறிப்பாக அமையாது. சுந்தரனார் எழுதிய வாழ்க்கைக்குறிப்பு இன்றியமையாத ஒன்றாகும். இந் நூலிலே சுந்தரனார் காலத்தில் உள்ள பலதுறை அன்பர்களின் பண்புருவங்கள் ஓவியப்படுத்தப்பட்டுள்ளன. ஆகையால் இதனைப் பல துறை யறிஞர்களின் வாழ்க்

கைக் கருவூலமாகவும் கொள்ளலாம். 1944-இல் இந் நூல்வெளிவந்தது. இந்நூலின் முகவுரையிலே,

"எனது வாழ்க்கை வரலாற்றை எழுதல் வேண்டும் எண்ணம் அணித்தே என்பால் எழுந்தது. அவ்வெண்ணம் முன்னரே எழுந்திருந்தால் நிகழ்ச்சிக் குறிப்புக்களை அவ்வப்போது திரட்டிச் சேமித்து வைத்திருப்பேன். யான் அவைகளைத் திரட்டினேனில்லை.

"நாட் குறிப்பும் பிறவும் ஒழுங்குமுறையில் அமையாத ஒன்றை வரலாறு அல்லது சரிதம் என்று எப்படிக் கூறுவது? அதனால் இந் நூல் 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' என்னும் தலைப்பைத் தாங்கலாயிற்று.

"இந் நூற்கண் என் வாழ்க்கைக் குறிப்புக்கள் சிலவே வெளிவந்துள்ளன; மற்றவை என் கருவிலே கிடக்கின்றன. வாய்ப்பு நேருங்கால் அவையும் வெளிவரும்.

"என் பருவுடல் நலன் சிறிது குலைந்துள்ளது. ஆனால், நினைவுத்திறம் இன்னும் கொழுமையாகவே இருக்கிறது. குறிப்புக்கள் பெரிதும் என் நினைவிலிருந்தே வெளிவந்தவை. ஆண்டுக் குறிப்புக்கும் வேறு சிலவற்றிற்கும் யான் நடாத்திய 'தேசபக்த'னும், 'நவசக்தி'யும் ஆங்காங்கே எனக்களிக்கப்பெற்ற வாழ்த்துரைகளும் ஓரளவில் துணைநின்றன."

என்று கூறியிருப்பதை இந் நூலைப்பற்றிய குறிப்பாகக் கொள்ளவேண்டும். எல்லார்க்கும் பயன்படும் முறையில் எழுதப்பெற்றதால் இந் நூலிலே சில வழக்குச் சொற்களும் மரூஉமொழிகளும் திசைச்சொற்களும் கலந்துள்ளன.

### பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி

இந் நூல் 1949-இல் இயற்றப்பெற்றது. இந் நூல் இயற்றியகாலத்தில் சுந்தரனார்தம் வலப் புறக் கண்ணொளி மங்கியிருந்தது; இடக்கண்ணிலே சிறிதொளியிருந்தது. இந் நிலையிலும் தாம் கண்ட உண்மையை உலகுக்குணர்த்த எண்ணிய பேரன்பினால் இந் நூலைத் தாம் உரைத்துக்கொண்டேவரத் தம் தமையனார் பேர்த்தியாகிய சிவயோகவல்லி என்னுஞ் செல்வியை எழுதி முடிக்கச் செய்தார்.

இந் நூற்கண் மனித இயற்கை, அமைதி, அமைதி வீழ்ச்சி, அதற்குரிய காரணம், மீண்டும் அமைதி பெறல், சாம்ராச்சியம், சமதர்மம், பரம்பொருள் உண்மை, பரத்தின் தனித்தநிலை, கலந்தநிலை, ஒன்றுக்கும் அளவு உண்மை, பரவெளி, சூன்யம், விஞ்ஞானத்தின் எல்லை, சடாகாசம், சிதாகாசம், வழிபாட்டுத்திறங்கள், காவிய ஓவிய வழிபாடுகள், தியானம், சேர்க்கைச் சிறப்பு, சேர்க்கையின் அன்பு பெருகல், சேர்க்கை வழிபாடு, முறையீடு, வாழ்க்கை வழி, வாழ்க்கைப்பேறு, பரம் பொருள் வாழ்க்கை வழி, தடைகள், அறப்புரட்சியின் பெருமை, மறப்புரட்சியின் சிறுமை, அறியாமை நீங்கும் வழி, கிறிஸ்து பெருமான் போதனையும் சாதனையும், மார்க்ஸியமும் காந்தியமும், உலகம் ஒரு குலமாதல், அறவோர் புரட்சி, மரணமிலாப் பெருவாழ்வு, அமைதியுலகம், புத்துலகம், முன்னோர் உரைகள் முதலியன கூறப்பட்டுள்ளன.

### பிற நூல்கள்

இந் நூல்களேயன்றித் தமிழ்த்தென்றலில் வந்துள்ள முதல்தலைமை உரை சமரச தீபம் என்னும் நூலா

கத் தனியேயும் 1946-இல் வந்துள்ளது. 1930-இல் நடைபெற்ற சைவசித்தாந்த மகாசமாசத்தின் வெள்ளி விழாக் கூட்டத்தில் தலைமையேற்று நிகழ்த்திய விரிவுரை யான '**நினைப்பவர் மனம்**' என்பதும், 1943-இல் மதுரையில் நடந்த சைவசித்தாந்த மகா சமாசத்தின் முப்பத்தெட் டாம் ஆண்டுவிழாவிலே தலைமையேற்று நிகழ்த்திய விரி வுரையான '**ஆலமும் அமுதமும்**' என்பதும், 1944-இல் வெளியான '**சைவசமய சாரம்**' என்பதும் சிறுசிறு நூல்க ளாக வெளி வந்துள்ளன.

## ஆ. செய்யுள் நூல்கள்

செய்யுளுக்குப் பல பெயருண்டு. பாட்டு, பா, தூக்கு, தொடர்பு என்பவை யாவும் காரணப் பெயர்களே. செய்யுள் வெற்றுச் சொல்லடுக்கன்று. இயற்கை யழகிலோ பிறபொருள்களிலோ உள்ளம் இரண்டறக் கலக்கும்போது பொங்கிவரும் மகிழ்வே பாட்டாகும்.

பண்டை நாளிலே, அச்சுப்பொறி அமையாத கார ணத்தாற் பெரியோரெழுதிய நூல்கள்—பாடம் பண்ணி மனத்திலே பதிப்பதற்கு—நெஞ்சையே ஏடாகக்கொள் வதற்கு—எதுகை மோனை முதலிய ஓசைநயஞ்செறிந்த சொற்றொடர்களாக அமைந்தன. இக் காரணம் ஒன்ருலேயே செய்யுள் நூல்களே பண்டைநாளில் அமைந்தன எனலாம்.

பின்னர், அச்சுப்பொறியின் ஆதரவு கிட்டிய காலத் தில் எல்லோரும் உரைநடையையே விழைந்தனர். செய் யுள் நடை அருகியது; வெறுக்கவும்பட்டது. அதனற் செய்யுளியற்றும் ஆற்றலும் குறைவுற்றது. எனினும் ஆங்காங்கே பாவலர் பலர் பாவை வளர்த்துவந்தனர்.

இக்காலத்தே மக்களுக்கேற்ற முறையிலே நடையமைத்துக் கவிபாடும் கவிஞர் பலர் தோன்றியுள்ளனர்.

பண்டைப்புலவர் பெருமக்களின் பாக்களைப் படித்துப் படித்து மகிழும் சுந்தரனுர்க்குத் தாமே பாவியற்ற வேண்டும் என்னும் ஆவல் எழுந்ததில்லை. பிறர் நூல்களுக்குச் சாற்றுக்கவியாகவும் கெழுதகை நண்பர் சிலர் ஊனுடலிலிருந்து மறைந்தஞான்றும் பாடல் எழுதும் நெருக்கடி வரும். அப்போதே பாடல் எழுதுவார். மற்றுச் சிலசமயம் மன அமைதி குலைந்தபோது பாட்டெழுத அமர்வார். அரசியல் உலகிலும் தொழிலாளர் தொல்லையுலகிலும் புகுந்து பலவகை இடையூறுகளுக்கிடையே தொண்டியற்றிய பெரியார்க்கு மனக்குழப்பம் நேர்வதியற்கையே. அத்தகைய குழப்பத்திலிருந்து அமைதிபெற இயற்கைச் சூழலை நாடுவார்; அமர்வார்; இயற்கையை நோக்குவார். ஊன்றியூன்றி நோக்கி நோக்கி இயற்கைக் காவியங்களைப் படிப்பார். அமைதி பெறுவார். அப்போது பாட்டு எழும். இத்தகைய வாய்ப்பு எப்போதோ ஒவ்வொருபோதில் நிகழும். அவ்வாறு பாடிய பாடல்களின் தொகுப்பு '**உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல்**' எனும் வடிவம் பெற்றது. அந்நூலிலே உரிமையில் வேட்கை, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, உலக சகோதரநேயம், பிறப்பில் உயர்வு தாழ்வு கருதாமை, ஒப்புரவு, பயன்கருதாப்பணி, இயற்கையில் வேட்கை, சமரசசன்மார்க்க நாட்டம் முதலிய பொருள்கள் அமைந்துள்ளன. இந் நூல் 1931-ஆம் ஆண்டிலே வெளிவந்தது.

இவர் உள்ளம் சமரச நோக்கிலேயே சென்றது என்பதற்கு 1938-இல் வெளிவந்த '**திருமால் அருள்வேட்டல்**'

என்னும் பாமாலை நூல் சான்ருகும். எங்கும் வேற்றுமை மலிந்து போர்க்களமாகிவிட்ட நிலையை எண்ணி வருந்திப் பாடிய பாக்கள் 1942-இல் போர்முழக்கினிடையே 'பொதுமை வேட்டல்' என்னும் நூலாக வெளிவந்தது. அதன் உள்ளுறைகள் தெய்வநிச்சயம், தெய்வமுழக்கம், தனிமைத் தெய்வம், இயற்கைத் தெய்வம், இயற்கை நெறி, இயற்கை வாழ்வு, பெண்மை, மனிதப்பிறவி முதலிய பல திறத்தன. இவருக்கும் கிறித்து பெருமான் பொன்மொழிகளுக்கும் மாணவநிலையிலிருந்தே பெருகிய தொடர்பின் பயன் 'கிறிஸ்துவின் அருள்வேட்டல்' என்னும் பாமாலையாகி 1945-இல் வெளிவந்தது. தொழிலாளருலகிலே பழகிப்பழகித் தொழிலாளர்க்குரிய பணியிலிறங்கிக் கார்ல்மார்க்ஸ் கண்ட புத்துலகிலே நுழைந்து பயின்றதன் பயனுகப் 'புதுமை வேட்டல்' யாப்பின் வடிவிலே 1945-இல் வெளியிடப்பெற்றது. சிவபெருமானைப் பாட எழுந்த உள்ளக்கிளர்ச்சிப் பாடல் தத்துவப் பொருளிலே 'சிவனருள் வேட்டல்' என்னும் பெயர்பெற்று 1947-இல் வெளிவந்தது. 9-6-1947 முதல் 10-7-1947 வரையில் (சென்னையில் பஞ்சாலைத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தின்போது) வீட்டைவிட்டு வெளியே வரலாகாது எனச் சுந்தரனுரை அரசாங்கம் காவல் செய்தபோது கிறிஸ்துபெருமான் மலைமொழியையும் மற்றை மணிமொழிகளில் சிலவற்றையும் தழுவிக் குறள் வெண்பா யாத்தார்; 'கிறிஸ்து மொழிக் குறள்' என்னும் பெயர் தந்தார். ஆனுல் அச்சேறி வெளிவராமற் கிடந்தது. 30-1-1948-இல் காந்தியடிகளின் ஊனுடல் மத வெறியால் சுட்டு வீழ்த்தப்பெற்றபோது உணர்ச்சி வயப்பட்டு விரைவில் வெளியாயிற்று. கிறிஸ்துவின் மலைமொழியும் காந்தியமும் ஒருமையுற்றிருந்ததென்னும்

சுந்தரனார் உணர்வே அந் நாளில் வெளியிடுந் தொடர்பைப் பெற்றது. இந் நூல் வெளிவருங்காலத்தில் இவர் உடல்நலன் குறைந்திருந்தார்.

'பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி' என்னும் நூற்குறிப்பிலே சுந்தரனார்க்குக் கண்பார்வை குறைந்ததைக் குறிப்பிட்டிருக்கிறேன். அது 1949-ஆம் ஆண்டு. 1950-இல் இருகண்களும் முற்றும் ஒளி குறைந்தன. புற ஒளி மறைந்தாலும் அகவொளி குன்றவில்லை. புறவொளி குன்றியதற்கு மனம் நைந்து நைந்து இறைவனை வேண்டினார். கண்பார்வை குறைந்து படுத்திருக்கும் போது பொழுதுபோக்குக்கு நற்றுணைசெய்யும் என எண்ணிக் குறள்வெண்பா யாத்தலிலே கருத்தைச் செலுத்தினார். .சாது அச்சகப் பொறுப்பாளர் திரு. மு. நாராயணசாமி அவற்றை எழுதுவார். இம்முறையிலே 'இருளில் ஒளி' எழுந்தது.

அந் நூலின் முகவுரையிலே சுந்தரனார் கூறுகிறார் :

"சன்மார்க்க வழிபாட்டுத் துறைகள் பல; பல திறம், அவற்றுள் ஒன்று தொண்டு. தொண்டில் எனது வாழ்க்கை ஈடுபட்டது; படிந்தது; ஒன்றியது. சமயத் தொண்டு, நாட்டுத் தொண்டு, மொழித் தொண்டு, சீர்திருத்தத் தொண்டு, அரசியல் தொண்டு, தொழிலாளர் தொண்டு, பத்திரிகைத் தொண்டு முதலியன என்னைச் சூழ்ந்தன. அச் சூழல் எனது நூல்தொண்டை இரவில் ஆற்றுமாறு என்னை உந்தியது; நெருக்கியது. எனக்கு இரவு, பகலாயிற்று; இயற்கையே மாறியது.

"நாளடைவில் உறக்கம் என்னை அணுகாதொழிந்தது. படுக்கையில் கிடந்து கிடந்து பார்ப்பேன். என்னை

மறந்தும் உறங்குவது அற்றுப் போயிற்று. 'அறிதுயில்' மட்டும் ஒவ்வொருபோது வரும்; போகும்.

"உறங்காமை, தொடக்கத்தில் எனக்குத் தொல்லை விளைத்ததில்லை; பின்னே விளைத்தது. உறங்காமை படிப்படியே எனது உடல் வளத்தைக் குறைத்தது; அதனால் உள்ளுறுப்புக்கள் மெலிவுற்றன, அக் குலைவும் இம் மெலிவும் சீறிப் படையெடுத்து என் கண்களைத் தாக்கின. படலம் முதல்முதல் வலக்கண்ணை மறைத்தது; பின்னே இடக்கண்ணையும் மறைத்தது.......

"செல்வக் குடியிற் பிறவாத 'செல்வம்' பெற்ற என் வாழ்க்கை, பலதிறத் தொண்டுகளால் நெருக்குண்டது. நெருக்கு இயற்கை வரம்பையும் மீறச்செய்தது."

சுந்தரனாரின் அநுபவம் நிறைந்த இப் பொருளுரை உடலோம்பலின் இன்றியமையாமையை வற்புறுத்துகிறது. இங்ஙனம் கண்பார்வை மங்கிச் சிகிச்சையாலும் பயனின்றிப் படுக்கையிற் கிடந்த காலத்தே 'இருமையும் ஒருமையும்' என்னும் செய்யுள்நூல் 7-11-1950 இலும் 'அருகன் அருகே' அல்லது 'விடுதலை வழி' என்னும் யாப்பு நூல் 5-1-1951-இலும் 'பொருளும் அருளும்' அல்லது 'மார்க்ஸியமும் காந்தியமும்' என்னும் செய்யுள் நூல் 15-8-1951-இலும், 'சித்தந் திருந்தல்' அல்லது 'செத்துப் பிறத்தல்' என்னும் பாட்டுநூல் 25-9-1951 இலும், 'முதுமை உளறல்' என்னும் பாநூல் 20-10-1951 இலும் வெளிவந்தன.

இங்ஙனம் கண்ணொளி குன்றிப் படுக்கையிலே கிடந்த காலத்தும் சுந்தரனாருடைய தமிழ்ப்பணி நடைபெற்றது.

# கூ. சிறப்பியல்புகள்

மக்களில் ஒருவரைத் தனியே பிரித்துக்காட்டுவன அவருடைய சிறப்பியல்புகளே. சுந்தரனாரிடம் பல சிறப்பியல்புகள் இருந்தன; அவற்றால் இவர் பெருஞ்செல்வர்களும் அடையமுடியாத உயர்நிலையை அடைந்தார்; சிறந்த கல்விமான்களும் அடையமுடியாத உயர்நிலையை அடைந்தார். அச் சிறப்பியல்புகளிற் சிலவேனும் நாம் பெற முயலவேண்டும்.

சுந்தரனாரிடம் இருந்த நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் தந்நலமற்றவை. நாட்டுப்பற்றாலேயே வெஸ்லியன் கல்லூரித் தமிழாசிரியர் பணியைவிட்டுக் காங்கிரசிலே நுழைந்தார். தம்முடைய சிறந்த சொல்வன்மையால் மட்டுமன்றித் தேசபக்தன், நவசக்தி என்னும் இதழ்களின் வாயிலாக எழுத்துவன்மையாலும் மக்களுக்கு நாட்டுப்பற்றை யூட்டினார். இவர் ஆசிரியர் பணியினின்றும் விலகல்கூடாது என்று நண்பர்கள் தடுத்தனர்; பெரியோர்கள் கட்டளையிட்டனர். அவர்கள் மொழியையெல்லாம் இவருள்ளத்தே முறுகியெழுந்த நாட்டுப்பற்று மீறச்செய்தது. தமிழாசிரியராக இருந்திருந்தால் நன்முறையிலே ஆயிரக்கணக்கான மாணவர்களைமட்டும் தமிழார்வமுடையவர்களாகச் செய்திருக்க முடியும். பாடநூல்கள் வாயிலாகச் செல்வம் ஈட்டியிருக்கவும் கூடும். தம்முடைய நலத்தைமட்டுங் கருதுவோர் அவ்வாறே செய்திருப்பர். நாட்டின் நிலையை நோக்கி நோக்கி நெகிழும் மனத்தினர்-நாடுவாழப் பணிபுரியவேண்டும் என்னும் உள்ளத்தினர் - தந்நலத்தை

நாடுவரோ? இந்தியா விடுதலையடைய வேண்டுமென்றுழைத்த தலைவர்களில் நம் சுந்தரனார் தலைசிறந்தவர் எனலாம்.

இவர் அரசியலில் நுழைந்த நெருக்கடியான - இடையூறு மிகுந்த-நிலையைப்பற்றி உயர்திரு. சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார், "காந்தியவர்கள் இந்திய அரசியலில் தியாகமும் துணிச்சலும் புகுத்திய காலத்தில், தென்னாட்டில் எதிர்ப்பை விட்டுவிட்டுப் பொறுப்பை எடுத்துக்கொண்ட நான்கைந்து தலைவர்களில் ஒருவர் ஸ்ரீமான் திரு. வி. க. அவர்கள். பகைமையும் ஆகுலமும்போய், அமைதியும் நோன்பும் சாதனங்களான அதிசயத்தைக் கண்ட நாட்கள் - ஆங்கிலப் பிரசங்கங்கள் போய்த் தமிழன்றி வேறுதெரியாத பாமரர்களிடையே வேலை துவக்கிய புரட்சி நாட்கள் - தொழிலாளர்களைத் திரட்டிச் சங்கம் நிறுவும் அபாயநெறி முதல்முதலில் தோன்றிய நாட்கள் - அப்போது சுகமான பள்ளித் தொழிலைவிட்டு அரசியல் அலைகடலிற் புகுந்தவர் ஸ்ரீ. திரு. வி. க. அக்காலத்தில் வேலைசெய்த அரசியல் தொண்டர்களுக்குத்தான் தெரியும், திரு. வி. க. உள்பட எங்கள் சிலருக்குள் வளர்ந்த அன்பும் கட்டுப்பாடும் கூட்டுறவும்," என்று கூறுவதால் உணரலாம்.

அக்காலத்தில் காங்கிரஸ் நாட்டுக் குழைத்தாலும் தொழிலாளரே நாட்டின் உயிர்நாடி என்பதையுணர்ந்து அவர்கள் முன்னேற்றம் நாட்டின்முன்னேற்றமென உழைத்து, அவர்களிடையே பொருளாதாரத்தை வளர்க்க வேண்டுமென உழைத்த பெருமை சுந்தரனார்க்கேயாகும். தொழிலாளர்கட்காக இவர் மேற்கொண்ட துன்பம் பலவற்றையும் முன்னர் அறிந்தோம்.

காங்கிரசின் ஆட்சியிலே தொழிலாளர் திகைப்புற்ற போது, தொழிலாளர் சார்பிலே நின்று, தாம் உழைத்த காங்கிரசின் ஆட்சியை எதிர்த்தவர் இவர் என்பதையும் அறிவோம். அதன்பயன் 9-6.1947-முதல் 10-7-1947 வரையில் வீட்டைவிட்டு வெளியே வரலாகாதென அரசாங்கம் சிறைப்படுத்தியது.

மற்றும் காங்கிரசிற் செய்த இவருடைய சேவைக்குப் பரிசாகப் பொருளும் பதவியும் பெற்றிருக்கலாம். தந்நலம் விழையா இவர் அவற்றை விரும்பவில்லை.

அவர் வாழ்க்கைக் குறிப்பிலே பின்வருமாறு உள்ள பகுதி நம் கருத்துக்குரியது :

சுந்தரனார் எழுதுகிறார் :

"1924, 25, 26-ஆம் ஆண்டுகளில் காங்கிரஸ் தேர்தலில் யான் ஈடுபட்டேனல்லவோ? நகரசபை, மற்ற ஸ்தலஸ்தாபனங்கள், சட்டசபை முதலியவற்றைப் பற்றக் காங்கிரஸ் முனைந்தது. அந்நாட்களில் ஸ்ரீநிவாச ஐயங்காரும் யானும் சேர்ந்து தொண்டாற்றிவந்தோம். ஐயங்கார் நகரசபையிலும் சட்டசபையிலும் என்னை நுழைக்க விரும்பிக் கேட்டார். அதற்கு யான், 'சுத்த சுயராஜ்யம் மலரும்வரை என்போன்றோர் நகரசபை, சட்டசபை முதலியவற்றின்மீது நாட்டஞ் செலுத்தல் கூடாது. அரைகுறை சுயராஜ்யம் ஆபத்தானது. அதில் தொண்டாற்றுவதற்கு இடமிராது. சுத்த சுயராஜ்யத்திலே தொண்டாற்றுதல்கூடும். முற்றும் ஒதுங்கிநின்று வாளா கிடக்கவும் மனம் விரும்புவதில்லை. உங்கள் போன்றாருடன் கூடிச் சிறுதொண்டாற்றி வருதல்போதுமென்பது எனது கருத்து என்று சொல்வேன். ஸ்ரீநிவாச ஐயங்கார் யான் வறுமையை உளங்கொண்டு மறுப்

புரை பகர்வதாக எண்ணி, ஒருநாள், 'நீங்கள் இலௌகிகத்திற் சிறிது மேம்பட முயலுதல் வேண்டும். குறைந்த பட்சம் உங்களுக்கு ஒரு வீடு தேவை; ஒரு மோட்டார் வண்டி தேவை; வேறு சில தேவை. இவைகளை நீங்கள் நினைந்தால் எளிதில் பெறுதல் கூடும்,' என்று இறக்கப் பேசினர். 'என்ன? ஐயங்கார் இன்னொரு பூதத்தைக் கொண்டு வந்து விடுத்தாரே' என்று கருதி, 'உங்களைப்போல நகரத்துச் செட்டிமார் சிலர் விரும்பினர். யான் அவ்விருப்பத்துக்குத் துணைபோனேனில்லை...........என் தமையனர் குடும்பத்தை ஒருவாறு நடத்துகிறர். எனக்கும் சோறு கூறை வழங்குகிறர். யான் இயன்றபணிசெய்து வருகிறேன்..............இப்போது உங்கள் மாடியில் அமர்ந்திருக்கிறேன்; இன்னுஞ் சிறிது நேரத்தில் ஒரு குடிசைக்குள் புகப்போகிறேன். ...........செருப்பின்றிக் குடையின்றி நண்பகலில் வெயிலிலே தார் பாதையில் நடந்தபோது எத்தனையோ முறை உங்கள் கார் என்னை ஏற்றிக்கொண்டது.............. இயற்கை இறையின் நோக்கு வழியே நிற்க யான் ஒல்லும் வகை முயன்று வருகிறேன்,' என்று விடையிறுத்தேன்."

இது இவருடைய நாட்டுப்பற்றின் மேன்மையையும் அதன் வாயிலாக நாட்டுப்பணியை வீட்டுப்பணியாக ஆக்கவிழையாத சிறப்பையும் காட்டுகின்றது. மற்றும் இவர் தாம் நோயுற்றிருந்த காலத்தில் ஒரு நண்பர் 250 ரூபாய் அனுப்பி மருந்துக்கும் உணவுக்கும் பயன்படுத்திக்கொள்ளுமாறு குறித்தார். இவர், 'இன்னும் அத்தகைய நிலை எனக்கு வரவில்லை' என்று திருப்பி விட்டார். இத்தகைய மனம் யாருக்கு வரும்?

இங்கு நம் முன்னோர் ஒருவர் கூறிய, 'கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதனைக்கொள்ளேனென்றல் அதனினும் உயர்ந்தன்று' என்னும் பொன்மொழி நினைவுக்கு வருகிறது.

இவ்வாறு காங்கிரசிலே உழைத்து வந்தவர் அது தவறான வழியிலே செல்கிறதென்றறிந்தவுடன் விலகிய தூயமனப்பண்பை முன்னர் அறிந்தோம்.

மற்றும் இவருடைய மொழிப்பற்றுச் சிறப்பைப் பல்லாற்ருனும் அறிந்தோம். தமிழில் அரசியலைப் பேச முடியாதென அறிஞர்கள் கூறிவந்த காலத்திலே பேச முடியும் என்பதை நிலைநாட்டிய பெருமை இவருக்கே உண்டு. தமிழ்மொழியிலேயே முழுகித் திளைத்துத் தாம் வேறு தமிழ் வேறல்லாத ஒருமையை அடைந்த சுந்தரனாரின் மொழிப்பற்றை விளக்கச் சொல்லுண்டோ?

பொருளாதார விடுதலையில்லாத நாட்டின் விடுதலையாலே பயனில்லையென்பது இவர் கருத்து. அதற்காகவே, தொழிலாளர்க்குழைத்தார்; பொருளாதாரத்தைப் பேசினர்

சுந்தரனாருடைய சொற்பொழிவிலே திளைத்த திரு. பி. ஸ்ரீ. அவர்கள் கூறுகிறார் :

"அன்று நான் கேட்டதைச் சொற்பொழிவு என்றால் போதாது; பொருட்பொழிவு—சொற்கள் மறைந்த பொருட்பொழிவு—என்றாலும் போதாது. அந்தச் சொற்பொழிவைத் தமிழ்ப்பொழிவு—தமிழ்க்காதலின் பொழிவு—என்றே கருதினேன்; பருகினேன் என்றே சொல்லவேண்டும். பொருளிலே சொற்கள் மறைந்தன. தமிழிலே—தமிழ்க்காதலிலே—மறைந்துவிட்டார்

தமிழ்க்காதலர். எனவே, அன்று நான் கண்ணினுல் தமிழ்க்காதலைக் கண்டேன் கலியாணசுந்தர வடிவத்திலே. 'தமிழனுய்ப் பிறந்த பயனை இன்று பெற்ருேம்,' என்று இறுமாந்திருந்தேன்.

"என் தமிழ்த்தாகத்தை வெளியிடும் ஆற்றல் கிடையாது. அந்தத் தாகம் எவ்வளவு அதிகமாயிருந்ததென்பது திரு. வி. க. அவர்களின் ஜீவகங்கையான சொற்பொழிவுகளைக் கேட்டபின்புதான் எனக்குத் தெரிந்தது."

மகாத்மா காந்தியின் ஆங்கிலப் பிரசங்கங்களிற் காணும் அற்புதம்போல மொழிக்கும் கருத்துக்கும் உள்ள உறவு இவர் தமிழ்ச்சொற்பொழிவிலே கண்டதாகக் கூறுகிருர் சுதேசமித்திரன் ஆசிரியர் சி. ஆர். சீநிவாசன் அவர்கள். மற்றும் அவர், "நாமார்க்கும் குடியல்லோம், நமனையஞ்சோம், நரகத்தில் இடர்ப்படோம்,' என்ற பழைய பாசுரத்தைப் புதிய பிரமாணத்திற்கு அவர் எழுப்பியபோது கேட்போர் மனத்தில் எழுந்த அதிர்ச்சியை யார் மதிப்பிட முடியும்?" என்கின்றனர்.

இவர் செய்த நாட்டுத்தொண்டிலே பெரும்பயன் கொண்டது பெண்ணுலகம் எனலாம். பெண்களின் பொருட்டு இராயப்பேட்டையிலே 'மாதர் சங்கம்' கண்டார்; தேசபக்தனிலும் நவசக்தியிலும் அடிக்கடி கட்டுரைகள் எழுதினுர். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெண்கள் பொருட்டுக் கூட்டிய மாயவரம் இசைவேளாளர் மாநாடு சிறப்புற ஆதரவுற்றுழைத்தார். 'யுவதி சரணுலயம்' என 'யாமுன பூரண திலகம்மாள்' நடத்திய நிலையம் ஆக்கமுற அறிக்கைகள் பல நவசக்தி வாயிலாக விடுத்தார். விதவை மணம், கலப்பு மணங்

களை ஆதரித்தார். அருண்டேல்—ருக்மணி மணத்தை ஆதரித்துப் பேசினர்; எழுதினர். டாக்டர் முத்து லட்சுமி அம்மையார் சட்டசபையிலே கொண்டுவந்த ‘வழுக்கிய’ சகோதரிகளின் சார்பான மசோதாவையும், சாரதா மசோதாவையும் பிற செய்தித்தாள்கள் வெறுக்கும்போதும் அஞ்சாமல் ஆதரித்துப் பேசியும் எழுதியும் நின்றார். ‘பெண்மணிக்கு இழிவு நேருமாயின் அதைப் போக்க ஆண்மகன் விரைதல் வேண்டும்’ என்பார். இவருடைய பேச்சும் எழுத்தும் பெண்ணுலகிலே அமைதியான புரட்சியை உண்டாக்கியது.

சுந்தரனார் வாழ்விலே சீர்திருத்தநோக்கம் மிளிர்வதைக் காண்கிறோம். பொதுவாக உலகிலே சீர்திருத்தம் பேசுவோர் பலருளர்; எண்ணிலடங்காதவருளர். எனினும்,

‘சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல்.’

என்னும் பொய்யாமொழிக்குச் சான்றாகவே நிற்கின்றனர். அதற்குக் காரணம் அவர்கள் முதலில் தம்மைச் சீர்திருத்திக் கொள்ளாமையேயாம். பிறர் வாழ்விலே ஒன்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறுகிறவன் தான் அதைக் கடைப்பிடித்தவனாக இருக்கவேண்டும். சுந்தரனார் தாம் தம்மைச் சீர்திருத்திக்கொண்ட பிறகே, மற்றவர்களுக்கு அதனைக்கூற முன்வந்தார். மற்றும், தாம் கூறும் சீர்திருத்தம் சரியானதா என்று அறிந்த பிறகே கடைப்பிடிக்கவோ கூறவோ முன்வந்தார்.

நாட்டிலே சாதிவேற்றுமை பிறப்பால் அமைந்திருப்பது தவறு எனக் கண்டார். அதனை ஒழிக்க முயன்றார்; முஸ்லிம்களுடனும் ஆதிதிராவிடருடனும்

அவர்கள் வீட்டிலும் உணவுகொண்டார்; தீண்டாமை கூடாது என்று பறை சாற்றினார். பல சமயங்களையும் நன்றாகப் படித்தார்; சைவசமய நெறியிலே நின்றார். பல சமயங்களிலும் உள்ள ஒற்றுமையை அறிந்து கடைப்பிடித்தார். பிறருக்கும் கூறினார்; சமயச் சண்டையை அறவே வெறுத்தார். திருமால் அருள் வேட்டல், அருகன் அருகே, கிறிஸ்துவின் அருள்வேட்டல், கிறிஸ்துமொழிக் குறள், பொதுமை வேட்டல் என்பவைகளும்; சமரச தீபம், சமரச சன்மார்க்கம் என்னும் நூல்களும் பல சமய ஒற்றுமைகளையும் அறிந்த அறிவின் ஒளியாயமைந்தவை. பிற நூல்களிலும் சொற்பொழிவுகளிலும் சமரசமே திகழ்வதைக் காண்கின்றோம். சைவசமயத்தைக் கடைப்பிடிப்போரிடையே நிகழ்ந்த சாதிவேற்றுமைகளை எவ்வாறு கண்டித்தார் என்பதை அவர் வாழ்க்கைக்குறிப்பிலே காணலாம். சாதிக் கலப்புமணம், விதவைமணம் போன்றவை அவர் விரும்பியவை. பல மணங்களைச் செய்து வைத்திருக்கிறார். பலதார மணம் இவருக்குப் பிடிக்காது.

உடையிலும் சீர்திருத்தங் கண்டார். தலையில் சரிகைக் கோடிட்ட வெள்ளித் தலைப்பாகையும் நீண்ட சட்டையும் ஆறுமுழ ஆடை கீழ்ப்பாச்சியும் கழுத்திற் பீதாம்பரமோ பட்டுக்குட்டையோ சரிகைத்துணியோ அணிவதும் ஆகிய இவர் கோலம் கதரியக்கத்தினால் (1920 முதல்) நான்குமுழக் கதராடையும் சிறுசட்டையுமாகச் சீர்திருந்தியது.

வாழ்க்கைச் சீர்திருத்தம் சமூகச் சீர்திருத்தமாகி நாட்டுச் சீர்திருத்தமாகவேண்டும் என்பது இவருடைய

கருத்து. இவர் கடைப்பிடியாத சீர்திருத்தமே இல்லை எனலாம்.

சுந்தரனாரிடம் உள்ள தனிப்பண்புகளிற் சிறந்தது பெரியோரிடம் இவருக்குள்ள அன்புடைமையாகும்.

பாம்பன் குமரகுருதாசர் இவருடைய இளமையிலே வழிபாட்டுக் குரியவராகக்கொள்ளப்பெற்ற பெரியார். மறைமலையடிகளும் பாம்பன் அடிகளிடம் வழிபாட்டன்புடையவர். பாம்பன் அடிகளின் அடியார்கள் பலருள் இவர்களும் ஒன்றுபட்டவர்கள்.

ஒருமுறை மறைமலையடிகளும் சுந்தரனாரும் இராயப்பேட்டைக் குகானந்த நிலையத்திலே துயில்கொள்ளுவதற்குமுன் பல பேசினர். 'முருகனும் வேடர் மன்னனாக இருக்கலாமோ?' என்று சுந்தரனார் அடிகளை வினவ அவரும், 'நானும் அப்படி நினைக்கிறேன்' என்றார். இது பாம்பன் அடிகளிடம், 'முருகக்கடவுள் ஒரு வேட அரசர்' என்று சுந்தரனார் ஆராய்ந்து முடிபுகண்டதாகக் கூறப்பட்டது. முருகப்பெருமானிடம் பேரன்புடைய பாம்பன் அடிகள் இம் மொழிகேட்டு வருந்தினார்; சுந்தரனாரை நாத்திகர் என்று பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் ஆண்டு விழாவில் கூறினார். சுந்தரனார் மனம் புண்பட்டது. சுந்தரனாரும் மறைமலையடிகளும் பேசிய முருகன், புராண முருகன்; கடவுள் முருகன் அல்லன். தம்மை நாத்திகன் என்று பாம்பன் அடிகள் கூறிய அன்றிரவெல்லாம் இவர் துயிலவில்லை. மறுநாள் அடிகள் எழுதிவரும் நூலின் சோதனை அச்சுத்தாள் திருத்தம்பெறச் சுந்தரனாரிடம் வந்தது. சுந்தரனார் அதனைத் திருத்தாமல் அதனுடன் ஒரு சீட்டில், "அடிகளே! நான் முருகக்கடவுள்பால் பற்றுள்ளவனா,

அற்றவனு என்று நீங்கள் நாடோறும் வழிபடும் முருகக் கடவுளையே கேளுங்கள். முருகன் உங்களுக்கு என் மனக்கோளினை உணர்த்தியபின்னரே யான் இத் தாளைத் திருத்துவேன்," என்றெழுதி அனுப்பினார். அன்று மாலை சுமார் நான்கு மணிக்குப் பாம்பன் அடிகள் சுந்தரனார் வீட்டிற்கு வந்து, "நீ எழுதிய கடிதம் என் மனத்தைக் கலக்கிவிட்டது, தியானம் செய்வதற்கும் இயலவில்லை! உன் நண்பர்களே அவ்விதம் கூறினர்; வருந்தாதே," என்று ஆறுதல் கூறிச் சென்றார்.

இராயப்பேட்டையில் செங்கல்வராய நாயகர் தோட்டத்திலே சிவப்பிரகாச சுவாமிகள் என்ற பெரியார் ஒருவர் தங்கியிருந்தார். ஒருமுறை அவர் முன்னிலையில் ஜே. எம். நல்லசாமிபிள்ளை தலைமையிற் சைவசித்தாந்தச் சார்பின்படி 'அத்துவிதம்' என்னும் பொருள் பற்றிச் சுந்தரனார் பேசினார். முடிவில் ஜே. எம். நல்லசாமிபிள்ளை சுவாமிகளை வணங்கி விடைபெற்றார்; இவர் வணங்காமல் விடைபெற்றார். பிறகே, வணங்காமல் வந்தது வழியெல்லாம் வருத்தியது. வீட்டிலும் உணவிலும் உறக்கத்திலும் கருத்துப் பதியவில்லை. பொழுது விடிந்தபின்னர் குளித்துவிட்டுச் சென்று சுவாமிகளை வணங்கிவந்தார். பிறகே, மன அமைதியுற்றது.

இங்ஙனம் பன்னெறியினும் விரிந்துகிடந்த—துறவுள்ளம் நிறைந்த—இவருடைய சிறப்பியல்புகளைத் தனியே விரிக்கிற் பெருகும்.

# எ. பிற்காலம்

**குடும்பநிலை**

*இங்ஙனம் பல்லாற்ருனும் தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் பணிபுரிந்த தந்நலந் துறந்த தகையாளரான சுந்தரனாரின் ஊனுடல் வாழ்விற் பிற்காலப் பகுதியைச் சிறிது நோக்குவோம்.*

*முன்னர் இல்லறவாழ்விற்குத் துணையாக வந்த கமலாம்பிகையின் பிரிவு (18—9—1918-இல்) நேர்ந்ததை அறிவோம். பின்னர் இவர் திருமணத்தை நீக்கித் துறவியாகவே வாழ்க்கை நடத்திவந்தார். எனினும், தமையனார் குடும்பத்திலேயே இவர் ஒரு குழந்தைபோல ஓம்பப்பெற்ருர். தமையனார் திரு. வி. உலகநாத முதலியாருக்கு ஓர் ஆண்மகவும் இரண்டு பெண்மக்களும் இருந்தனர். அவர்களில் அருமைத் திருமகனாக இண்டர்மீடியட் வகுப்பிலே பயின்றுவந்த பாலசுப்பிரமணியன் என்னும் இளவல்-1928 அக்டோபர் இரண்டாம் வாரத்திலே தன் இருபத்துமூன்ரும் வயதிலே தன் அருமைத் தந்தையையும் சிறிய தந்தையையும் தாயையும் உடன் பிறந்தவர்களையும் வருத்தத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்தான். அது நம் சுந்தரனார்க்கு அளப்பருந் துன்பத்தை விளைத்தது. தமக்குப் பின்னர் நவசக்தியை ஏற்று நடத்துந் திறமையும் அதற்குரிய கல்வி கேள்வியும் உடையவனாகவும் குடும்பத்திற்கொரு செங்குருத்தாகவும் சுந்தரனாரின் கண்மணியாகவும் இருந்த மைந்தனை இழந்த கவலையை எவரே எடுத்துரைக்கவல்லார். அவருடைய உள்ள நெகிழ்வு 17—10—1928 நவசக்தியிதழில் வெளிவந்துள்ளது. 'தமையன் வழிப்போந்து, எனக்குப் பலவழியிலும் ஆறுதலளித்துவந்த ஒரு மைந்*

தனையும் இப்போது ஆண்டவன் அழைத்துக்கொண்டான். எச்செல்வமும் பெருத வறியேனுக்குத் தமையன் வழிக் கிடைத்த சேய்ச் செல்வமும் போயிற்று' என அவ்விதழிலே குறிப்பிட்டிருக்கிருர். அவ்விளைஞனைப் பற்றிய பிறகுறிப்புக்களைச் சுந்தரனுர் வாழ்க்கைக் குறிப்பிலே காண்க.

உலகில் அன்னையின் அன்புக்கு எல்லையே இல்லை. சுந்தரனுருக்கு ஐம்பத்தாறு வயது ஆகும்வரையில் அன்னையின் காவல் இருந்தது. சின்னம்மாள் என்னும் பெயரிய அவ்வம்மையார் 1921-ஆம் ஆண்டிலே தொழிலாளர் வேலை நிறுத்தத்தின்போது இரவு பன்னிரண்டு ஒருமணிவரை வழிமேல் விழிவைத்து இமையாது நோக்கிக் காத்திருப்பார். சுந்தரனுர் திருமணத்துக்கு முன் செய்த தொண்டினும் வாழ்க்கைத் துணைவியை இழந்த பின்னர்ச் செய்த தொண்டே மிகுதி. தம் இறுதிக்காலம் வரையில் தம் மைந்தருக்கு எண்ணெய் தேய்த்து நீராட்டிய அன்பும், சுந்தரனுர் ஆடையிலே சிறு மாசும் படியாமற் பார்த்துக்கொண்ட பரிவும் எவ்வாறியம்ப வியலும்? குடும்பத்திற்கே யன்றிச் சுற்றிலுமுள்ள குடும்பத்தார்க்கும் ஆதரவாகக் கற்பகத்தருவென விளங்கினர். சின்னம்மாள் சாகும்வரை நன்ருக இருந்தார். சாக இரண்டு நாள் இருக்கும்போதும் சுந்தரனுர்க்கு எண்ணெய் தேய்த்து நீராட்டினராம். அத்தகைய அம்மையார் தொண்ணூருவது வயதிலே தம் குடும்பக் கண்காணிப்பிலிருந்து ஓய்வுபெற்று (1939-இல்) இறைவன் திருவடியை அடைந்தார்.

தமையனுர்க்குப் பெண்மக்கள் இருவர் இருந்தனரென அறிவோம். மங்கையர்க்கரசி, புனிதவதி என்

னும் இருவருக்கும் தக்கவர்களாகப் பார்த்து மணம் புரிவித்து வீட்டிலேயே இருக்கச்செய்தனர் சுந்தரனூர். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளின் மழலையிலும் நடையிலும் ஈடுபட்டு உலகநாதரும், சுந்தரனூரும் தம் கவலையை மறந்திருந்தனர். பேரக் குழந்தைகளின் ஆர வாரம் சுந்தரனூர்க்கு அமிழ்தமாயிருக்கும்.

உடல்நிலை

பள்ளியிற் படிக்கும்போது இவரடைந்த நோய்களை முன்னர் அறிவோம். பிறகு, சிறந்த விளையாட்டுகளிலே ஈடுபட்டு உடல் வலிமையுடன் திகழ்ந்ததையும் உணர் வோம். பிறகு, ஒருமுறை தேசபக்தனை விடுத்து நவ சக்தி தொடங்குதற்கு இடைப்பட்ட நாட்களிலே கொடிய காய்ச்சலால் துன்புற்றார். அவ் வேளையில் சுந்தர னூரின் உணர்விழந்த நிலையிலிருந்து மீட்டுத் தேற்றியவர் டாக்டர் விசுவநாத ஐயர் என்பவர்.

1929-ஆம் ஆண்டின் தொடக்கத்திலே இருமல் ஏற்பட்டது. அதை உடனே தடுக்காவிட்டால் எலும் புருக்கியாய் முடியும் என்றனர். டாக்டர் கே. சம்பந்த முதலியார் நுரையீரலைப் படமெடுத்துச் சோதித்தார்; எவ்விதத் தவறும் இல்லை. எனினும், முன்னெச்சரிக்கை யாக இருக்கவேண்டுமென்று அவர் கூறியவாறு பல்லா வரத்திலே பதினைந்துநாள் படுக்கையில் இருந்தார். சில உணவு ஒழுங்கையுங் கடைப்பிடித்தார். பதினைந்து நாளைக்கப்புறம் அரைக்கல்லும் ஒருகல்லுமாகப் படிப் படியே நடந்துவந்தார். டாக்டர். கே. சம்பந்த முதலி யார் பதினைந்து நாள் கழித்து இவருடைய நுரையீரலை மறுபடியும் சோதித்தார். 'தங்கள் இருமல் கொடிய தன்று' என்றார். மற்றொருநாள் இவருடைய சிறுநீர்

சோதனை செய்யப்பட்டது. நீர்நோய் என அறிந்தனர். 'சர்க்கரையும் அரிசியும் கிழங்கும் தள்ளப்படல் வேண்டும்; கேழ்வரகு, கோதுமை, கீரை, காய்கறி கொள்ளப்படல் வேண்டும்' என உணவொழுங்கு செய்யப்பட்டது.

உடலோம்பலைப்பற்றிய நூல்களையும் உணவைப் பற்றிய நூல்களையும் சுந்தரனூர் ஆழ்ந்து படித்தார். அவற்றிற்கூறிய முறைகளைக் கடைப்பிடித்துச் சோதித்தார். இம்முறை இரண்டரை ஆண்டுகளே நிலைத்தது; பிறகு பறந்தது. வீட்டிலும், சொற்பொழிவுக்கெனச் செல்லுமிடங்களிலும் தமக்கெனத் தனியுணவு சமைப்பதை இவர் விரும்பாததே அதன் காரணமாகும். இவருக்கு நீர்நோய் இருப்பினும் சிறுநீர் அதிகம் போவதில்லை; சிறுநீரில் ஈ எறும்பு மொய்ப்பதுமில்லை; உண்டாகும் புண்களும் காலத்திலேயே ஆறிவந்தன; மிக்க பசிநோயும் உண்டாக்கவில்லை. இவையெல்லாம் நீர் நோயாளர்க்கிருக்குமென்பர். இவர் அதற்கு முற்றும் மாருக இருந்தார்.

இவ்வாறிருக்குந் திறத்தால் ஆங்கில மருத்துவ நண்பர் இது, 'டையாபிட்டிஸ்' அன்று; 'கிளாக்கோசூரியா' என்பர். யூனனி மருத்துவ நண்பர் ஒருவர், 'சிறுநீரில் இனிப்புக் கலந்திருப்பதை மட்டும் வைத்துக் கொண்டு நீர்நோய் என்பது தவறு' என்றூர். இவர் அவர்களுக்கு யாதும் கூறுவதில்லை; அந்நோயைப்பற்றிக் கவலையுறுவதும் இல்லை. இவருக்கு மாநாடுகளில் நீண்டநேரம் தலைமை வகித்து உட்கார்ந்திருக்கும் பழக்கம் இருந்ததனூலும் புகைவண்டிப் பயணங்களிலே உள்ள சில இடையூறுகளாலும் மலசலமடக்கும் கெட்ட பழக்கம் மட்டும் இருந்ததெனத் தம் வாழ்க்கைக்குறிப்

பிலே குறிப்பிட்டிருக்கிறார். மற்றும், வயது முதிர முதிர உறக்கம் குறைந்து வந்தது. இளமையில் நன்றாக உறங்கினார். பின்னர் அது ஆறு மணி நேரமாகி நாளடைவில் அதுவும் குறைந்தது. இரவு ஒரு மணிக்குமேல் உறக்கம் வரும்; மூன்று மணிக்குக் கலைந்துவிடும். இக்குறையே பிற்காலத்தில் இவருக்குக் கண்பார்வையைக் கெடுத்தது. இரவு விழிப்பு இயற்கைக்கு மாறுபட்டது.

மணிவிழா

1941-இல் திவான் பகதூர் தெய்வசிகாமணி முதலியாரின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் நடைபெற்ற போது, தெய்வசிகாமணி முதலியார், 'உங்கள் மணி விழா வேறு வழியில் நடக்கும்; நான் திட்டங் கோலியுள்ளேன்' என்பார்; இவர், 'மனைவி மக்கள் இல்லாத எனக்கு மணிவிழா எற்றுக்கு?' என மறுப்பார். பின்னர் திரு. வி. உலகநாத முதலியாரின் மணிவிழா நடந்தது. அப்போது சிலர், 'இவ்விழா திரு. வி. க. மணிவிழாவின் முன்னணி' என்று கூறினர். இம்மொழி சென்னையெங்கும் உலவியது. 1942-இல் சக்திதாஸ் சுப்பிரமணியம் 'நவசக்தி'யில் இவருடைய மணிவிழாவைக் குறித்து முரசு கொட்டினார். சுந்தரனார் உடனே நவசக்தி நிலையம் போந்து, 'என்னை அறியாமல் மணிவிழாவைக் குறிப்பிட்டதைப்பற்றி வருந்துகிறேன். இனி அதை வலியுறுத்தாமல் விடுக' என்று வற்புறுத்தினார். எவ்வாற்றானும் தமக்கொரு மணிவிழா நடைபெறலாகாதென்பது இவருடைய உட்கோள்.

இவரையறியாமலே திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தாமும் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரும் செயலாளராகவும், சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார்

தலைவராகவும், இராசா சர். அண்ணாமலைச் செட்டியார், சக்கரவர்த்தி-இராசகோபாலாச்சாரியார், ஈ. வெ. இராமசாமி நாயக்கர், எம். சி. ராஜா, கே. பாலசுப்பிரமணிய ஐயர், திவான் பகதூர்-டி. எம். நாராயணசாமி பிள்ளை ஆகியோர் துணைத்தலைவர்களாகவும் ஒரு குழு அமைந்தது. இதனை மீனாட்சிசுந்தரனார் இவரிடம் அறிவித்து, 'விழாவை நாங்கள் கொண்டாடிக்கொள்கிறோம்; அதை முற்படுத்தி ஒருவகையாகத் தமிழுணர்ச்சியை நாட்டில் உண்டாக்க விரும்புகிறோம். இதற்கு மறுப்பு வழங்குவது நன்றாயிராது' என்று ஆறுதல் கூறினர். தடுக்க வேறுவழி தோன்றாமல், 'எனக்கு எக்காரணம் பற்றியும் பணமுடிப்பு வழங்குதல் கூடாது' என்ற உறுதிமொழி மட்டும் வாங்கிக்கொண்டார். வேறென் செய்வது? நண்பர்களின் மனமறுக்கம் வேண்டாமென மணிவிழாவுக்கு ஒப்புக்கொண்டார். பொருள்விழையாத் துறவுள்ளத்தினாலே பணமுடிப்பை மறுத்தார். இந்நாளில் எவரே இந்நிலையில் உள்ளனர்? பொருளுக்காகவே எப்பணியையும் துறந்து விடுகின்றனரே பலரும்!

மணிவிழா நெருங்க நெருங்கச் சுந்தரனார் உள்ளம் குழம்பியது. 'கொண்டாட்டம் பேராவணமாகும். அவரவர் வாழ்த்திலே புகழுரைகள் பொங்கும். அவை நம் மனநிலையைக் குறைத்துவிடுமோ?' என்றேங்கினார். துறவுள்ளம் படைத்த இவர் பட்டினத்தார்நூலை ஓதி மனத்தை அடக்கி வந்தார்.

திரு. வி. உலகநாதமுதலியாரின் பேரன் இளம் பூரணன் பிரார்த்தனையை ஒட்டிச் சுந்தரனார் தம் தமையனார் குடும்பத்துடன் திருப்போரூர் சென்றார்.

அங்கேயே சைவசித்தாந்த மகாசமாசம் 23, 24—8—1943-இல் சுந்தரனருடைய மணிவிழாவைத் தொடங்கி வைத்தது. மடாதிபதி சிதம்பர சண்முக சுவாமிகள் ஓமக்கிரியை நடத்த முயன்றதைச் சுந்தரனர் வேண்டாமென்று கேட்டுக்கொண்டார்.

பின்னர், மணிவிழாக் கழகத்தார் சென்னை—சிந்தா திரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளியிலே 25—8—1943 முதல் ஐந்துநாள் விழா நிகழ்த்தினர். பின்னர், விழா பெருகிப் பெருவெள்ளமாகியது; தொழிற்சங்கங்களும் மாதர்சங்கங்களும் சமயச்சபைகளும் கல்விக்கழகங் களும் கல்லூரிகளும் பள்ளிகளும் கொண்டாடின. பத்திரிகைகள் பரப்பின; நூலகங்கள் நுவன்றன. சிறை கள், நகரசபைகள் எங்கும் மணிவிழா மயமாயின! விழாத்தொடங்கி ஆறு திங்கள் நடைபெற்றது! திரு. வி. க. 'தமிழ்நாடு' ஆயினர். நாடெங்கும் தமிழு ணர்ச்சி வீறிட்டது. மணிவிழாக் கழகத்தாரின் எண்ணம் நிறைவுற்றது! நம் நாட்டிலே சுந்தரனரின் மணிவிழாவைப்போல வேறெவருக்கு நடந்தது! தந்நலம் விழையாத் தகையாளர் இவரைப்போல் வேறெவர் இருந் தனர்? இருக்கின்றனர்! 'உள்ளத்தாற் பொய்யா தொழுகிய' சுந்தரனர் 'உலகத்தார் உள்ளத்துள் எல் லாம் உளர்' ஆனர்.

மணி விழாவுக்குப் பின் :

மணிவிழா நிகழ்ச்சிக்குப் பின்னர் மதுரையில் (27, 28, 29-12-1943-இல்) நடந்த சைவசித்தாந்த மகாசமாச ஆண்டு விழாவிற்குச் சுந்தரனர் தலைமை தாங்கச் சென் றார். புகைவண்டி நிலையத்திலே நண்பர்களால் வரவேற் கப்பெற்றார். சுந்தரனர் செல்லும் பல இடங்களிலும்

ஊர்வலம் நிகழ்வது வழக்கம். அவ்வாறே அங்கும் ஊர்வலம் திருஞானசம்பந்தர் மடத்தினின்றும் புறப்பட்டது. சீர்திருத்தம் விழையாச் சைவர்கள் இருக்கும் நாளிலே அங்கு இவருக்கும் மடத்துமரியாதைகள் நடந்தன.

இரட்டைக்குதிரை பூட்டிய சித்திரப் பூவண்டியிலே சுந்தரனார்; திருமுறை தாங்கிய யானை முன் சென்றது; வலத்திலும் இடத்திலும் யானைகள்; ஒட்டைகள், குதிரைகள்; பலதிறக்குடைக் குவியல்கள்; பல்லிய முழக்கம்; அன்பர் கூட்டம்; அடியவர் ஈட்டம்; நகருங் கொடிகளும் தோரணங்களும்; மதுரையெங்கும் திரட்சி; மக்கள் மனத்திலே மகிழ்ச்சி! சுந்தரனார் மனம் திருஞான சம்பந்தரின் திருவடிகளை எண்ணியது!

மூன்றுநாள் விழாவும் முடிந்தது. பிறகு, 30-12-1943-இல் மதுரையை விடுத்துக் காரைக்குடி வழியே அமராவதிபுதூரை அடைந்தார். தோழர் சொ. முருகப்பாவின் விருந்தினராய் ஒருநாள் தங்கி அவரால் நடத்தப்பெறும் மாண்டிசோரிப் பள்ளியைப் பார்வையிட்டார். அங்கு ஒரு கல்லூரி எழவேண்டுமென முன்னர் இவர் எண்ணியிருந்தார். அது ஒருவகையாக முற்றியதை எண்ணி வியந்தார். பின்னர் 31-12-1943; 1-1-1944-இல் நடைபெற்ற காரைக்குடி இந்துமதாபிமான சங்கத்தின் வெள்ளிவிழாவுக்குத் தலைமைவகித்தார். சங்கநிலையத்திற்குக் கால்கோள் விழாவும் நடத்தினார். 2-1-1944-இல் திரிசிரபுரத்திலே நகர 'அமெச்சுவர்' சங்கச் சார்பிலே ஈண்டிய பெருங் கூட்டத்திலே, 'தமிழ்ப் பற்று' என்னும் பொருள்பற்றிப் பேசினார். 3-1-1944 திருத்தவத்துறை என்னும்

லால்குடியிலே திருவள்ளுவர் கழகத்திலே தலைமை யேற்று மாணவர் அளித்த நல்வரவை ஏற்றுச் சென்னை யடைந்தார். மணிவிழாவுக்குப் பின்னர்த் தமிழுணர்ச்சி யும் சாதிமத வேற்றுமைக்குலைவும் கண்டு மகிழ்ந்தார்.

மேல் நிகழ்ச்சிகளைச் சுருக்கிக் கூறிவிடலாம். 12-2-1944-இல் திரு. வி. க. வாழ்க்கைக்குறிப்பு நூல் வெளியாயிற்று; பல திருமணங்கள் தமிழ் முறையிலே சுந்தரனாரால் நடைபெற்றன. 11-3-1947-இல் மில் தொழி லாளர் தொடங்கிய வேலை நிறுத்தத்தின் பயனாக 29-3-1947-இல் அந்தோணிபிள்ளை சிறைப்பட்டார்; சுந்தரனார் தொழிலாளர்சங்கத் தலைவரானார். அதனால் 9-6-1947 முதல் 7-7-1947 வரையில் அரசாங்கம் சுந்தர னாரை வீட்டிலேயே இருக்கவேண்டுமென்று காவல் செய்தது. 7-12-1947-இல் தமிழாசிரியர் துக்க வார இறுதிக் கூட்டத்திலும் மொழியாசிரியர் மாநாட்டிலும் கலந்துகொண்டார். 14-8-1948-இல் சென்னை மாகாணத் தமிழாசிரியர் மாநாட்டிலே பேராசிரியர் சுந்தரம்பிள்ளை யவர்களின் படத்திறப்புவிழா செய்தார்.

### புறக்கண்ணொளி குறைதல்

1949-ம் ஆண்டிலே தம் உடலை ஓம்பாமல் தொண்டு புரிந்த பலன்—இரவிலே உறக்கம் வராமல் விழித்திருந்த தன் பலன்—கிட்டியது. கண்களில் ஒன்று பார்வை யிழந்தது. இந் நிலையிலே எழுந்த நூல் 'பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி' என்பதாகும். 1950-இல் மற்றைக்கண்ணும் மறைவுற்றது! புறக்கண்கள் மறைந் தாலும் அகக்கண் திறந்தே ஒளிசெய்து வந்தது. அதனால் 'இருளில் ஒளி' 'அருகன் அருகே' என்னும் நூல்கள் தமிழுலகிலே மலர்ந்தன. 1951-இல், 'முதுமை உளறல்'

என்னும் நூல் வெளிவந்தது கண்ணொளி குறைந்து வீட்டிலேயே இருக்க நேர்ந்தும் அன்பர்களின் அன்பு விடவில்லை. 5-1-1952-ல் டாக்டர் தருமாம்பாள், மயிலை-சிவ-முத்து ஆகியோரின் மணிவிழாவில் தலைமையேற்று அவர்களுக்கு ஆசி கூறினார். 3-9-1952-இல் தம் எழுபதாம் ஆண்டின் துவக்கம் காரணமாக மாணவர் மன்றத்தின் மூலம் 'எழுபதின் எழுச்சி' என்னும் செய்தியை இளைஞருலகுக்கு விடுத்தார்.

எழுபதாம் ஆண்டு நிறைவுவிழா 24-8-1953 முதல் 16-9-1953 வரையில் சென்னை மாகாணம் முழுதும் கொண்டாடியது. இந் நிலையிலே சுந்தரனாரின் நண்பர்கள் சுந்தரனாருக்கு விருப்பமான பணியொன்றைச் செய்ய முன்வந்தனர். அது பாலசுப்பிரமணிய பக்தஜனசபை யிலே யாவர்க்கும் பயன்படும்படியாக ஒரு மண்டபம் கட்டுவதாகும். இக் கருத்துச் சுந்தரனார்க்குப் பால சுப்பிரமணிய பக்தஜன சபையின் தொடக்ககாலத்தி லேயே இருந்தது. அப்போது ஒருநாள் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் சுந்தரனாரிடம் உரையாடிக்கொண்டிருக்கும்போது தமக்கு இக் கருத்திருப்பதைக் கூறி, 'உரிய இடம் இருக் கிறதா?' என்று வினவினார். 'சபைக்குரிய நிலப்பரப்புப் பெரியது ; மண்டபம் எழுப்பலாம்' என்று சுந்தரனார் கூறினார். அணித்தே நிகழ்ந்த ஆண்டுவிழாவிலே இதனைக் குறிப்பிட்டபொழுது கூட்டம் மகிழ்ச்சி யடைந்தது. எனினும், 'பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் நிலத்தையும் நிலயத்தையும் தியோசாபிகல் சங்கத்தில் சேர்க்கத் திரு. வி. க. முயல்கிறார்' என்னும் வீண்புரளி கிளம்பிற்று. மற்றும் 'பாலசுப்பிரமணிய பக்தஜனசபை சைவத்தை இழந்து சமரசம் பெறப் போகிறது' என்றும் வாய்புலம்பினர். எனவே, மண்டப

முயற்சியைச் சுந்தரனார் கைவிட்டார். இவருள்ளம் 'வலிய வந்த சீதேவியை உதைத்துத்தள்ள' நேர்ந்ததைக் குறித்து வருந்தியது.

ஆகவே, திரு. வி. கலியாணசுந்தரனாரின் நண்பர்களிற் சிலர் திரு. வி. க. மணிமண்டபம் என ஒன்று நிறுவ 6-9-1953-இல் முடிவுசெய்தனர். அம்முயற்சி மேலும் நடைபெற்றுப் பொருள்திரட்டி வருகின்றனர்.

புகழுடம்பு

சுந்தரனார்க்கு எழுபத்தோராவது ஆண்டு துவங்கியது. பல நாட்களாகச் சுந்தரனார் படுக்கையிலேயே இருந்தார். கண்ணொளி மழுங்கிப் படுக்கையிலே இருக்கும் நிலைநேர்ந்தது குறித்துத் தமிழ்நாடடைந்த வருத்தம் அளப்பிலது. சுந்தரனார்க்கும் வருத்தம் இருந்ததென்பதை அக்காலத்தில் எழுதிய நூல்களின் முகவுரைகளிலே காணலாம். என் செய்வது! 'ஊழிற் பெருவலி யாவுள' என்பது பொய்யாமொழி. தமிழ்நாடு செய்த தவக்குறை வந்து குறுக்கிட்டது. அண்ணலார்க்குத் தமிழன்னையைச் சூழ்ந்துள்ள தூறும் புற்றும் நீங்கி, அவள் முகத்திலுள்ள குறு மறுக்கள் விலகித் திகழொளியுடன் அரியணையிலே வீற்றிருக்கும்போது கண்டு கண்களிக்க வேண்டுமென்னும் பேரவாமிகுதி. அத்தகைய ஆவல் நிறைவேறுமலே தமிழன்னையைக் காக்கத் தக்கார் பலருளர் என்னும் அமைதியான எண்ணம் எழாமலே, பணிபுரிதற்குப் பயன்பட்ட ஊனுடலை விடுங் காலம் நெருங்கியது! புலவராயிருந்தும் பொருளுடையார் பின்செலாப் பெருந்தகையாளர்—தொழிலாளராயிருந்து தொண்டு புரிந்ததனாலே தம் ஊனுடலின் ஆற்றலை வழங்கிய அண்ணலார் — எழுத்தாளராயிருந்து

எண்ணற்ற எழுத்தாளரை நாட்டிலே தோற்றுவித்த எந்தையார்—தமிழ்க்கருவூலம்—தமிழன்னையின் தவப் புதல்வர்—தம் ஊனுடலின் ஓயா உழைப்பை நீத்துத் தம் இல்லத்திலே 17-9-1953 இரவு 7-45 மணிக்கு இயற்கைப் பெருவாழ்விலே இன்புற்றார்.

தமிழ்நாடடைந்த துக்கத்தைச் சாற்றுவதெங்ஙன்! இன்னொரு திரு. வி. க. எங்ஙனம் தமிழ்நாட்டுக்குக் கிடைப்பார்! தொழிலாளருலகமும் புலவருலகமும் எழுத் தாளருலகமும் சீர்திருத்த உலகமும் தம் தலைவரை யிழந் தன! வேறொரு தலைவர் இவர்போற் கிடைப்பாரோ! தமிழ்ப்பணியைத் தம் பொருளீட்டும் பணியாகவும், தொழிலாளர் பணியைத் தம் புகழீட்டும் பணியாகவும், சீர்திருத்தப் பணியைத் தம் செல்வஞ் சேர்க்கும் பணி யாகவும் கொண்டுள்ள இத்தமிழுலகத்தே தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகிய திரு. வி. க. போன்றவர் கள் தம் பிரிவினாலே தமிழ்நாட்டுக்குப் பெருங்கவலையை நல்கி விடுகின்றனர்.

பளிங்கனைய தூய உள்ளத்துடன் எளிய வாழ்வும் உடையுங் கொண்ட தூயமுனிவராக விளங்கிய சுந்தரனார் தாம் இறைவனடி நீழல் எய்துதற்கு இருநாள் முன்னரே தம் நினைவை இழந்திருந்தார்.

மறைந்த அண்ணலார்க்குத் தம் இறுதி வணக்கத் தைச் செலுத்த அன்றிரவே திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், டாக்டர் மு. வரதராசனார். திரு. ச. சச்சிதா னந்தம் பிள்ளை முதலியோர் வந்து கலங்கித் தம் அரிய செல்வத்தை இழந்ததற்காக வருந்தி வணங்கினர். தேவார திருவாசகங்கள் இரவெலாம் பல அன்பர்கள் ஓதியவண்ணம் சூழ்ந்திருந்தனர். மறுநாட் காலையிலே

சென்னை மாநில முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார் தம் இளமைத் தோழரை வந்து கண்டு தம் இறுதி வணக்கஞ் செலுத்திச் சென்றார். உடனிருந்து தொண்டாற்றிய டாக்டர். பி. வரதராஜலு நாயுடு வந்து கண்டு மறுகி வணங்கினார். மற்றும் பல அரசியல் தலைவர்களும் புலவர்களும் வந்து தம் இறுதி வணக்கத்தைச் செலுத்தினர். தொழிலாளர்கள் திரண்டு வந்து கலங்கிக் குமுறினர்.

தொழிலாளர்களின் அன்பை எங்ஙனம் புகல்வது! திரு. வி. கலியாணசுந்தரனாரின் தூய ஊனுடலைக் கறுப்பு ஆடையிலே மூடி ஒரு மோட்டார் வானிலே கிடத்தித் தொழிலாளர் கழகத்திற்குப் பிற்பகல் ஒரு மணிக்கே தொழிலாளர்கள் கொண்டு சென்றனர். அங்கே தொழிலாளர் பெருங்கடல் குமுறிய நிலையை எங்ஙனம் இயம்புவது! பின்னர் மூன்றுமணிக்கு மலர் மாலைகளாலே நிறைந்த சுந்தரனாரின் சுந்தர உடலை அம் மோட்டாரிலேயே எல்லோருங் காணும்படி அமைத்து ஊர்வலமாகப் புறப்பட்டனர். பல தொழிற்சங்கங்களின் கொடிகளும் பிறகழகங்களின் கொடிகளும் மிடைந்தன. பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டனர்.

ஊர்வலம் பெரம்பூர் பாரக்ஸ் ரோட்டிலிருந்து புறப்பட்டு, வேப்பேரி வழியாகவந்து, சிந்தாரிப்பேட்டை லெவல் கிராசிங் வழியாகப்போய் நேப்பியர் பூங்காவையடைந்தபோது, வானமுந் தன் வருத்தத்தைத் தன் மழைநீராகிய கண்ணீரால் அறிவிக்கக் குமுறி ஆர்த்துக் காற்றுடன் கலந்து பெய்தது. கூட்டம் வானின் இரக்கத்திற்கு வியந்து சிறிது நின்றது. பிறகு, மவுண்ட் ரோடு, ஜெனரல் பீட்டர்ஸ் ரோடு வழியாக வந்து மௌபரீஸ்

ரோட்டிலுள்ள பாலசுப்பிரமணிய பக்தஜன சபையை அடைந்தது. அங்குச் சிறிதுநேரம் அன்பர்களின் பார்வைக்காக வைக்கப்பெற்றது. அப்போது சுந்தரனாரின் கெழுதகை நண்பர் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் முருகப்பெருமானுக்கு ஆரத்தி செய்த கற்பூர ஆரத்தியை எடுத்து வந்து சுந்தரனாரின் ஊனுடலின் முன் ஆரத்தி செய்தார்; சுதேசமித்திரன் ஆசிரியர் திரு. சா. நடேசன் கொடுத்த கங்கை நீரைத் தெளித்தார்; திருவட்டீச்சுவரர் கோயிலில் இருந்து வந்த திருநீற்றை நெற்றியில் இட்டார். அவையார் சார்பிலே மலர்மாலையொன்றையும் சார்த்தினார். இங்குத் தமிழ்நாட்டுக் காங்கிரசு அவையினரும் மலர்மாலை சார்த்தினர்.

பிறகு திரு. வி. க. ஊனுடல் தன் பயணத்தை நன்காடு நோக்கித் தொடங்கியது. ஈரோட்டிலிருந்த ஈ. வெ. ரா. அவர்கள் திரு. வி. க. மறைவையறிந்து விரைந்து வந்து தம் நண்பரின் இறுதிப் பயணத்தை வழிகூட்ட உடன்போந்தார். ஊர்வலக் கூட்டத்தின் நீளம் ஒருகல் தொலைவு நீண்டிருந்தது. போலீஸ் வான்கள் தொடர்ந்து சென்றன. மாலை 6-45 மணிக்கு மயிலை நன்காட்டை மணவழகர் அடைந்தார். கூட்டத்தின் நெருக்கம் செப்பற்கியலாதது! மழை மிகுதியால் நன்காடெங்கும் சேறும் நீருமாக இருந்தது. எனினும், மக்களின் திரட்சி கணக்கில் அடங்காதது. எப்பக்கமிருந்தும் வருவோரெல்லாரும் திரு. வி. க. ஊனுடலைக் கண்டு தம் இறுதி வணக்கத்தைச் செலுத்தவே வந்தனரென்று தெரிகிறது! எவர்க்கும் கிடையாத சிறப்பு நம் சுந்தரனார்க்கே கிடைத்தது!

மக்கள் திரள் இருமருங்கும் திரண்டிருக்க இடையிலிருந்த குறுகிய நெறியிலே சுந்தரனாரின் உடல் சென்று

சமத்தின்மீது அமர்ந்தது. எல்லோரும் தம் இறுதி வணக்கஞ் செலுத்தினர். திருவாசகத்திலிருந்து சிவ புராணத்தை ஓதியவுடனே உடலத்திற்குக் கங்கைநீர் தெளித்துத் திருநீறிட்டு மலர்மாலை சார்த்திக் கர்ப்பூரம் சந்தனக்கட்டை முதலியன அமைத்தனர். பிறகு, சுந்தர னார் கூறியிருந்தவாறே இறுதிக்கடன் சடங்குகள் எவையு மின்றி மக்களின் கண்ணீரும் மலர்மாலையும் அணிவித் துச் சுந்தரனாரின் பெரிய தந்தையார் மகனார் சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களாலும் மற்றவர்களாலும் இடப்பட்ட தீ நம் சுந்தரனாரின் சுந்தர ஊனுடலைத் தழுவியது. 'திரு. வி. க. புகழ் ஓங்குக!' என்னும் ஒலி வானளாவியது.

மற்றைநாட் காலையில் திரு. வி. க. அவர்களின் ஊனுடல் தந்த சாம்பரை ('எழில்' என்னும் இதழை நடத்திய தட்சிணாமூர்த்தி என்பவரையுள்ளிட்ட குழுவி னர்) கொண்டு சென்று கடலிடைக் கரைத்து மறைத் தனர். திரு. வி. கலியாணசுந்தரனார் தம் ஊனுடலை விட்டுத் தம் பல நெறிப்பட்ட அன்பர்களினுடைய—தொண்டர்களுடைய—நெஞ்சங்களைக் கோயிலாகக் கொண்டு சமரச சைவ சன்மார்க்கப் பேரிறைவராகிய கூத்தப்பெருமானின் திருவடி நீழலிலே அமைதி பெற்றார்.

இரக்கம்

சுந்தரனாரின் பிரிவையறிந்து செய்தித்தாள்களும் கழகங்களும் பிற நிலையங்களும் தம் வருத்தத்தை யறி வித்து மாழ்கின.

சுதேசமித்திரன்

"தமிழகத்தில் அரசியல், சமூக, சமய இலக்கியத் துறைகள் முதலியவற்றில் எதை எண்ணினாலும், திரு.

வி. க. பெயரே முன்வந்து நிற்கும். ஏழைகள், தொழிலாளர்கள் துன்பத்தைக் கண்டு உள்ளம் உருகி, அதைத் துடைக்க அவரைப்போல் பாடுபட்டவர் வெகு சிலரே. காந்தி சீடர்களில் அரசியல்—சமூக இனங்களில் அவரது தத்துவத்தைக் கடைப்பிடித்தவர்களைவிடக் காற்றிற் பறக்கவிட்டவர்களே பெரும்பாலோர். இறுதிவரை அன்பு—சத்திய நெறிகளினின்றும் அணுவளவும் பிறழாது வாழ்ந்த பெருமை திரு. வி. க.வுக்கு உண்டு," என்று வரைந்தது.

**செந்தமிழ்ச் செல்வி**

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகச்சார்பிலிருந்து வெளிவரும் 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் திங்கள் இதழின் உஅ-ஆம் சிலம்பு உ-ஆம் பரல் 'திரு. வி. க. நினைவு மல'ராக வெளிப்போந்தது. அதன் தலையங்கத்தில் திரு. வி. க. அவர்களின் அரும்பண்புகள், தொண்டுகள் குறித்து வாழ்க்கைச்சுருக்கத்துடன், "இத்தகைய தமிழ்ப்பெருமகனார். தன்னலந்துறந்த தனிப்பெருந்தகை, மண் பொன் பெண் என்னும் மூவ்வகைப்பற்றும் முற்றுக் கடிந்த முனிவர், அந்தணாளர், ஐயகோ! மறைந்தார்! தமிழோவியம் தணந்தது! அரசியல் விளக்கம் அணைந்தது! அவரை இனிக் காணும் பேறற்றோம்," என வரைந்துள்ளது.

**கல்கி**

"தமிழுக்கும் தமிழ்எழுத்தாளர் குலத்திற்கும் தந்தையாக இருந்தார்; தொழிலாளர் குலத்துக்குத் தாயாக விளங்கினார்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகிய திறத்தால் அந்தணர் திலகமாகத் திகழ்ந்தார்; 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற திரு

வாக்கை வாழ்க்கையில் கடைப்பிடித்து நடந்தார் ; தமக் கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்தார். 'அன்பே சிவம்' என்ற உண்மையில் வாழ்க்கையெல்லாம் திளைத் திருந்தார்; இன்று அன்பிலும் சிவத்திலும் இரண்டறக் கலந்துவிட்டார் திரு. வி. கலியாணசுந்தர முனிவர்.

இயற்கையோ டியைந்த இன்பத்தையும் இன் பத்தோ டியைந்த இயற்கையையும் பற்றி இடைவிடாது சிந்தித்தும் பேசியும் எழுதியும் வந்த ஞானி, இன்று இயற்கையோடு இயைந்து இன்பத்தோடு ஒன்றிவிட் டார்.

'.......ஈந்தவர் அன்றி இருந்தவர் யாரோ ?' என்றார் கம்பர். தமிழுக்கும் தமிழ்மக்களுக்கும் தம்மையே ஈந் தவரான திரு. வி. கலியாணசுந்தர வள்ளலை இறந்தவ ரோடு சேர்க்கமுடியுமா ? அப்படியானால் இங்கு இருந் தவர் வேறு யார் ?'' என்று எழுதியது. இவ்வாறே பல பத்திரிகைகளும் தம் இரங்கலுரையை வரைந்தன.

21-9-1953-இல் பாலசுப்பிரமணிய பக்தஜனசபை யில் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் நடந்த சாலவும் பெரிய இரங்கற் கூட்டத்திலே சுதேசமித்திரன் ஆசிரியர் சீ. ஆர். சீநிவாசன் தலைமையேற்றுப் பேசியபோது தமக்கும் சுந்தரனாருக்கும் உள்ள நட்பினை விளக்கி, "அவர், உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் தத்தம் செய்து, அதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து சென்றார். அவர் காட்டிய சீரியவாழ்வை எந்த அளவிற்கு நாம் பின்பற்ற முடியும் என்பதற்கு அவரது வாழ்வைச் சான்றாகக் கொள்ளவேண்டும். தமிழகத்திற்குச் செழிப்பும் செல்வாக்கும் ஏற்படுத்திய உத்தமரை என்றென்றும் அகக்கண்முன்

வைத்து அவரைப்போல் பணியாற்றத் தூண்டுதல் ஏற்படுமென்று நம்புகிறேன்," என்றுரைத்தார்.

கனம் அமைச்சர் பக்தவத்சலம்

"திரு. வி. க. தமிழ் எழுத்தாளர்களில் தலை சிறந்தவர். ஆனால், அவர் எழுத்தாளர் மட்டுமல்ல ; சிறந்த அரசியல் ஞானி. சமதர்மவாதி ; சீர்திருத்தவாதி. சமரச சன்மார்க்கத்தை மக்கள் பின்பற்றப் பாடுபட்டார்........அபிப்பிராய பேதம் உள்ளவர்களிடம் அளவளாவிப் பேசமுடியும் என்பதைத் திரு. வி. க. வாழ்க்கையில் காட்டினார்."

திரு. நாரண துரைக்கண்ணன்

"வேறு துறையிலுள்ளவர்கள் எழுத முன்வந்தபோது அவர்களை எழுத்தாளர் உலகில் வரவேற்றுக் கவுரவித்துப் பாராட்டினார் திரு. வி. க., எழுத்தாளர்களையும், பத்திரிகைகளையும் அவர் ஆதரித்தார். அவரது பரந்த நோக்கத்தை அறியாதவர்கள் 'அவர் எல்லாக்கூட்டங்களிலும் கலந்து கொள்கிறார்' என்று சொல்வார்கள். ஆனால், அவர் எப்போதும் தமக்கென உள்ள சிறந்த கொள்கையை விட்டுக் கொடுக்கமாட்டார். மார்க்ஸீய தத்துவத்திற்குக் காந்தீய வழியிற் புதிய நோக்குக் கொடுத்தார்."

திரு. சக்திதாசன் சுப்பிரமணியம்

திரு. வி. க. நடமாடும் தமிழ்நாடு. நடமாடும் தமிழ்க் கலைக்கூடம். அவர் இறந்திருக்கலாம். ஆனால், நமது உள்ளத்தில் இருக்கிறார். தமிழனும் தமிழ்நாடும் உள்ளவரை அவரை மறக்கமுடியாது. அவர் பணத்தை உதறித்தள்ளியவர். ஏழையாக வாழ்ந்து ஏழைக்காகவே தொண்டுசெய்து ஏழையாகவே இருக்கிறேன் என்பதில்நாட்டங் கொண்டு வாழ்ந்து வந்தார்; கொள்கைக்காக அவர் வாழ்ந்தார். வறுமை மிகுந்த காலத்திலும் பணத்தை நாடியதில்லை.

அவரது கொள்கை வாழையடி வாழையாக வாழ்ந்து வரும்.''

திரு. பி. ஸ்ரீ.

"பேனு மன்னருக்குமன்னன், அவர் சிறந்த பக்தன். அவர் சாகவில்லை ஏனெனில், பக்தனைக்கண்டு சாவுதான் செத்துப் போகிறது. அவர் வாழ்ந்துவந்த புதுப்பேட்டை விலாசம்தான் மாறியிருக்கிறது. புதுவிலாசம் மக்கள் உள்ளம்...அவர் உண்மையான அந்தணர்....... திரு. வி க 'வெல்லும் சொல்வல்லார்' அவர் எழுத்தாளர் மட்டுமல்ல ; பணியிலும் மேதை.''

இவ்வாறு பல கழகங்களும் தம் இரங்கற்கூட்டத்தை நடத்தித் தம் வருத்தத்தை அறிவித்தன.

திரு. வி. க. நண்பர்களில் ஒருவரான திருவெண்ணெய் நல்லூர் தமிழ்ப்பண்டிதர் திரு. தி. வடிவேலுமுதலியார் தலைமையில் நடந்த இரங்கற்கூட்டத்தில் வாசிக்கப்பட்ட இரங்கற்பாக்களில் ஒன்று :—

"அன்புடைய கலியாண சுந்தரப்பேர்
ஐயாரின் அரிய வாக்கும்
இன்புடைய தமிழ்நடையின் எழில்தனையும்
இனியாங்கள் எங்கண் காண்போம்
வன்புடனே தொழிலாளர் வாழ்வுபெற
உழைத்திட்ட வள்ளால் நீயும்
பொன்புரையும் வாய்திறந்து போங்தொருசொல்
புகலாயோ புலவ ரேறே.''

கோவைநகர் தொழிற்பிரமுகர் திரு. ஜி. டி. நாயுடு தாம் அனுப்பிய இரங்கலுரையில், "விவேகம், விடாமுயற்சி, கட்டுப்பாடு, நியாயத்தன்மை ஆகிய குணங்களுக்கு

எடுத்துக்காட்டாக விளங்கினார். இந்தக் குணங்களைத் தமிழ்மக்கள் போற்றி வளர்க்க வேண்டும்'' என்றார்.

திரு. வெ. சாமிநாத சர்மா. தினமணிக்கதிரில் எழுதிய 'தமிழ்முனிவர் திரு. வி. க,' என்னும் கட்டுரையிலே, "திரு. வி. க. என்னும் பெயரைத் தாங்கிய அந்த உருவம் இன்று நம்மிடையே இல்லை. ஆனால், தமிழ் உள்ளளவும் திரு. வி. க. என்ற அந்த நான்கு எழுத்துக்களும் அவை குறிக்கும் அந்த மகானின் புகழைப் பறைசாற்றிக்கொண்டிருக்கும். மனிதனுக்குச் சாவு உண்டு; மகானுக்கு ஏது?" என்று குறிப்பிட்டார்.

இனி, நாம் திரு. வி. க. ஆன்மா அமைதிபெறச் செய்ய வேண்டியபணி தமிழன்னையைத் தமிழ்நாட்டின் அரியணையில் இருத்தவும், சமரச சன்மார்க்க நெறி தழைக்கவும் செய்யவேண்டியவைகளே ஆகும். வாழ்க திரு. வி. கலியாணசுந்தரனார் வண்புகழ்!

930
031:6M871W
J6
EXTENSION LIBRARY
6 DEC 1957
MADURAI
UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS